திருக்கோயில்

மார்ச் - ஏப்ரல் 1985 விலை ரூ. 4-00

"இராஜ ராஜேஸ்வர விஜயம்" என்ற நாடகத்தில் ஒரு காட்சி.

முகப்பு

முன் அட்டை : தெய்வச்சேக்கிழார் திருநாள் விழா அலங்கார வளைவின் அழகியத் தோற்றம்.

பின் அட்டை : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு. இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புரை ஆற்றும் காட்சி.

திருக்கோயில்

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 27	திருவள்ளுவர் ஆண்டு 2016 ரக்தாட்சி ஆண்டு பங்குனி குரோதன ஆண்டு சித்திரை மார்ச், ஏப்ரல் 1985 விலை ரூ. 4-00	மணி : 3, 4

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம். ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம் சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா
உள்நாடு ரூ 24.00
வெளிநாடு ரூ 36.00

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும். தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பொருளடக்கம்

தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை.

மானம் காத்த மகாகவி சேக்கிழார்
—மாண்புமிகு டாக்டர் ம.பொ. சிவஞானம்

சேக்கிழார் அமைச்சர் ஆன வரலாறு
—அருளரசு கிருபானந்த வாரியார்

திருவள்ளுவர் காட்டும் பெண்வழிச் சேறல்
—டாக்டர் பொற்கோ

திருநாளைப் போவார்
—பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம்

சேக்கிழார் பெரிய புராணம் பாடிய வரலாறு
—டாக்டர் மா. இராச மாணிக்கனார்

தெய்வச் சேக்கிழார் திருநாள் விழா நிகழ்ச்சிகள் தொகுப்பு
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

பழநிப் பாமலர்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவில்

அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய நிறைவு விழாச் சிறப்புரை....

சிறப்புமிக்க இந்தச் சேக்கிழார் விழாவிற்கு தலைமை ஏற்றிருக்கின்ற சட்டமேலவைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்களே! அன்பிற்குரிய பேராசிரியர் அ.ச ஞானசம்பந்தம் அவர்களே! அருமை நண்பர் பேராசிரியர் செல்வ கணபதி அவர்களே! தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் நாகசாமி அவர்களே! அறநிலையத்துறைச் செயலர் அவர்களே! அறநிலையத்துறை ஆணையர் அவர்களே! இந்த அவையிலே நிறைந்திருக்கின்ற சான்றோர்களே! தமிழ்ப்பெருமக்களே! தாய்மார்களே!

மாணவனைப்போல் கவனித்து வருகிறேன்

கடந்த 2 நாட்களாகத் தமிழக அரசினுடைய அறநிலையத்துறையின் சார்பில் சேக்கிழார் விழாவைச் சிறப்பாகத் தொடங்கி நிறைவுபடுத்துகின்ற இந்த நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டு இருக்கிறேன். இதற்குப்பிறகு மிகச்சிறந்த இராஜராஜசோழனைப் பற்றிய ஒரு வரலாற்று நாட்டிய நாடகமும் நடக்க இருக்கிறது. ஆகவே நான் நீண்ட நேரம் இங்கே எந்தக் கருத்துக்களையும் சொல்ல விரும்பவில்லை. சேக்கிழாரைப் பற்றி இங்கே பல்வேறு அறிஞர்பெருமக்கள் எடுத்துச்சொல்லியதற்குப் பிறகு இவைகளை எல்லாம்தாண்டிச்சொல்லுகின்ற ஆற்றலையும் நான் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

தமிழகத்தினுடைய அரசுப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுடைய ஒப்புதலோடு இந்த அறநிலையத் துறையினுடைய பணிகளை நான் நிறைவேற்றிக்கொண்டு வருகிற நேரத்தில் சேக்கிழாருக்கு இப்படிப்பட்ட ஒருவிழா எடுக்கவேண்டும் என்கிற ஒரு உணர்வு தோன்றியது. அந்த உணர்வு எந்த அடிப்படையிலே தோன்றியது என்பதை நான் இப்போது எடுத்துச் சொல்வதற்கு விரும்பவில்லை. ஆனால் அந்த உணர்வு எந்த அடிப்படையிலே வளரவேண்டும் என்று நான் தெரிந்துகொள்வதற்காகத் தான் நேற்றுக் காலையிலேயிருந்து பல்வேறு வகையிலே அறிஞர் பெருமக்களை இந்த நிகழ்ச்சிகளிலே பங்கேற்கவைத்து அவர்களுடைய கருத்துக்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு வருகின்ற மாணவனாக இங்கே நான் கலந்துகொண்டிருக்கிறேன். ஆகவே சேக்கிழார் பெருமானுக்கு நாம் விழா எடுத்ததன் மூலம் தமிழ்நாட்டினுடைய எதிர் காலத்தில் நம்முடைய சமுதாயம்-சமுதாயத்திலே வாழ்கின்ற பெருமக்கள் எந்த அடிப்படையில் தம்முடைய பயணத்தைத் தொடங்க வேண்டும் என்பதற்குச் சான்றோர்கள் வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

நேற்றுக்காலையில் சேக்கிழார் பெருமானைப் பற்றி மிக அதிகமாகத் தெரிந்த அறிஞர்பெருமக்கள் நம்முடைய முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் கருத்துக்களை வழங்கினார்கள். அதைப்போலவே நேற்று மாலையிலே சைவ சமயத்திற்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற திருமடங்களின் தலைவர்கள் வணக்கத்திற்குரிய சாந்தலிங்க அடிகளார், சுந்தர அடிகளார் நம்முடைய திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளைப்போன்றவர்கள் நேற்று சேக்கிழாரை நம்முன்னாலே கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

ஆண்களை ஆண்மணிகள் என்று அழைப்பதில்லை

இன்று காலையில் சேக்கிழார் எந்தத்தமிழ் நாட்டினுடைய பண்பாட்டை எடுத்து உலகத்

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய சிறப்புரையில் திருஞான சம்பந்தரே பாரதியாகவும் திருநாவுக்கரசரே வ.உ.சி.யாகவும் வந்து மறுபடியும் பிறந்தார்களோ எனக் குறிப்பிடுவது சிந்தனைக்கு விருந்தாகும் சிறந்த செய்தி.

திற்கு விளக்கினார் என்று அறிஞர் பெருமக்கள் தெரிவிக்கிறார்களோ அந்தப் பண்பாட்டிற்கு நிலைக்களனாக விளங்குகின்றவர்களே தமிழ் நாட்டுப் பெண்மணிகள் தான் என்கின்ற அந்த சிறப்பை எடுத்துவிளக்குகின்ற வகையில் இன்று காலையிலே சிறந்த பெண்மணிகள் -ஏனென்றால் இன்று காலையிலே தலைமையேற்ற நம்முடைய டாக்டர் சிவபிருந்தா தேவி அம்மையார் அவர்கள் உரிமையோடு எடுத்துச்சொன்னார்கள். ''ஆண்களை ஆண்மணிகள் என்று யாரும் சொல்வதில்லை, பெண்களைத்தான் பெண்மணிகள் என்று சொல்லுகிறார்கள்'' என்கிற அந்த உரிமையோடு டாக்டர் சிவபிருந்தா தேவி அம்மையார் அவர்கள்குறிப்பிட்டார்கள். அவர்கள் தலைமையில் மிகச்சிறந்த சான்றோர்களாக விளங்குகின்ற பெண்மணிகள் தங்களுடைய கருத்துக்களைக் காலையிலே எடுத்து வைத்தார்கள்.

புதியநோக்கு நமக்கு வேண்டுமோ வேண்டாமா?

இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நிறைவு விழாவிலே நான் இந்தச் சேக்கிழாருடைய விழா எப்படி தொடங்கி எப்படி முடியவேண்டும் என்று விரும்பினேன் என்பதை இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகள் உங்களுக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசின் சார்பில் எங்களுடைய செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநராகவும் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் விளங்குகின்ற டாக்டர் நாகசாமி அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார். அந்தத் தொடக்க உரையை அவர்கள் ஆற்றவேண்டும் என்று நான் விரும்பிதற்குக் காரணம், சேக்கிழாரை இந்தச் சமுதாயம்எந்தக்கண்கொண்டு பார்க்க வேண்டும், புதிய நோக்கு நமக்கு வேண்டுமா வேண்டாமா? என்கின்ற அந்த உணர்வுகளை நம்முடைய தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அளிப்பார்கள் என்ற அந்த நம்பிக்கையிலே தான் அவரைத்தொடக்க உரை ஆற்றவேண்டுமென்று அழைக்கச்சொன்னேன். அவர்கள் நம்முடைய சேக்கிழார் பெருமானை உலகத்தின் தலை சிறந்த வரலாற்றாசிரியர்களில் முதன்மையான ஒரு வரலாற்றாசிரியராக-ஒரு வரலாற்று ஆசிரியன் ஏதோ வறட்டுத்தத்துவங்கள், செய்திகளை மாத்திரமே தொகுத்துத்தருவான் என்று இருக்கின்ற அந்த இலக்கணத்தையே மாற்றி ஒருவரலாற்றை மிகச்சிறந்த காப்பியமாக, சுவைமிக்கக்காப்பிமாக வடித்துத்தர முடியும் என்று ஒரு காப்பியத்தை வழங்கிய வரலாற்றாசிரியர் சேக்கிழார் பெருமான் என்பதை நம்முடைய தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கள் இங்கே எடுத்துக்கூறி விழாவைத் தொடங்கி வைத்தார்கள். அந்தப்பாதையிலே நம்முடைய பேராசிரியர் செல்வகணபதி அவர்கள் அந்த வரலாறு தமிழகத்தினுடைய வரலாறாக - தமிழ்ச் சமுதாயத்தினுடைய வரலாறாக எப்படிஅமைகிறது என்பதை எடுத்துக்கொண்டு அதிலே நம்முடைய பண்பு எப்படி மிளிர்ந்து விளங்குகிறது என்பதற்கு அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தினுடைய பண்பைச் சேக்கிழார் பெருமான் எப்படி காட்டியிருக்கிறார் என்று எடுத்துச்சொன்னார்கள்.

பாலபாடம் கற்றுக்கொள்ளத் தொடங்கினேன்

அதற்குப்பிறகு இலக்கியத்துறையிலேமிகச் சிறந்த ஆய்வாளராகவும் பேரறிஞராகவும் விளங்குகின்ற நம்முடைய பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள்- அவர்களுக்கு எங்கள் எல்லோரையும் விட மிக அதிகமான உரிமை - காரணம் அவருடைய தந்தையாரும் ஒரு சிவநெறிச் செல்வர், மிகச் சிறந்த பேரறிவாளர், அவருக்குப்பிள்ளையாகப் பிறந்தவர் - ஞானசம்பந்தம் என்ற பெயரையே பெற்றுக்கொண்டு இருக்கிறார். அவர் இன்றைக்குப் புதிய நோக்கிலே கம்பனை ஆராய்கிறார், தமிழ் இலக்கியங்களை ஆராய்கிறார். சேக்கிழார் பெருமானையும் ஒருசிவ வழிவந்த சைவ வழிவந்த ஒரு ஆராய்ச்சியாளர் எப்படி ஆராய்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அவரையும் இந்த நிறைவு விழாவிலே கலந்துகொள்ள வேண்டும் என்று அழைத்தோம். ஒரு சைவப் பெருமகன் சேக்கிழாரை ஆராயப்புகுந்தால் அந்த ஆராய்ச்சி எப்படி வரும் என்பதை அவர்கள் இங்கேமிக அற்புதமாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் நம்முடைய தமிழ் பல்கலைக் கழகத்தின் சார்பிலே இந்த ஆய்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய பெயரை அவருடைய தந்தையார் ஞானசம்பந்தம் என்று எந்தக்காரணத்தினாலே வைத்தார்கள், தெரியாது. ஒருவேளை சேக்கிழார் பெருமான் தம்முடைய பெரியபுராணத்திலே மிகப் பெரும்பகுதியைத் திருஞானசம்பந்தருக்கு வழங்கியிருக்கிறார் என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்களே! அந்தச் சிறப்பும் அந்தப் பெருமையும் அவர்களுடைய தந்தையாரை தம்முடைய திருமகனுக்கு ஞானசம்பந்தம் என்கிற பெயரை வைக்க வேண்டும் என்று எண்ணியதோ என்னவோ அவர்கள் அப்படி வைத்திருக்கிறார்கள். தம்முடைய பெயருக்காக அவர்கள் திருஞானசம்பந்தருக்கு வாதாடவில்லை. காரணம் ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருஞானசம்பந்தருடைய விழாவிலே கலந்துகொள்ளவேண்டும் என்று என்னை அழைத்தார்கள். அப்போதுதான் நான் ஞானசம்பந்தரைப் பற்றிக் கொஞ்சம் பாலபாடம் கற்றுக்கொள்ளத் தொடங்கினேன். ஏனென்றால் நாங்கள் எல்லாம் இந்தப்பக்கத்திலேயே தலைவைத்துப்படுக்காதவர்கள். பெரிய புராணத்தையும் படிக்காமல் சேக்கிழாரையும்

தெரிந்துகொள்ளாமல், திருமுறைகள் தந்த- தேவாரம் தந்த அந்த மூவரையும் தெரிந்துகொள்ளாமல் திருவாசகத்தையும் படிக்காமல் இவைகள் எல்லாம் இந்த நாட்டை குட்டிச்சுவராக்கிக்கொண்டிருக்கின்ற -பழமையான மூடநம்பிக்கையை வளர்த்துக்கொண்டிருக்கின்ற—பாடல்கள் என்று நீண்டகாலமாகச் சொல்லிக்கொண்டு வந்த தொண்டர்களிலே நானும் ஒருவன். ஆகவே தான் திருஞானசம்பந்தருடைய விழாவுக்கு அழைத்துவிட்டார்களே! இந்தத் திருஞானசம்பந்தர் யார் என்பதையாவது தெரிந்துகொள்ளாமல் போனால் என்ன பேசுவது என்று நான் அதைப்படிக்கத் தொடங்கினேன்.

முதல் தலைவன் திருஞானசம்பந்தம்

நாங்கள் இப்போது மூலநூலைப்படிக்க முடியாது. அப்படிப் படிக்கின்ற வாய்ப்பை எங்களுக்கு நாங்கள் சார்ந்திருந்த இயக்கமும் ஏற்படுத்தித் தரவில்லை. இதற்காகவென்றே வாழ்ந்துகொண்டிருக்கிற நீங்களும் ஏற்படுத்தித் தரவில்லை. ஆகவே இரண்டுபேரும் சேர்ந்தே இந்தச் சமுதாயத்தை ஓரளவிற்கு இருட்டிலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறோம். இந்த இரண்டுபேருமே இதற்குக்குற்றவாளிகள் தான். அதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஒரு வேளை எங்களுடைய தலைவர்கள் சமுதாயத்திலே வேறு உணர்வுகளை அரசியல்லே ஏற்படுத்துவதற்காக சில வேகமான காரியங்களிலே ஈடுபட்டிருந்தாலும் நீங்கள் எங்களைத் தடுத்து நிறுத்தி, சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்டதைப் போல நீங்களாவது எங்களைத் தடுத்தாட்கொண்டிருக்க வந்திருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யவில்லை. ஆகவே இந்த வெள்ளத்திலே நீங்களும் சேர்ந்து விட்டீர்களா அல்லது கரையிலே நின்றுவிட்டீர்களா எங்களுக்குத் தெரியாது. திருஞானசம்பந்தரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் மூலநூலைப் படிக்க முடியாமல் இப்படிப்பட்ட ஆசிரியர்கள்- பேராசிரியர்கள் தந்த அந்த நூல்களை எல்லாம் படித்து-இங்கே திருவுருவப்படத்தை நான் நேற்று திறந்து வைத்தேனே! எங்களுடைய திருக்கோயில் இதழினுடைய ஆசிரியர்-மிகச்சிறந்த அறிஞர்-முருகவேள்-அவரிடத்தில் தான் குறிப்புகளைக் கேட்டேன்: அவர் எழுதித்தந்தார். இந்த நாட்டிலேயே தமிழைப் பாதுகாப்பதற்காகத் தோன்றிய முதல் தலைவன் திருஞானசம்பந்தன் தானென்று அவர் தான் அந்தக் குறிப்பைத் தந்தார். அவர் தான் திருஞானசம்பந்தர் தாம் பாடிய அந்த 4000 பாடல்களில் எத்தனை இடங்களிலே தம்மைத் ''தமிழ் ஞான சம்பந்தன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார் என்கிற குறிப்பையும் தந்தார். இன்றைக்கு நாம் தமிழுக்கு அடைமொழி போட்டுப்பேசிக்கொண்டிருக்கிறோமே! அதற்கு முதல்முதலிலே வகுத்துத்தந்தவர் -தொகுத்துத்தந்தவர் அந்தத் திருஞானசம்பந்தன் என்கிற தமிழ்ஞான சம்பந்தன் தான். அதற்கு முன்னாலேயும் தமிழுக்கு அடைமொழி போட்டதாகத் தெரியவில்லை. அதற்குப்பின்னாலே நாம் இன்றைக்கு அதை வழிவழியாகப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்! செந்தமிழன் செந்தமிழன் என்று நாங்கள் பேசிக்கொண்டிருக்கின்றோமே! அந்தச் செந்தமிழன் என்ற வார்த்தையை முதன்முதலிலே உருவாக்கி நாம் எல்லாம் செந்தமிழர்கள் என்று நினைவு படுத்தியவர் அந்தத் திருஞானசம்பந்தர் தான்.

தொண்டர்களில் ஒரு தொண்டன்

ஆகவே அன்றைக்குத் தொடங்கினேன் இந்த இயக்கத்தை. நான் அங்கே பேசிய பேச்சு பத்திரிகைகளிலே வந்தது போல் இருக்கிறது. நம்முடைய பேராசிரியர் ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு பாராட்டுக்கடிதம் எழுதினார். அதற்குப்பிறகுதான் கொஞ்சம் சரியான பாதையிலேதான் நாம் பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம் என்ற மனநிறைவு எனக்கும் வந்தது. ஆகவே இந்தப் பயணத்தை மேலும் தொடரவேண்டுமானால் கொஞ்சம் படிக்க வேண்டுமே என்று நான் அதற்குப்பிறகு படிக்கத்தொடங்கினேன். அப்படி கிடைத்த சான்றுகள் தான் சேக்கிழார் பெருமானைப் பற்றிய குறிப்புகள். இன்றைக்குக் கடந்த 18 ஆம்தேதி சேக்கிழார் பெருமான் பிறந்த குன்றத்தூரிலே அந்த நிகழ்ச்சியை நடத்தினோம். 62 ஆண்டுகளாக அவர் எழுப்பிய ஆலயத்திற்குள்ளே அவரே போகமுடியாமல் தடுத்து நிறுத்தி வைத்திருந்தார்கள். அது இந்தப் புரட்சித்தலைவரின் ஆட்சியிலே தான் அதற்கும் சாபவிமோசனம் கிடைத்தது. அந்தச் சேக்கிழார் பெருமானைத் தமிழகத்தினுடைய அறநிலையத்துறை அமைச்சரே இருந்து ''எங்களுடைய முதலமைச்சரே வாருங்கள்! நீங்கள் எழுப்பிய ஆலயத்திற்கு உள்ளே உங்களைத் தடுக்கின்ற சக்தி படைத்தவர்கள் யாரு மில்லை'' என்று அன்றைக்கு அந்த நாகசேஸ்வரர் ஆலயத்திற்குள்ளே அந்தப் பெருமானை அழைத்துக்கொண்டு சென்றஅந்த தொண்டர்களில் ஒரு தொண்டன் நான்.

மயிலாப்பூரில் விழா நடத்தும் காரணம்

ஆகவே இந்தத் தொண்டர்கள் வரிசையிலே என்னை வைத்து எங்களுடைய பங்காளிகள் இவர் நாயன்மார் ஆகிவிட்டார் என்று சொல்லுவதைப் பற்றி நான் கவலைப்படவே இல்லை. காரணம் இந்த நாட்டை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற அந்த ஏமாற்றுக்காரர்களாக வாழ்வதைவிட, மற்றவர்களுக்காக தன்னை ஒப்படைத்துக்கொண்டிருக்கிற தொண்டர்களாக வாழ்வதில் எந்தவிதமான குற்றமும் இல்லை. தொண்டர்களாக ஆவது தான் மிக கஷ்டமான காரியம். உலகிலேயே பெரியது எது என்று கேட்டபோது ஔவையார் தொண்டருடைய பெருமையைச்சொல்வது தான் பெரிது என்று சொன்னதாக இலக்கியத்தை வைத்து

இருக்கிறோம். ஆகவே இந்தத் தொண்டர் களைப்பற்றி நம்முடைய சேக்கிழார் எப்படி பாடியிருக்கிறார்! அது என்ன 63 நாயன்மார் கள் என்று நான் எண்ணியபொழுது தான் இங்கே இந்த கபாலீசுவரர் ஆலயத்திலே ஆண்டு தோறும் திருவிழா நடக்கிறது! தமிழகத்திலே எந்த ஆலயத்திலும் இந்த நாயன்மார்களுக்கு விழா கிடையாது. இந்த ஆலயத்திற்குள்ளே சுற்றி வருகிற போது வரிசையாக அடுக்கிவைத் திருக்கிறார்கள். ஏதோ கற்களை வைத்திருப் பதைப் போல; இப்படி போகிற போக்கிலேயே அவன் சொல்லுவான். இதெல்லாம் நாயன்மார் கள் என்று, நாமும் பலபேர் பார்த்துக்கொண்டு தான் வருகிறோம். நாயன்மார்களுடைய பெருமை தெரியாமல் எப்படி அவர்களைப் புறக்கணித்திருக்கிறோம்! இங்கே 63 நாயன் மார்கள் திருவிழாவிற்குத்தான் இலட்சக்கணக் கிலே கூட்டம் - அதற்காக அரசாங்கமே இந்தப் பகுதியிலே விடுமுறை விடுகிறது. ஆனால் 63 நாயன்மார்களுக்கு விழா கொண் டாடிக்கொண்டு இருக்கிறோமே தவிர அந்த நாயன்மார்களில் ஒருவரையாவது பெயர் சொல்லிப்பாராட்டுகின்ற தகுதியையும் பெற் றுக்கொள்ளாத குருடர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நான் அதனாலே தான் இந்த விழாவை மயிலாப்பூரிலே நடத்தவேண்டு மென்று விரும்பினேன்.

மக்களால் பேசப்படுகிற ஒரு விழா

காலையிலே பேசிய நம்முடைய அருமைச் சகோதரி பேராசிரியை சாரதா நம்பியாரூரான் அவர்கள் சொன்னார்கள். அரசு இவ்வளவு சிறப்பாக நடத்துகிறதே என்று கூட நாங்கள் எண்ணினோம். ஆனால் ஏன் இவ்வளவு சிறப் பாக நடத்துகிறார்கள் என்பதற்குக் கைமேல் பலன் கிடைத்தது. எங்களுடைய வீட்டிலே வேலை செய்கிற வேலைக்காரி என்னிடத்திலே கேட்டாள். ''என்னம்மா யாரோ சேக்கிழா ராமே! அவருக்கு விழா கொண்டாடுகிறார் களாமே! அது யாரம்மா சேக்கிழார்? என்று என்னைக் கேட்டாள்'' என்று நம்முடைய சாரதா நம்பியாரூரான் அவர்கள் காலையிலே பாராட்டினார்கள். இங்கே நம்முடைய பகீரதன் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். வள்ளல் மகா லிங்கம் அவர்களோடு இந்த நாட்டிலே சமுதா யப் பணியை-சமயப்பணியை-மொழிப்பணியை ஆற்றிக்கொண்டிருக்கின்ற தொண்டர் -அவரும் சொன்னார் -இது இன்றைக்குச் சென்னைமா நகரத்திலே பேசப்படுகிற ஒரு விழாவாக இருக் கிறது. அவருடைய வீட்டிலேயும் அவரை இந்த விழாவைப் பற்றிக்கேட்டிருக்கிறார்கள். ''எல்லோரும் போகிறார்களே! அது என்ன சேக் கிழார் விழாவாமே! யார் அந்தச் சேக்கிழார்''? இந்த நாட்டினுடைய வரலாற்றை உருவாக்கித் தந்த பெருமகனை, 800 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சமுதாயம் ''யார் அந்த சேக் கிழார்?'' என்று கேட்கிற நிலைமையிலே தான் இந்தச் சமுதாயத்தை வைத்திருக்கி றோம். அதிலும் பெண்கள் கேட்கிறார்கள்; ஆலயத்திற்குச் செல்லுகிற பெண்கள். இன் றைக்கு ஆன்மீகத்தைக் காப்பாற்றிக் கொண்டி ருப்பவர்களே பெண்கள் தான். அறுபத்துமூவர் திருவிழா நடத்துகின்ற மயிலையிலே வாழும் பெண்கள்கூட இன்னும் சேக்கிழாரை யார் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய நிலையிலே இருப்பது நாம் எல்லாம் இதை எண்ணி வெட்கப்படவேண்டிய விஷயம்.

அந்தணர் என்போர் அறவோர்

ஆகவே தான் அந்த அடிப்படையிலே இங்கே சான்றோர்கள் எல்லாம் ஒவ்வொரு கண் கொண்டும் அந்தக் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். சமுதாயத்திலே சேக் கிழார் எத்தகைய மிகச்சிறந்த சேவையைச் செய்தார் என்பதைத் தான் இங்கே அறிஞர் பெருமக்கள் எடுத்துச் சொன்னார்கள். திரு ஞானசம்பந்தரைப்பற்றிச் சொன்னபோது அவர் எந்தக் குலத்திலே பிறந்தார்! அது தான் எங்களுக்குத் தெரிந்தது. அவர் என்ன செய் தார்? அதை எங்களுக்கு நீங்களும் சொல்லித் தரவில்லை. நாங்களும் தெரிந்துகொள்ள வில்லை. ''தில்லை வாழ் அந்தணர்தம் அடி யார்க்கும் அடியேன்'' என்று பாடியபோது தில்லையிலே இருக்கிற பார்ப்பனர்களுக்கு அடிமை என்று சொல்லுகிறார் என்று நாங்கள் தவறாகப்பொருள் கொண்டோமே! அன் றைக்குக்கூட நீங்கள் சரியான பொருளைச் சொல்ல வரவில்லையே! ''அந்தணர் என்போர் அறவோர்'' அதுதானே வள்ளுவர் காட்டிய இலக்கணம். அந்தணர்கள் என்றால் இங்கே இருக்கிற ஏதோ பார்ப்பனர்கள், ஐயர்கள், பிராமணர்களைக் குறிப்புதாக அல்லவா நாங் கள் தவறாக எண்ணிக்கொண்டிருந்தோம். அதைத்தான் சொன்னார் பேராசிரியர் ஞான சம்பந்தம். ஐயர் என்பதைச் சேக்கிழார் எங்கே பயன்படுத்துகிறார்? அதைத் திருஞானசம்பந்தர் பயன்படுத்துகிறார் யாருக்கு? ஒருஆதி திரா விடருக்கு.

பாரதியாக வந்துபிறந்தவர் திருஞானசம்பந்தர்

எனக்குக்கூட நினைவிற்கு வந்தது. மறு பிறவி என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோமா இல்லையா என்பதுகூட அல்ல. ஆனால் அன் றைக்கு 7ஆம் நூற்றாண்டிலே தோன்றினார் திருஞானசம்பந்தர். அவர் ஒருவேளை அந்த ணர் குலத்திலே அல்லது ஐயர் குலத்திலே அல்லது பிராமணர் குலத்திலே தோன்றியிருக்க லாம். தமிழுக்காகத் தோன்றிய அந்தத்தலை வனை அதற்குப் பிறகுஇந்தச்சமுதாயம் மறந்து விட்டது. அதனாலே தான் மீண்டும் அதே குலத்திலே சென்ற நூற்றாண்டிலே எட்டய

புரத்திலே வந்து அந்தத் திருஞானசம்பந்தன் வந்து பாரதியாகப் பிறந்தானோ என்னவோ? ஏனென்றால் திருஞானசம்பந்தரும் தம் பக்கத்திலேயே தமக்கு இசை வாசிக்கின்ற-வாத்தியம் வாசிக்கின்ற ஒரு ஆதி திராவிடரை - திருநீல கண்ட யாழ்ப்பாணரை வைத்திருந்தார்-நம்முடைய மகாகவி பாரதியும் ஒருஆதி திராவிடருக்கு-கனகலிங்கம் என்ற அந்த ஆதிதிராவிடருக்குப் ''பூணூல் போடுகிறேன். நீ இன்று முதல் பிராமணன்'' என்பதாகச் சொல்லி பூணூல் போட்டு அவரைத் தம் பக்கத்திலேயே வைத்துக்கொண்டிருந்திருக்கிறார். அன்றைக்கு வாழ்ந்த அப்பரடிகள் தான் மீண்டும் வ.உ. சிதம்பரமாக வந்துபிறந்தாரோ? அன்றைக்குத் தோளோடு தோள் நின்ற திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தான் இந்தக்காலத்திலே பாரதியாகவும் வ.உ.சிதம்பரமாகவும் வாழ்ந்தார்களோ? என்று எண்ணுகிற அளவுக்கு காலம் வரலாற்றை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அநபாயச்சோழனைப் பற்றிச்சொன்னார்கள். சேக்கிழாரையழைத்து பெரிய புராணம் என்கின்ற ஒரு இலக்கியத்தைப் படைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டானே! பெரிய.,புராணத்தைப்படைக்க சொல்லவில்லை. தமிழ்நாட்டினுடைய சிறப்பை உள்ளடக்கிய ஒரு வரலாற்று நூலை-வரலாற்று இலக்கியத்தைப் படைக்கச்சொன்னான்; வரலாற்றாசிரியர்கள் சொல்கிறார்கள். அத்தகைய அநபாயச் சோழன் தான் புரட்சித்தலைவர் உருவிலே வந்து இங்கே ஆட்சி செலுத்துகிறார் போல் இருக்கிறது. அவருடைய காலத்தில் தான் மீண்டும் இவைகள் எல்லாம் உயிர்பெற்று வருகின்றன.

தமிழ் ஏது?

நேற்று பேசிய நம்முடைய அன்பிற்குரிய சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். புரட்சித்தலைவர் அவர்கள் நோய் வாய்ப்பட்டார்களே! அது நம்க்கெல்லாம் வேதனை தருகின்ற நிகழ்ச்சி தான். உள்ளத்தை வாட்டுகின்ற நிகழ்ச்சிதான். ஆனால் அதன் மூலம் இந்த நாட்டிற்கே ஒரு புதிய எழுச்சிதோன்ற வேண்டும் என்பது இறைவனுடைய கட்டளை போலிருக்கிறது. அதற்காகவே நடந்திருக்கிறது. இந்த நாட்டு மக்களுக்கு ஒரு புதிய உத்வேகம்; பிரார்த்தனை செய்யவேண்டுமென்றால் கேலி பேசியவர்கள் இன்றைக்குப் பிரார்த்தனைக்காகக் கூடிய காட்சியைத் தமிழகம் கண்டதே என்று அவர்கள் குறிப்பிட்டார்களே! அப்படிப்பட்ட உணர்வு இன்றைக்குத் தோன்றியிருக்கிறது. அந்த உணர்வின் விளைவு தான் இந்தச் சேக்கிழார் விழாவும்.

இந்த 63 நாயன்மார்களுள் மாணிக்கவாசசர் எப்படி அடங்காமல் போய்விட்டார் என்பது இதுவரை தெரியவில்லை என்று நம்முடைய டாக்டர் சிலம்புச்செல்வர் அவர்கள் சொன்னார்கள். ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் அதைத்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவாகச் சொல்லுகிறார்கள் மாணிக்க வாசகருடையகாலம் சேக்கிழாருக்குப் பின்னாலே இருந்திருக்கும் என்று சொல்கிறார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் அப்படி ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் அகப்படாமல் இன்றைக்குக் காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது என்கின்ற அந்த உணர்வைப் பார்க்கும் பொழுது தான் இன்றைக்கு இவ்வளவு காலத்திற்குப்பிறகு தமிழ் உணர்வும் தமிழ்ப்பண்பாட்டுணர்வும் தமிழ் இலக்கிய உணர்வும் இவைகள் அத்தனையும் காப்பாற்றப்படவேண்டுமானால் சமய இலக்கியங்கள் நமக்குத்துணை நிற்கவேண்டும். அதை நினைவு கூரவேண்டும். அவைகள் இல்லையானால் தமிழ் ஏது? மகாகவி பாரதி காலத்திலே இருந்து தான் தமிழ் தோன்றியதா? வள்ளலார் காலத்திலே இருந்து தான் தமிழ் தோன்றியதா? தமிழை இத்தனை ஆண்டுக்காலம் காப்பாற்றி வந்திருக்கிறார்களே! நம்முடைய அ.ச.ஞான சம்பந்தம் அவர்கள் சொன்னார்கள். எந்தச் சூழலிலே பெரிய புராணம் தோற்றுவிக்கப்பட்டது என்று!

சேக்கிழார் செய்த புரட்சி

அன்றைக்கு அந்தச் சூழலில் தான் முதலமைச்சர் என்ற பெரிய பொறுப்பை உதறி எறிந்துவிட்டு நாடு முழுதும் சுற்றித்திரிந்திருக்கிறார். சான்றுகளைத் திரட்டியிருக்கிறார். கற்பனையிலே பாடவில்லை. அதிலே நடைபெறுகிற சம்பவங்கள் என்று குறிப்பிடப்படுகின்ற சிலவற்றிலே வேண்டுமானால் அவர் செவிவழிச்செய்தியாகக் கேட்டதினாலே கற்பனை கூட இருக்கலாம். ஆனால் அந்தக் கற்பனையும் நல்ல பண்பை உருவாக்குவதற்கு; நல்ல உணர்வுகளை வளர்ப்பதற்கு; நாட்டிலே மனிதப் பண்பை வளர்ப்பதற்குத் தான். இன்றைக்குக் கற்பனை எங்கே போகிறது? இன்றைக்கு உண்மை நிகழ்ச்சி என்று எதை எதையெல்லாம் போடுகிறார்கள்! ஒரு பெண் கற்பழிக்கப்பட்டாள் என்பது போன்ற செய்திகள் தானே இப்போது பத்திரிகைகளில் அதிகமாக வருகின்றன. இவையென்ன உடனடியாகச் சமுதாயத்திற்குத் தெரிவிக்கப்படவேண்டிய அவசிய-அவசரச்செய்திகளா? மக்களின் பண்பாடு வேதமாகச் சீரழியத்தானே இந்தப்பத்திரிகைச் செய்திகள் பயன்படுகின்றன! சேக்கிழார் போற்றிய தமிழ்ப் பண்பாட்டை இங்கே அறிஞர் பெருமக்கள் எடுத்துக்கூறினார்களே! அதுவல்லவா சமுதாயத்திற்கு வேண்டும். சேக்கிழார் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய நாயன்மார்கள் வாழ்ந்திருந்த இடங்களுக்கே போய் அவர்களுடைய வரலாறுகளை எல்லாம் திரட்டிக் காப்

பியமாக்கிக் கொடுத்திருக்கிறார் என்றால் சமயத்தின் பெயராலே எவ்வளவு பெரிய புரட்சியைச் செய்திருக்கிறார். இதை நீங்களும் சொல்லவில்லை. நாங்களும் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் எதற்கெடுத்தாலும் ஒழிக என்று சொல்லமட்டும் கற்றுக்கொண்டிருக்கிறோம். ஒன்றின் அழிவினால் மட்டும் மற்றொன்று சிறப்படைந்து விடாது என்பதை நன்றாக நினைவிலே வைத்துக்கொள்ளவேண்டும். அழிவு வேலையில் சிந்தனையைச் செலுத்துவது நாட்டிற்கு நல்லதாகாது. ஆகவே அறநிலையத்துறையின் மூலம் இந்த நல்ல உணர்வுகளை உண்டாக்கியே தீரவேண்டும் என்பதனால் தான் இன்றைக்குச்சேக்கிழார் விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம்.

பூட்டிவைக்க வேண்டாம்

சேக்கிழார் பெருமானைச் சைவ சமயத்திற்கு மட்டுமே உரியவர் என ஒதுக்கிவைத்து விடாதீர்கள். இதைப் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் சொன்னார்கள். நான் இதைச் சொல்லியிருந்தால் பலருக்குத் தவறாக கூடப்பட்டிருக்கக் கூடும். பன்னிரு திருமுறைகளுக்கு மாலைபோட்டுப் பூசைப்பொருளாக்கிப் பூட்டி வைத்துவிட்டோம் என்று அவர்கள் அதைச் சொன்னார்கள். இளைஞர்களுக்குச் சேக்கிழாரைப் பற்றிச்சொல்லிக் கொடுத்திருக்கிறோமா என்றால் கிடையாது. எத்தனை சைவர்கள் தங்கள் வீடுகளில் தேவாரத்திருமுறைகளை வைத்திருக்கிறார்கள்? திலகவதி மங்கையர்க்கரசி முதலான பெயர்களை எத்தனை சைவர்கள் தங்கள் வீடுகளில் குழந்தைகளுக்குப் பெயராக வைத்திருக்கிறார்கள்? சான்றோர்களின் பெயர்கள் விளங்கினால் தானே நம் சமயமும் விளங்கும்! ஆகவே ஆலயத்திற்குள்ளே திருமுறைகளைப் பூட்டி அடைத்து விடாதீர்கள்! பூசைக்குரியது உலகில் பரவாது. நூல்கள் நம் வாழ்க்கைக்குரியன. திருமுறைகளை நாம் பூட்டி அடைத்துவிட்ட காரணத்தினால் தானே நாம் நம் வாழ்க்கைக்குக் கிடந்து தவித்துக்கொண்டிருக்கிறோம். இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் அமைதிப்பூங்காவாகத் திகழும் மாநிலம் நம் தமிழ் மாநிலம் தான். புத்தம் தோன்றிய பகுதியில் இல்லையே அமைதி! சமணம் வழங்கிய பகுதியிலும் இல்லையே அமைதி! நம் தமிழகம் மட்டும் அமைதி பூங்காவாகத் திகழ்வதற்கு என்ன காரணம்? நம்முடைய சமய இலக்கியங்கள் தான். ஆகவே அத்தகைய சிறப்புகள் கொண்ட -வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடிய இலக்கியங்களை நாம் பூட்டிவைத்துவிடாமல் நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் கற்றுத்தந்தாக வேண்டும்.

தெய்வ சக்தி

இயற்பகை நாயனார் தம்முடைய மனைவியையும் சிவனடியார்க்குத் தந்ததாகப் பெரிய புராணத்தில் படிக்கிறோமே! என்ன உணர்வில் தந்தார், அந்த நாயனார்? புரட்சித்தலைவர் உடல்நலம் இன்றி இருந்தபோது ஏன் அவ்வளவு பேர் தீயால் தம்மை மாய்த்துக்கொண்டனர்? அவர்களை அப்படி மாய்த்துக்கொள்ளச் செய்தது எந்த உணர்வு? நம் முதல்வரின் உயிர் மீளக் காரணமாயிருந்தது எந்தச்சக்தி? தமிழக முதல்வருக்குச் சிகிச்சை அளித்த அமெரிக்க டாக்டர் ப்ரீட்மென் கூட என்ன சொன்னார்? எங்களால் முடிந்த சிகிச்சையை நாங்கள் செய்தோம். அவருடைய உயிரை மீட்டுத்தந்தது தெய்வத்தின் சக்தி தான் என்றல்லவா அவரும் தெரிவித்திருக்கிறார். இன்றைக்கு நிருபர்களுக்கு பேட்டி தந்து, அரசாங்க ஊழியர்க்குச் சம்பள உயர்வை அளித்திருக்கிறாரே! இவையெல்லாம் எப்படி நடக்கின்றன என்பதல்ல. நடந்து கொண்டிருக்கிறதே! ஒரு ஐந்து வயது சிறுவன் திருக்குறளை முழுதும் தலைகீழ் பாடமாக ஒப்பிப்பதைத் தொலைக்காட்சியில் காட்டினார்களே! அந்தத்திறமை பல பேராசிரியர்களிடம் கூட இல்லையே! தெய்வச்சக்தி இல்லாமலா இவை எல்லாம் நடந்து கொண்டு இருக்கின்றன? ஆகவே இப்படிப்பட்ட நல்ல நம்பிக்கைகளை எல்லாம் காப்பாற்றும் பொறுப்பைத்தான் புரட்சித்தலைவரின் அரசு ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறது.

சேக்கிழாருக்குக் கோட்டம் அமைக்கப்படும்

சேக்கிழாருக்குச் சிலை எடுப்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். புலவர் பெருமக்கள் வரிசையிலே சேக்கிழாரைச் சேர்த்து அன்றைக்கே காட்டியிருந்தால் அப்பொழுதே சிலை அமைத்திருக்கக்கூடும். சேக்கிழாருக்குக் கோட்டம் அமைப்பதைப் பற்றியும் எடுத்துச்சொன்னார்கள். சேக்கிழார் பெருமானுக்கு அரசு எடுக்கும் கோட்டம் சேக்கிழார் பெருமானைப் பெருமைப்படுத்தும் அறிவுக்கூடமாக அமையும்! சேக்கிழாரின் பெரிய புராணத்தை C. K. சுப்பிரமணிய முதலியாரின் உரையுடன் புதுப்பித்து வெளியிடும் பணியையும் அரசாங்கம் ஏற்கும். அந்தப் பணியை யாரிடம் கொடுக்கலாம் என்பதைப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் போன்றோர் அறிவிக்கவேண்டும். சேக்கிழாருக்கு மட்டும் அல்லாமல் சிறந்து விளங்கிய சமயப்பண்பாட்டு இலக்கியச் சான்றோர்களுக்கெல்லாம் கூட மக்களுக்குப் பயன்படும் வகையில் நினைவுச்சின்னங்கள் அமைப்பதற்காக ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். சான்றோர்களுக்கு அமைக்கப்படும் நினைவுச் சின்னங்கள் வழிபடும் கூடங்களாக அமைக்கப்படாமல் ,மக்களுக்குப் பயன்பட்டு வழிகாட்டும் இடங்களாக அமைக்கப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே கூறி, அனைவர்க்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

தமிழரின் மானங்காத்த மகாகவி சேக்கிழார்

சட்டமன்ற மேலவைத் தலைவர்
மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள்

திருத்தொண்டர் புராணம் தந்த சேக்கிழார் பெருமானுக்குத் தமிழக அரசின் அறத்துறை விழா கொண்டாடுகிறது.

சேக்கிழாருக்கு இதுவரை சைவ சபைகளும் மடங்களும் விழாக் கொண்டாடி வந்தன. இந்த ஆண்டிலேதான் முதன் முதலாக, தமிழக அரசே கொண்டாடுகிறது.

அமைச்சரின் ஆத்திக உணர்வு:

மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், அறத்துறையை நிர்வகிப்பதற்காக மட்டுமல்லாமல் இந்து சமயத்தில் உண்மையாகவே பற்றுகொண்டும், சமய இலக்கியங்களிலே பயிற்சி பெற்றும் வருவதாலேயே இந்த விழாவை மனநிறைவோடு கொண்டாடுகிறார். இதற்காக, தமிழ்நாட்டில் இன்று நடக்கும் எம். ஜி. ஆர். ஆட்சியை அநபாய சோழன் ஆட்சியாகவும் அறத்துறை அமைச்சரை நம்பியாண்டாராகவும் கருதலாந்தானே!

இந்து சமயத்தோடும் - சமய வழிப்பட்ட சாத்திர - தோத்திரங்களோடும் போராடி வந்த சமுதாய சீர்திருத்தவாதிகள் இன்று ஆட்சி நடத்துகிறார்கள். அவர்களே முன் வந்து, சைவ சமயக் காவலரான சேக்கிழாருக்கு விழா எடுக்க முன் வந்தனரென்றால் தமிழகம் சரியான திசையில் நடைபோடத் தொடங்கி விட்டது என்று நாமெல்லாம் மகிழ்ச்சியடையலாம்.

சேக்கிழார், சோழப் பேரரசின் முதலமைச்சராக இருந்தவர். ஆனால், அதற்காக மட்டுமே அவருக்கு நாம்விழா எடுக்கவில்லை. சைவ சமயத்தைப் பாதுகாக்கவும், அதன் மூலம் தமிழை வளர்க்கவும் முதலமைச்சர் பதவியைத் துறந்தாரே அந்தத் தியாகத்திற்காகவும்தான் அவருக்கு விழா எடுக்கிறோம்.

தமிழர் புராணம்:

சேக்கிழார் பெரிய புராணத்தைப் படைக்கு முன்னர், தமிழில் ஐம்பெருங்காப்பியங்களிருந்தன. அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவையாம். அவற்றிலே சிலப்பதிகாரம், சமயக்காப்பியமல்ல. சமயங்கடந்த சமுதாயக்காப்பியம் ஆகும். அதை இயற்றியவரான இளங்கோ தமிழருக்குப் புறச் சமயமாகிவிட்ட சமண சமயத்தவர் என்ற வாதம் வலுவாக இருந்து வருகிறது. ஆகவே அவர் மீதோ அவர் படைத்த சிலம்பின் மீதோ சைவர் தனியாக உரிமை கொண்டாடுவதற்கில்லை.

எஞ்சிய நான்கு காப்பியங்களும் தமிழருடைய வாழ்க்கை நெறிகளுக்கும் நியதிகளுக்கும் வேறுபட்ட புறச்சமயங்களான சமண பௌத்த சமயங்களுக்குச் சொந்தமானவையே ஆகும். ஆகவே தமிழருக்குச் சொந்தமான சைவ சமயம் சேக்கிழார் காலம் வரை தனக்கென ஒரு காப்பியத்தைப் பெற்றிருக்கவில்லை. தேவாரம், திருவாசகம் ஆகிய தோத்திர இலக்கியங்களைப் பெற்றிருந்தும் அவற்றில் வரும் கதைகள்கூட காப்பிய வடிவம் பெற்றிருக்கவில்லை.

இந்த சூன்யத்தை இட்டு நிரப்பவே, சேக்கிழார் ''திருத்தொண்டர் மாக்கதை'' என்னும் பெயரில் தமிழர் சமயத்திற்கே உரிய ஒரு காப்பியத்தைப் படைத்துக் கொடுத்து தமிழருக்கு இருந்த அவமானத்தைப் போக்கினார். தமிழினத்தின் பண்பாட்டைக் காத்தார்.

தேசியத்திற்கு எதிரானதல்ல:

நான் இங்கு சமய வேற்றுமைகளை விவரிக்க விரும்பவில்லை. நான் தமிழன் மட்டுமோ சைவத்

மாண்புமிகு டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்கள் தம் தலைமையுரையில் ''அந்தணனுக்கு அந்தணன் அடிமையா?'' என ஆரம்பத்தில் கேட்ட சுந்தரமூர்த்தி நாயனாரே பின் மனம் மாறி திருநாளைப் போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலான பிறப்பால் தாழ்வுப்படுத்தப்பட்ட நாயன்மார்க்கும் தம்மை அடிமைப்படுத்திக் கொண்ட அன்பின் திறத்தை வியப்பது நம்மைப் பரவசப்படுத்தும்!

தில் பற்றுடையவன் மட்டுமோ அல்லன்; குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் பாரதப் பெருநாடு முழுவதையும் எனது தாய் நாடாகக் கருதுபவன். பாரத மக்கள் அனைவரையுமே நேசிப் பவன். அதனால், பிள்ளைப் பருவந்தொட்டே ''பாரத மாதாவுக்கு ஜே'' என்று சொல்லிச் சொல்லி நாத்தழும்பேறியவன். வேறுபாடுடைய சமயங்களிடையே ஒருமைப்பாடு காணவும் பாடு பட்டு வருபவன். ஆயினும், தமிழகத்துக்கு தமிழர் சமயத்துக்கு - தமிழ்ப் பண்பாட்டுக்கு அன்னியரான களப்பிரரும் பல்லவரும் தொடர்ந்து பல நூற்றாண்டுக் காலம் தமிழகத்திலே ஆட்சி புரிந்ததால், புறச்சமயங்கள் வளர்ந்தன. அகச் சமயங்களான சைவமும் வைணவமும் தளர்ந்தன. அந்த நிலையில் தான் சோழர் பேரரசின் முதல் வர் பெரியபுராணம் படைத்தளித்துத் தமிழரை தலை நிமிரச் செய்தார்.

சாதிகளிடை சமத்துவமே கருப்பொருள்:

பெரிய புராணத்தின் கருப்பொருள் என்ன? சைவத்தமிழரிடை நிலவி வரும் சாதி வேறுபாடு களைப் போக்கி அவர்களை ஒன்றுபடுத்துவதே ஆகும்.

சேக்கிழார் காலத்திலே, ஏற்றத்தாழ்வோடு கூடிய நால்வருணப் பாகுபாடு இருந்தது. உயர்வு தாழ்வோடு கூடிய சாதிவேறுபாடுகளும் இருந்தன. இதனால், தமிழர் பிளவுபட்டனர். நால்வருணங் களிடையிலும் சாதிகளிடையிலும் ஒருமைப்பாடு காண்பது சேக்கிழாரின் குறிக்கோளாக இருந்தது.

சேக்கிழார் சாதி வேறுபாடுகளை எதிர்க்க வில்லை; ஏற்கிறார். ஆம்; தொழில் வழியிலே!

அவர், நால்வருணப்பாகுபாட்டையும் ஆட் சேபிக்கவில்லை. அங்கீகரிக்கிறார் ஆசார ரீதி யிலே! தொழில்களிலே வேறுபாடு இருக்கும் வரை அவற்றில் ஈடுபடும் தொழிலாளரிடையேயும் வேறு பாடு இருக்கத்தான் செய்யும் என்ற உண்மையினை அவர் உணர்ந்திருந்தார். அவர் போலிச்சாதி ஒழிப்பாளரல்ல.

ஆகவே, சாதி ஒழிப்பில் ஈடுபடாமல், சாதி களிடையில் ஒருமைப்பாடு காண விரும்பி, சாதிக் கொரு தொண்டரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் செய்து வந்த தொழிலின் அடிப்படையில் சிவ நெறித் தொண்டர்களாக நமக்கு அறிமுகப்படுத்து கிறார்.

சேக்கிழார் காலத்தில் நால் வருணப்பாகுபாடு சமுதாய நன்மைக்குத் தேவைப்பட்டது. ஆயினும் மேல் வருணம் தாழ் வருணம் என்ற ஏற்றத்தாழ்வு தேவைப்படவில்லை. அது தெய்வச் சம்மதமில்லை என்றும் அவர் கருதினார்.

ஒருமைப்பாடு:

நால்வருணங்களிடையிலும் சாதிகளிடையி லும் பன்மையிலே ஒருமை என்னும் சித்தாந்தபடி ஒருமைப்பாடு காண முயன்றார்.

சேக்கிழார் அந்தணரான சுந்தரரையே திருத் தொண்டர் மாக்கதையின் நாயகராக்குகிறார்.

''தொண்டை''யே காப்பியத்தின் கருப்பொரு ளாக்கினார் என்று இங்கு பேசியவர்கள் சொன் னார்கள். அதனை நான் மறுக்கவில்லை; ஏற் கிறேன். ஆனால், தத்துவம் எவ்வளவு தான் சிறந்ததாயினும், அதற்கு வெற்றி தேட தத்துவி ஒருவரும் தேவைப்படுகிறார். அந்தத்தத்துவம் ''தொண்டு'' என்றால், தத்துவி தான் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

சிவனார் திருவிளையாடல்

சுந்தரமூர்த்தியாருக்குத் திருமணம் நடக்கும் போது சிவபெருமான் அந்தணர் வடிவத்தில் தோன்றி பழைய ஓலை ஒன்றைக்காட்டி அதிலே

அருமறை நாவல் ஆதிசைவன்
ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்
பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபுளோரும்
வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என் எழுத்து.

என்று ஓலையிலுள்ள வாசகத்தைப்படித்துக் காட்டி, ''அடிமைக்குத் திருமணம் வேறா?'' என்று கேட்டு திருமணத்தைத் தடுத்து சுந்தரரைஅடிமை கொள்ள முயல்கிறார்.

திருமண அவையிலிருந்த அந்தணர்களெல் லோரும் முனிவர் வேடத்தில் மறைந்த சிவபெரு மானை நோக்கி,

''மறையவர் அடிமை ஆதல் இந்த மாநிலத் தில் இல்லை என் சொன்னாய் ஐயா''

என்று சொன்னார்கள்.

அந்தணனுக்கு அந்தணன் அடிமையா?

மணமகனாகிய நாவலூர் சுந்தரனாரும்,

''ஆசில் அந்தணர்கள் வேறோர்
அந்தணர்க் கடிமையாதல்
பேச இன்றுன்னைக்கேட்டோம்
பித்தனோ மறையோன்.''

என்கின்றார்.

மணவறையிலிருந்த மறையவர்களும் சரி, மணமகனாகிய சுந்தரனாரும் சரி:

''மனிதனுக்கு மனிதன் அடிமையாவது உண்டா?'' என்று கேட்டு மனிதாபிமான ரீதியில் வாதம் புரியவில்லை.

''ஒரு தமிழனுக்கு இன்னொரு தமிழன் அடிமையாவது உண்டா'' என்று இன அடிப்படை யில் வாதம் செய்யவில்லை.

''சைவனுக்கு சைவன் அடிமையாவது உண்டா?'' என்று கேட்டு, சைவ ஒருமைப்பாட்டை வலியுறுத்தவில்லை.

''ஒரு அந்தணர் இன்னொரு அந்தணருக்கு அடிமையாவது உண்டா?'' என்றே கேட்டனர்.

இதனால் மனிதனுக்கு மனிதன் அடிமை யாகும் கொடுமை மற்ற மூன்று வருணத்தாரிடம் இருப்பது இயற்கை என்றாகிறது.

பணி செய்தல் வேண்டும்:

இந்த வருணாசிரம வாதத்தையும் பேதத்தை யும் முறியடிக்கத்தான் சேக்கிழார் ''தடுத்தாட் கொண்ட புராண''த்திலிருந்து கதையைத் தொடங்குகிறார்.

முனிவர் வேடத்தில் மறைந்துள்ள சிவபெரு மான், வருணாசிரம வாதம் பேசிய மறையவரை யும் சுந்தரரையும் பார்த்து,

''வித்தகம் பேசவேண்டாம்;

பணி செய்யவேண்டும்''

என்று சொல்லி, அறிவுரை கூறுகின்றார்.

இதன் பின்னரும் கதை நீள்கிறது என்றாலும் முனிவர் வடிவில் வந்த இறைவனார் தாம் தொடுத்த வழக்கில் வென்றுவிடுகிறார். அதாவது சுந்தரரை அடிமை கொண்டு விடுகிறார்.

சுந்தரரின் மனமாற்றம்:

அதன் பின்னர், ''திருத்தொண்டத்தொகை'' என்னும் தலைப்பில் நமக்குக் கிடைத்துள்ள 11 விருத்தப்பாக்களை சுந்தரனார் படைத்தருளு கிறார்.

அதிலே ''தில்லை வாழ் அந்தணர்தம் அடி யார்க்கும் அடியேன்'' என்றுதான் தொடங்கினா ரென்றாலும், ''செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்'' என்று சொல்லி ''பறை யர்'' என்னும் பெயருடைய தாழ்த்தப்பட்ட சாதி யில் பிறந்த நந்தனாருக்குத் தம்மை அடிமையாக் கிக் கொள்கிறார். மற்றொரு தாழ்த்தப்பட்ட நாயனாரான திருநீலகண்டத்து யாழ்ப்பாணருக் கும் அடிமையாக்கிக் கொள்கிறார்.

இன்னும் மட்பாண்டம் செய்வோர், துணி வெளுப்போர் ஆகிய தொழிலாளருக்கும் தாம் அடிமை என்று சொல்லும் வகையிலே உணர்ச்சிப் பெருக்குடன் திருத்தொண்டர் தொகையைப்பாடி முடிக்கிறார். இதுவே திருத்தொண்டர் புராணத் துக்குக் கருப்பொருள் என்று நான் கருதுகிறேன்.

சேக்கிழார் பெருமான் வருண ரீதியில் பார்க்குமிடத்து அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு வருணங்களிலிருந்தும் நாயன்மார்களை அறிமுகப்படுத்துகிறார்.

சாதிக்கொரு அடியவர்:

சாதி ரீதியில் பார்க்குமிடத்து இடையர், சான் றோர், வேடர், செக்கார், ஏகாலியர், குயவர் ஆகிய பிற்பட்ட சாதிகளிலிருந்தும், பாணர்— பறையர் என்னும் தாழ்த்தப்பட்ட சாதிகளிலிருந் தும் நாயன்மார்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

திருத்தொண்டர் புராணம் தோன்றியில்லை யேல், ஏற்றத் தாழ்வோடு கூடிய சாதி வேறு பாடுகள் ''நீதி''யாக்கப்பட்டிருக்கும்.

அப்பூதியடிகள் நால் வருணத்தில் தலை வருண மான அந்தண வருணத்தில் வந்தவர்; அப்பரடிகள் நால் வருணத்தில் கடை வருணமான வேளாளர் வகுப்பில் பிறந்தவர். அப்படியிருந்தும் அப்பரடி களைக் குருவாக ஏற்கிறார் அப்பூதியடிகள்!

''சான்றான்'' எனப்படும் எனக்கும் 'வேளா ளர்' எனப்படும் அப்பரடிகளுக்கும் நடுவே இடை வெளி அதிகம். ஆம்; எட்டிபிடிக்க முடியாதபடி; ஆனால், அந்தணரான அப்பூதியடிகளுக்கும் வேளாளரான அப்பரடிகளுக்கும் நடுவே உள்ள இடைவெளி குறைவுதான். அப்படியிருந்தும், அந்த இடைவெளியைப் போக்குவதற்கும் அப்பரடி களைக் குருவாகவும் அப்பூதியடிகளை சீடராக வும் காட்டவேண்டியிருக்கிறது திருத்தொண்டர் புராணத்திலே.

புனிதவதியார் காலத்தால் மூத்தவர்:

காரைக்கால் அம்மையார் எனப்படும் புனித வதியாரையும் 63 நாயன்மார்களில் ஒருவராக்கி பெண்குலத்திற்குப் பெருமை தேடித்தந்திருக்கிறார் சேக்கிழார். அறுபத்து மூவரிலே காலத்தால் மூத்த வர் காரைக்கால் அம்மையார் தான்.

அம்மையாரின் வாழ்க்கையிலே ஒரு சிக்கல் ஏற்பட்டு விடுகிறது. தெய்வம்தொழாமல் கண வனையே தெய்வமாகக் கருதித்தொழும் குறள் நெறியைக் காரைக்கால் அம்மையார் கடைப் பிடிக்க முடியவில்லை. அவருக்குக் கணவனாக வாய்த்த பரமதத்தன் என்பான், ''ஒரு மாதிரி'' யானவன்!. வணிகனாதலால் தான் கடையிலிருந்த வண்ணம் இரு மாங்கனிகளை வாங்கி வீட்டிலுள்ள மனைவிக்கு அனுப்பி வைத்தான்.

சிவனடியார் ஒருவர் வந்து காரைக்காலம்மை யாரை அணுகி அமுது படைக்கும்படி கேட்டார். சோறு சமைத்து முடிந்ததென்றாலும் கறி சமைத்து முடியாத நேரம் அது. அதனால், கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை அறுத்துப் படைத்துச் சிவனடியாரைப் பசியாற்றி னார் அம்மையார்.

கணவன் ஒரு மாதிரி

பகலுணவுக்கு வீட்டிற்கு வந்த கணவன் பரம தத்தனுக்குத் தன்னிடமிருந்த மற்றொரு மாங் கனியை அறுத்துப்படைத்து அம்மையார் உணவு கொடுத்தார்.

பரமதத்த செட்டியார் மாங்கனியின் சுவைக்கு அடிமையாகித் தாம் அனுப்பிய இரு கனிகளில் மற்றொன்றையும் தமக்கே தரும்படி கேட்டார்.

''அந்தக்கனியைச் சிவனடியாருக்குப்படைத்து விட்டேன்'' என்று சொல்ல அம்மையாருக்குத் துணிவில்லை. ஏனெனில், அவன் 'பகுத்தறிவு வாதி'.

அதனால், கணவர் அனுப்பிய மற்றொரு கனியையும் எடுத்து வருவார்போல் நடித்து, மறைவாகச் சென்று, மாங்கனியொன்றைத் தந்து உதவுமாறு இறைவனை வேண்டினார். கடவுளும் கனி கொடுத்தார்.

அதனை அறுத்து, கணவனுக்குப் படைத்தார் காரைக்காலம்மையார்.

முன்னர் தந்த கனிக்கும் பின்னர் தந்த கனிக்கும் சுவையில் வேற்றுமை இருப்பதை கணவர் கண்டுகொண்டார். 'இரண்டாவதாக நீ தந்தது நான் கொடுத்தனுப்பிய கனிகளில் ஒன்று அல்ல'' என்றார்.

அம்மையார் பயந்து விட்டார். ''கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை'' என்பது தமிழ்ப் பழமொழி. அதன்படி, இரண்டாவது கனியையும் கணவன் கேட்டபோதே, ''அதனை சிவனடியாருக்குப் படைத்துவிட்டேன்'' என்று உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும். மாறாக அதை மறைத்துப்பேசியது கற்புநெறிக்கு இழுக்குத்தான். அதைவிடவும், ''மற்றொரு கனியையும் கொண்டு வா'' என்று கணவன் கேட்டபோது, அதை கொண்டு வருவதுபோலப் பாசாங்கு செய்து, மறைமுகமாகச் சென்று கடவுளை வேண்டி கனி கொண்டு வந்தது கணவனை ஏமாற்றியதாகும்.

இது, அம்மையாரின் உள்ளத்தை வருத்தியது. ''இரண்டாவது நீ படைத்த கனி நான் கொடுத்த கனிகளில் ஒன்று அல்ல'' என்று கணவன் தத்தனார் சொன்னதும், ''உள்ளபடி உரைப்பதுவே கடன்'' என்ற முடிவுக்கு வந்து, நடந்ததைச் சொல்லி விடுகிறார். சிவனடியாருக்குக் கனி படைத்த செய்தியைச் சொல்லி விடுகிறார்.

தத்தனார் காரைக்காலம்மையாரைக் கை விட்டு, மதுரைக்கு ஓடி விடுகிறார்.

அம்மையாரின் உறவினர் அவரை மதுரைக்கு அழைத்துச் சென்று கணவரோடு சேர்க்க முயல்கின்றனர். அவனோ அம்மையாரை ஏற்கமறுத்து விடுகிறான்.

வேறொரு திருமணமும் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறான். அவருக்குப் பிறந்த பெண் மகவுக்குப் 'புனிதவதி' என்று பெயரிடுகிறான். இது, முதல் மனைவியிடம் இருந்த அன்பைக் காட்டுவதுதான். ஆனால், தெய்வ பக்தையாகிய அவளை ஏற்றுக்கொள்ள அவன் தயாராக இல்லை.

இந்நிலையிலே காரைக்காலம்மையார், எஞ்சியுள்ள வாழ்நாட்கள் முழுவதிலும் தம்மை சிவ வழிபாட்டிலே ஈடுபடுத்திக் கொள்ள முடிவெடுத்து விடுகிறார். ஆயினும், கணவன் உயிருடன் இருக்கும்போது தெய்வத்தை வழிபடுவது கற்பு நெறியாகாது என்பதன்றோ வள்ளுவர் வகுத்த சட்டம். அது நினைவுக்கு வருகிறது புனிதவதிக்கு! அதனால், எனக்கும் பரமதத்தனுக்கும் உள்ள உறவு இந்த ஊனுடலைப் பொறுத்ததுதானே என்று கருதி,

''ஈங்கிவன் குறித்த கொள்கை
இது; இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழிந்து நின்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும்''

என்று இறையருளைப் பிரார்த்திக்கிறார்.

அக்கணமே, என்பு மட்டுமே கொண்ட பேய் வடிவு பெற்றார். தலைகீழாக நடந்து கயிலை சென்றார். இது சேக்கிழார் சொல்லும் காரைக்காலம்மையார் கதை.

என் பேரன் கேட்கிறான். '' தாத்தா '' தசைகள் கழிந்த என்புடலை மட்டுமே கொண்டு, தலை கீழாக நடந்து கயிலைக்குச் செல்ல முடியுமா? என்று. அவன் கொஞ்சம் பகுத்தறிவுவாதி.

சேக்கிழார் பகுத்தறிவுக்குப் பகைவர் அல்ல. வள்ளுவர் சொன்னபடி திருமணமான பின்னர், பெண்கள் கணவனையே தெய்வமாகக் கொள்ள வேண்டுமானால், அந்தக் கணவன்மார்கள் தெய்வத்தை வழிபடுபவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

அப்படியிருந்தால், மனைவியானவள் கணவனை வழிபடுவதே தெய்வ வழிபாடு ஆகிவிடும்.

கணவன் நாத்திகனானால், மனைவியின் வாழ்க்கை என்ன கதியாகிவிடும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவே அறுபத்து மூவரில் ஒருவராக புனிதவதியை சேர்த்துக் காட்டுகிறார்.

என்பு வடிவு கொண்டு புனிதவதியார்கயிலைக்குச் சென்ற கதையானது கற்பனையாக இருக்கலாம். அதை விடவும் பண்பாட்டிலே அதிக கவனம் செலுத்துகிறார் சேக்கிழார்.

அதனாற்றான் கணவனுக்காகத் தேவைப் பட்ட மாமிச பிண்டத்தை உதறி எறிந்ததாகக் கற்பனைச் செய்தியைத் தந்து வள்ளுவர் வகுத்த கற்பு நெறிச் சட்டத்திற்குப் புனிதவதியைக் கட்டுப்படுத்துகிறார்.

சேக்கிழார் அமைச்சர் ஆன வரலாறு

''அருள்மொழியரசு''
கிருபானந்தவாரியார்

தான் அறிவாளியாக இருக்கவேண்டும் என்று எண்ணுவது எல்லோருக்கும் இயல்பே. தான் மூடனாக இருக்கவேண்டும் என்று யாரும் எண்ணமாட்டார்கள். தன்னைவிட வேறு ஒருவன் அறிஞனாக இருப்பதில் ஒருவனுக்கு மகிழ்ச்சியேற்படுவதில்லை. ஆனால் தன்னைவிட தன் மகன் அறிவுற்றவனாக ஆவதில் அளவற்ற மகிழ்ச்சியுண்டாகின்றது.

''தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை
மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது''

என்பது பொய்யாமொழி.

தொண்டைநாட்டில் குன்றத்தூர் என்பது ஒரு பழம்பதி. வளமை மிக்க அப்பதியிலே வேளாளர் குலத்திலே, சேக்கிழார் மரபில் ஒருவர் தோன்றினார். அவருக்கு இரண்டு குமார மணிகள், மூத்தவர் அருண்மொழித்தேவர், இளையவர் பாலறாவாயர்.

இரு மக்களைப்பெற்று இல்லறமாய நல்லறத்தில் நின்ற அவர் மக்கட்குக் கல்வி பயிற்றுவித்தனர். மூத்தவராய அருண்மொழித்தேவர் அதிநுட்பமான மதி நுட்பமுடையவராய்த் திகழ்ந்தார்.

தந்தையார் சோழ மன்னவனிடத்தில் தொழில் புரிந்திருந்தனர். சோழன் அவரை நோக்கி மூன்று வினாக்கள் வினாவினான். மறு நாள் வந்து விடைகூறுமாறு பணித்தான். ''உலகினும் பெரியது எது?'' மலையினும் பெரியது எது? ''கடலினும் பெரியது எது''? இந்த மூன்று வினாக்களையும் எழுதிய ஓலையை எடுத்து வந்து அவர் தனது இல்லஞ்சேர்ந்தார். இரவெல்லாம் ஆராய்கின்றார். நூல்களையெல்லாம் புரட்டுகின்றார். சுற்றும் முற்றும் பார்க்கின்றார்.

கண் சுழன்றது கருத்துஞ் சுழன்றது
மண் சுழன்றது மனமுஞ் சுழன்றது
எண் சுழன்றது இதயஞ் சுழன்றது
விண் சுழன்றது விடைவிளங்காமையால்.

என்ன சொல்வது? என்று ஏங்கினார். பொழுது விடிந்தது. உரிய காலத்தில் வழக்கம் போல் நீராடவில்லை. வழிபாடு செய்யவில்லை. உச்சிப்பொழுதாயிற்று எழுந்தார். திருநீறு பூசினார். வாடிய உள்ளத்துடன் புறப்பட்டார்.

தந்தையின் வாட்டத்தையும் நாட்டத்தையும் அருண்மொழித்தேவர் கண்டார். பிதாவைத் தொழுதார். ''முந்தையங்கடவுளாகிய தந்தையே! ஏன் தங்கள் திருமுகம் வாடியுளது? ஆடிய பாதத்தை நினைப்பவர் வாடி வருந்துவானேன்? ஏன் வழிபாடும் செவ்வையாகப் புரியவில்லை? உணவும் உட்கொள்ளவில்லை. தங்கள் வருத்தத்திற்குக் காரணம் யாது?'' என்று வினவினார்.

அருளரசு கிருபானந்த வாரியார் அவர்கள் தமக்கே உரிய நாடக பாணியில் தொண்டை நாட்டு அருண்மொழித் தேவர் சோழநாட்டு உத்தம சோழப் பல்லவராய் அமைச்சர் ஆன வரலாற்றைக் கற்பவர் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறார்.

தந்தை: என் கண்ணே! நீயோ சிறு பிள்ளை. இது பெரிய விஷயம். உனக்கேன் இந்த விசாரம். உன்னிடம் சொல்வதனால்

என்ன பயன்? அப்பா! அரசர் முனிவு கொள் வார். விலகு, நான் போகவேண்டும்.

அருண்மொழித்தேவர்: - என்னையீன்ற எந்தையே! அது என்ன விஷயம்? கருணை கூர்ந்து சொல்லுங்கள். பொன்னம்பலநாதர் தங்கள் உள்ளக்கவலையைத் தீர்ப்பார்.

தந்தை: மகனே! மன்னர் என்னை மூன்று வினாக்கள் வினவினார். ''உலகினும் பெரியது எது? மலையினும் பெரியது எது? கடலினும் பெரியது எது? என்ற மூன்று கேள்விகளுக்கும் விடை கூறவேண்டும்'' என்றார். இவைகளைத் தான் இரவெல்லாம் சிந்தித்தேன். விளங்க வில்லை. தக்க விடை கூறவில்லை யென்றால் அரசன் தண்டிப்பான்.

அருண்மொழித்தேவர்: ஐயனே! இதற்கா இவ்வளவு பெரிய ஆலோசனையும் வாட்டமும்! நன்றாக இருக்கின்றது. நீங்கள் சாப்பிடுங்கள். இந்த மூன்று வினாக்களுக்கும் அடியேன் விடை யெழுதித் தருகின்றேன். விடையவன் இருக்க விடைக்கு என்ன பஞ்சம்.

தந்தை அதிசயமுற்றார். சிறிது உணவு உட்கொண்டார். அதற்குள் அருள்மொழித் தேவர் ஒரு ஓலையைக் கொணர்ந்து தந்தை பால் தந்தார். அதில் பின்வரும் திருக்குறட் பாக்கள் எழுதப்பட்டிருந்தன.

உலகத்தினும் பெரியது

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது

மலையினும் பெரியது

நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப்பெரிது

கடலினும் பெரியது

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது

தந்தையார் மூன்று வினாக்களுக்கும் தக்க விடைகள் திருக்குறளிலிருந்தே தேர்ந்து எடுத்த மகனுடைய அறிவுடைமையை எண்ணி இறும் பூது கொண்டார். எல்லையற்ற மகிழ்ச்சியடைந் தார். அந்த ஓலையைக் கொண்டுபோய் சோழ மன்னராகிய அநபாயனிடம் தந்தார். மன் னர் பெருமான் அதனை உற்று நோக்கினார். கையெழுத்து அவருடையது அன்றென உணர்ந் தார். "ஐயா! இது யாருடைய எழுத்து" என்று கேட்டார். பெரியவர் மன்னரை வணங்கி, ''வேந்தர் பெருமானே! வினாக்களுக்கு விடை யுணராது விழித்தேன். இரவுப்பொழுதையும் சிந்தனையில் கழித்தேன். என் மதியையும் பழித்தேன். எனது செல்லப்பிள்ளை இவ் விடையை எழுதிக்கொடுத்தான்'' என்றார்.

சோழமன்னர் கேட்டு வியப்பும் நயப்பும் அடைந்தார். உடனே பல்லக்கு அனுப்பி அருள் மொழித்தேவரை வரவழைத்தார். வரவேற்று உபசரித்தார். அவருடைய திருமுகமண்டலத் தில் பொலியும் அருட்பொலிவைக்கண்டார், அவருடைய பெருமையை நன்கு மதித்தார். அவரைத் தமது அரசாங்கத்திற்கு முதன் மந் திரியாக அமைத்துக் கொண்டார். குடும்பப் பெயராகிய சேக்கிழார் என்ற நாமமே அவ ருடைய நாமமாக வழங்கலாயிற்று.

சேக்கிழாருக்கு உத்தமச்சோழபல்லவர் என்ற பட்டத்தையும் தந்தார். வாணிதேவி, தான் வாழும் பூவையும், சங்கப்புலவோர் பாவையும், பிரமதேவரது நாவையும், பொதிய மலை மேவும் முனிவர் கோவையும் மறந்து சேக்கிழார் திருநாவில் குடிகொண்டாள்.

பூவை மறந்தனள் வெண்டா மரைமயில்
புகல்தரு சங்கப்புலவோர் சொற்

பாவை மறந்தனள் தேச சுபாடித
பயனை மறந்தனள் பதுமத்தோன்

நாவை மறந்தனள் பொதிய மலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனும்

கோவை மறந்தனள் சேவையர் காவல
னார்திரு நாவிற் குடிகொண்டாள்

அநபாயமன்னர் சிவகதை படியாது அவ கதை படிப்பதை யறிந்த சேக்கிழார்

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்''.

என்றபடி மன்னரை இடித்துக்கூறி, திருத் தொண்டர் புராணத்தைப் பாடியருளினார்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்
படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத்
தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணக்கதை உலகறிய
விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார்
அடிபோற்றி.

— — — —

திருவள்ளுவர் காட்டும் பெண்வழிச் சேறல்

டாக்டர் பொற்கோ
தமிழ்ப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

ஒருவனுக்குக்கேடும் அறிவும் வருவது வெளிப்படையாகத் தெரிந்த புறப்பகைகளால் மட்டும் அல்ல. உட்பகையாலும் கேடு வரும். பெரியாரை மதித்துப் போற்றாமல் அவருக்குப்பிழை செய்வதாலும் கேடுவரும். இவற்றுக்கெல்லாம் மேலாகப் பெண்மையின் கவர்ச்சிக்கு ஆட்பட்டு ஒருவன் தன்னுடைய தலைமைக் குணங்களை இழந்து மனைவியின் சொல் வழிச்சென்று அவளைத்தான் வழி நடத்தாமல் அவளைப் பின்பற்றுவதாலும் கேடு வரும்.

மனைவியின் மன உணர்வைமதிப்பதும் அவள் மனத்துக்கு நிறைவும், மகிழ்வும் அளிப்பதும் தேவை தான் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் கணவன் அங்கே அளவறிந்து ஒழுகவேண்டும். பொதுவாகப் பெண்மைமென்மையினாலும் அன்பினாலும் ஆண்மையின் மீது முடிந்தவரை தன் செல்வாக்கைச் செலுத்த விரும்புகிறது. தொடர்ந்து அப்படிச் செல்வாக்கைச் செலுத்த விரும்புகிறதே தவிரப் பெண்மைக்கு முழுக்க முழுக்க அடிமைப்பட்ட ஒரு ஆணை அந்தப் பெண்மை விரும்புவதில்லை.

பெண்மைக்குள் சென்று பதுங்கிவிடாத ஆண்மையும் வேண்டும். அப்படிப் பதுங்காத நிலையில் பெண்மை தன் செல்வாக்கை ஆண்மை மீது செலுத்துகிற முயற்சியும் வேண்டும்.

எல்லாக்காலத்துக்கும், எல்லாச் சமயங்களுக்கும் எல்லா நாட்டினர்க்கும் பொதுவான உண்மைகளைச் சொல்ல வந்த வள்ளுவர் இந்த அதிகாரத்தில் கூறியுள்ள செய்திகள் அவ்வளவு பொதுமை வாய்ந்தவைதானா என்று ஒரு வினா எழுதல் இயல்பு. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உயர்வு தாழ்வு மனப்பான்மை கூடாது என்பதும் இரு சாராரின் இயல்புகளும் செயல்களும்இணைந்துதான் மனித சமுதாயம் நிறைவு பெறுகிறது என்பதும் உண்மையே. ஆனால் ஆண் பெண் சமத்துவ வேட்கையே வெறியாக மாறி அந்த வெறியில் ஆண்மைக்கும் பெண்மைக்கும் இடையே உள்ள பண்பு வேற்றுமைகளை மறந்துவிடுவது அறிவுடைமை ஆகாது. அப்படி மறந்துவிட்டால் பேணத்தக்க பெண்மையும், ஆளத்தக்கஆண்மையும் நிலை குலைந்து சீரழிந்துவிடும். பெண்வழிச் சேறல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைச் சற்று நிதானமாகவே நாம் சிந்திக்க வேண்டும். பெண்வழிச் சேறல் என்பது மனைவியின் பெண்மையை விரும்பி எப்போதும் அவளையே பின்பற்றி செல்லுதல்.

இன்ப நாட்டத்தின் காரணமாக மனைவியை விரும்பி எப்போதும் அவளுடைய முகம் கோணாமல் நடக்கும் ஒருவன் வாழ்க்கையில் சிற்றின்பத்துக்கு அப்பாலும் உள்ள விழுமிய பயனை அடைய மாட்டான். அறம் உணர்ந்து பொருள் செய்து புகழ் பெற விரும்பும் ஒருவன் தன் மனைவி எவ்வளவு சிறந்தவள் ஆனாலும் இன்ப நாட்டத்தோடு அவளுக்கு அடங்கிக் கிடப்பதை விரும்பமாட்டான்.

ஆண்மைக்கு உரிய இயல்புகளையும் செயல்களையும் உணர்ந்து போற்றாமல் இன்ப நாட்டத்தினால் மனைவியினது பெண்மையை எப்போதும் விரும்புபவன் தன் வாழ்க்கையில் எய்திய பேறு முழுவதும் மற்றவர்க்கு நகைக்கத்தக்கதாகவே இருப்பதோடு அவனுக்கும் அது நாணத்தைத் தரும். அதாவது மற்றவர் வியந்து பாராட்டிப் போற்றுகின்ற பேற்றினை அவனால் பெற முடியாது என்பதாகும்.

ஒரு குடும்பத்தில் இயல்பாகவே மனைவி அடக்கமுடையவளாக இருப்பது அந்தக் குடும்பத்துக்கே பெருமை. அப்படி இல்லாமல் கணவன் மனைவியை அடக்கி வைக்க முயலுவதும் மனைவி முயலுவதும் அகங்காரம் பிடித்த வெறும் போராட்டமாகவே முடியும். அப்படிப்பட்ட போராட்டத்துக்கு இடம் கொடுத்து விட்டால் அதற்கு ஒரு முடிவே இல்லை. மனைவியிடம் இயல்பாகவே அடக்கம் இல்லாமற்போனால் போராட்டத்துக்கு அஞ்சிக் கணவனே அடங்கிப் போக வேண்டி நேரும். கணவனிடம் அப்படிப்பட்ட அச்சங்கலந்த அடக்கம் தோன்றிவிட்டால் சமுதாயத்தில் உள்ள நல்லவர்களிடையே அவன் போக்கு நகைப்புக்குரியதாகிவிடும். மேலும் அவன் மனத்திலேயே அவன் போக்கு மற்றவர்கள் முன் நாணத்தை உண்டாக்கிவிடும்.

இயல்பாகவே மனைவியிடம் அடக்கம் இல்லாத நிலையில் மனைவிக்கு அஞ்சி வாழ்கின்ற ஒருவன் எவ்வளவு அருஞ்செயல்களைச் செய்தாலும் மக்கள் மத்தியில் அவனுடைய வினையாண்மைக்கு ஒரு சிறப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விடும். இது சமுதாயத்தில் நாம் இயல்பாகவே காணுகின்ற காட்சி.

மனைவிக்கு அஞ்சி வாழ்கின்ற ஒருவன் நல்லவர்களுக்கு நன்மை செய்யக்கூட அஞ்சுவான். ஒருவன் தன் மனைவிக்கு ஏன் அப்படி அஞ்ச வேண்டும்? இருவரும் அடங்காமல் போராடினால் அந்தப் போராட்டம் மற்றவர்களுக்கு நகைப்புக்கு இடமாகுமே என்று அஞ்சலாம். அல்லது

(முழுக்க முழுக்க வாழ்க்கைத் துணைவியின் வார்த்தைக்கு அடங்கி அஞ்சியொழுகும் ஆண், எத்தகைய ஆற்றல் பொருந்தியவன் ஆயினும், மக்களால் மதிக்கப்படமாட்டான் என்பதை வள்ளுவரின் குறள் வழி விளக்குகிறார் பேராசிரியர் டாக்டர் பொற்கோ.)

மனைவி மனம் போல நடக்காவிட்டால் அவளால் கிடைக்க வேண்டிய அன்பும் அவள் பெண்மையால் கிடைக்க வேண்டிய மகிழ்வும் கிடைக்காமல் போகுமே! என்று எண்ணி அஞ்சலாம். பெண்வழிச் செல்லும் ஒருவனுக்கு உள்ள அச்சம் எதனால் என்பதை ஒரு திருக்குறளில் வள்ளுவப் பெருந்தகை மிக நுட்பமாகவும் தெளிவாகவும் சொல்லுகிறார். வேண்டிய எல்லாவற்றையும் பெற்று மகிழ்ந்து வாழக்கூடிய தேவர்களைப் போலவாழ்ந்தாலும் கூடத் தன்னுடைய மனைவியின் அழகிய இனிய தோள்களுக்கு அஞ்சுபவன் எந்தப் பெருமையும் இல்லாதவனாகவே கருதப்படுவான்.

மனைவிக்குக் கணவன் மேல் எழுகின்ற இயல்பான அன்பினால் தோன்றும் அவளது தோள் மலர்ச்சியைக் குறிப்பாக உணர்ந்து இருபாலும் அன்பு பெருக அவளுடைய தோள்களைத் தழுவுகின்ற ஆண்மைக்கும், மனைவி விரும்பும்படியெல்லாம் நடந்து அவளை மகிழ்வித்து அவனுக்குஅவன் இரங்கிப் பிச்சை போடுவது போல் அவள் இணங்க அவளது தோள்களைத் தழுவுகின்ற ஆண்மைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள அளவு வேறுபாடு உள்ளது. இனிய அழகிய தோள்களின் தழுவல் கிடைக்காமல் போய் விடுமோ என்று அஞ்சிமனைவியின் மனம் போல நடக்கும் ஒருவன் எவ்வளவு வசதிகளோடு வாழ்ந்தாலும், சமுதாயம் அவனைப் பெருமைக்குரியவனாக ஏற்பது இல்லை. இதைத் தான் வள்ளுவர் சுருக்கமாகவும் அழகாகவும் நுட்பமாகவும்

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சுபவர்.

என்று கூறிச்செல்கிறார்.

ஒருவன் தானே எண்ணித்தக்கது எது, தகாதது எது என்று உணர்ந்து காரியம் ஆற்றித்தன்மனைவியையும் நடத்திச் செல்ல வேண்டும். அப்படி இல்லாமல் இதைச்செய், அதைச்செய் என்றுஅவன் மனைவியே எப்பொழுதும் அவனை எழுப்பி ஏவ அதன் பிறகு அவள் வழிநின்று ஏவல் செய்து வாழும் ஆண்மையை விட இயல்பாகவே நாணம் உடைய பெண்மையே பெருமைக்குரியது. மற்றவர்க்கு நகை விளைத்துத்தானும் நாணிக்கிடக்கும் ஆண்மை மிக இழிவானது என்பதைத்தான் இங்கே காட்டுகிறார். ஆண் தன்மை நிலைகுலைந்து நிற்பதுதான் இங்கே இழிவாகக் கருதப்படுகிறது.

தன் மனைவியின் அழகான நெற்றி எங்கே சுருங்குமோ என்று அஞ்சி அவள் விரும்பியபடியெல்லாம் நடப்பவன் தானே சிந்தித்துச் செயல்படும் ஆற்றலை இழந்துவிடுகிறான். அவன் தன்னுடைய நண்பர்களுக்குத் துன்பம் நேர்ந்தபோது கூட உதவி செய்ய முன்வரமாட்டான். எந்த விதமான அறங்களையும் அவன் செய்யமாட்டான். அவன் மனைவியின் விருப்பங்களை நிறைவேற்ற அவன் அவளுக்கு ஒரு கருவிபோல மட்டுமே பயன்படுவான். இத்தகைய நிலை பொதுவாக எந்த ஆண்மகனுக்கும் நேரக் கூடாது. சிறப்பாக அரசர்களுக்கும், தலைவர்களுக்கும் இந்த நிலைமை கூடவே கூடாது.

தன்னுடைய மனைவி சொன்னால்தான் எந்த வேலையும் செய்வான் என்ற அளவுக்குத்தாழ்ந்து போன ஒருவனிடம் அறமும் இருக்காது. பொருளும் இருக்காது. இன்பமும் கூட இருக்காது. ஆராய்ந்து வினை செய்யும் உள்ளத்தையும்வினை செய்யும் வாய்ப்பையும் பெற்றவர்கள் பெண்மையை விரும்பி அதிலேயே மனத்தைப்புதைத்துப் பேதமைகளுக்கு ஆளாவது இல்லை. ஆண்மையை இழந்து மனைவி மனத்தை மகிழ்வித்து அதன் மூலம் அவளுடைய பெண்மையைப் பெறும் அவனுக்கு எந்த விதமான பயனும் இல்லை. ஆண்மையும், பெண்மையும் இணைவதில் இன்பமே தவிர ஒன்றையொன்று அழிப்பதிலும் விழுங்குவதிலும் இன்பம் இல்லை.

பிறன்மனை நயவாமை வேண்டும்

பாய்ந்து வரும் பாம்புக் கஞ்சேன் தீயின் நாவுக்கஞ்சேன்
கூர்வாள் முனைக்கும் அஞ்சேன் ஆயினும்
ஒன்றுக் கஞ்சுவேன்; ஒன்றுக்கு நடுங்குவேன்
பிறன்மனை பிறன்பொருள் எனும் சூதுக்கஞ்சுவேன்
முன்பு அச்சமற்ற இராவணன் என்னவானான்?
அஞ்சுவேன் ஐயா கூடல சங்கம தேவா!

போலிகள் போலிகளே

நாள்பல அன்னத்தொடு வாழ்ந்தாலும் என்?
நாரை தூய்மையாக வல்லதோ!
கற்பகத் தோடிருந்தாலும் வற்றல்மரம் தளிர்த்துப் பயன் தருமோ?
கங்கையினுள் பாறை ஆழ்ந்து கிடந்தாலும்
மிருதுவாய் மாற வல்லதோ?
காசித் தலத்தில் நாய் வாழ்ந்தாலும்
அதன்பால் பஞ்சாமிர்தம் ஒக்குமோ?
தீர்த்தத்தில் கழுதையிருந்தாலும் முனிவனாக முடியுமோ?
கலப்பாலில் கிடந்தாலும் கரித்துண்டு
வெள்ளை யாவ துண்டோ?
கூடல சங்கம தேவா! நின்னடியார் நடுவுளிருந்தாலும்
தீயவன் நல்லடி யானாவ துண்டோ?

—மகான்பசவர்

The following particulars are furnished regarding the OWNERSHIP of "THIRUKKOIL" the monthly newspaper, published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV
(See Rule 8)

1. Place of publication	...	119, Nungambakkam High Road, Madras - 600 034.
2. Periodicity of publication	...	Monthly
3. Printer's Name	...	Thiru M. N. Shanmugam, L.P.T. Assistant Works Manager.
Nationality	...	Indian
Address	...	Tamil Arasu Press, Government Estate, Madras - 600 002.
4. Publisher's Name	...	T.R. KALYANASUNDARAM I.A.S. Thiru K. Aludiapillai, I.A.S. Commissioner, H.R. & C.E. Admn. Department.
Nationality	...	Indian
Address	...	H.R. & C.E. Admn. Department, Madras - 600 034.
5. Editor's Name	...	Dr. D. Amirthalingam, M.A.PH.D.,
Nationality	...	Indian
Address	...	H.R. & C.E. Admn. Department, 119, Nungambakkam High Road, Madras - 600 034.
6. Name and address of the individual who own the Newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	...	Government Publications.

T.R. KALYANASUNDARAM.

I, K. Aludiapillai, I.A.S., Commissioner, H. R. & C. E. Admn. Department, Madras-600 034. hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

T.R. KALYANASUNDARAM

Sd. K. Aludiapillai
PUBLISHER

Dated : 25—7—'85

திருநாளைப் போவார்

"செந்தமிழ்ச் செம்மல்"
பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A.
சென்னை.

ஏயர்கோன் கலிக்காமர் நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தியிடம் வெறுப்புக் கொண்டு அவரைக் காணவும் மறுக்கிறார். ஆனால், அவருக்கு வந்த சூலை நோயை நம்பியாரூரர் வந்து தான் தீர்க்கமுடியும் என இறைவன் கனவிடைக் கூறியதற்கு ஏயர்கோன் இறுக்கின்ற விடை, வியப்பையும் அச்சத்தையும் விளைவிக்கின்றது.

''எம்பிரான்! எந்தை தந்தை
தந்தைஎம் கூட்டம் எல்லாம்
தம்பிரான் நீரே என்று
வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை
என்னைநின்று ஈரும் சூலை
வம்பென ஆண்டு கொண்டான்
ஒருவனோ தீர்ப்பன் வந்து?''
''மற்றவன் தீர்க்கில் தீராது
ஒழிந்துஎனை வருத்தல் நன்றால்''

—(ஏயர்-392)

உயிர் போக, வாட்டி வருத்துஞ் சூலையை நம்பியாரூரன் வந்து தீர்ப்பதினும் அது தீராது இருத்தலே நன்று என்று பகரும் நெஞ்சுரம் தான் இவர்களை அடியார்களாக ஆக்குகிறது. அதுவும் வந்து கூறுபவன் சாதாரண மனிதன் அல்லன்! இறைவனே கூறுவதானாலும் தம் கொள்கையினின்றும் பிறழக் கூடாது என்று நினைப்பவர்கள் இவ்வடியார்கள். இத்தகைய ஒரு பிடிவாதம் சரியா தவறா என்பது இங்கு வினாவன்று. இதனைத் தவறு என்று கூறுகிறவர்கள் பெருநிலையைப்பற்றி அறியாதவர்கள். அடியார்கள் இத்தகைய நெஞ்சுரம் கொண்டிருந்தமையால்தான் செயற்கரிய செய்ய முடிந்தது. உலகத்தில் மாபெரும் காரியங்களைச் சாதித்தவர்கள் அனைவருமே இத்தகைய உரம் வாய்ந்தவர்கள்தாம். இதனை விளங்கிக் கொள்ள முடியாதவர்கள் அடியார்களையும் மற்றப் பெரியார்களையும் 'பிடிவாத குணமுடையார்' என்று கூறுவர். அதுபற்றி அடியார்கள் என்றுமே கவலைப்படுவதில்லை.

இந்த அடிப்படையை மனத்துட்கொண்டு நந்தனாரின் மனநிலையையும் செயல்களையும் நினைத்துப் பார்க்க வேண்டும். சிதம்பரத்திற்குப் போகலாமா வேண்டாமா என்று பல நாள் சிந்தனையிலேயே கழித்து விட்ட நந்தனார் ஒரு வகையாக மனத்தில் திடங்கொண்டு சிதம்பரத்திற்கு வந்தே விட்டார். வந்ததும் அவருடைய பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தில்லையின் எல்லையை அடைந்த பெரியார் அங்கேயே வணங்கி எழுந்தார். ஊர் முழுவதும் வேள்வி செய்வதால் உண்டாகிய புகையும், மடங்களில் நெருக்கமும் கண்டார். கண்டவுடன் என்ன நினைவு தோன்றிற்று? 'அல்கும் தம் குலம் நினைந்தே அஞ்சி அணைந்திலர் நின்றார்' என்கிறார் ஆசிரியர்.

''செல்கின்ற போழ்துஅந்தத்
திருஎல்லை பணிந்துஎழுந்து
பல்கும்வெந் தீவளர்த்த
பயில்வேள்வி எழும்புகையும்
மல்குபெரும் கிடைஓதும்
மடங்கள் நெருங் கினவும்கண்டு
அல்கும்தம் குலநினைந்தே
அஞ்சிஅணைந்திலர் நின்றார்''

திருநாளைப் போவார் எரிமுழ்கி எழுந்த வரலாற்றின் உண்மையை தம் ஆராய்ச்சித் திறத்தோடு நிறுவும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்களின் இக்கட்டுரை திறனாய்வாளர்களுக்கு நல்விருந்து.

இப்பாடலின் இறுதி அடி நந்தனாரின் மனம் வேறு வழியில் திசை திரும்பிவிட்டதை நமக்கு அறிவுறுத்துகிறது.

எத்தனை நாள்கள் சிதம்பரத்தைப் பற்றி நினைந்து, எவ்வாறாயினும் அங்கே சென்று நடராஜப் பெருமானை வணங்கவேண்டுமென்று அல்லும் பகலும் அதே நினைவாகக் காலம் கழித்தார்?' 'நாளை போவேன், நாளை எப்படியும் போவேன், நாளைஇல்லாவிடினும்அதற்கும் அடுத்தநாள், அதற்கு அடுத்த நாள்உறுதியாகப் போவேன்'' என்று திருநாளைப் போவார் விழிப்பிலும் உறக்கத்திலும் எல்லாம் ஒரே நினைவாக இருந்தார். ஆனால், இந்த நினைவு தோன்றும் பொழுதெல்லாம் இதற்கு எதிராகக் குலத்தை நினைந்து, 'அங்கே செல்வது உறு குலத்தோடு இசையவில்லை' என்ற எண்ணம் தோன்றியது. இவ்விரண்டு மாறுபட்ட எண்ணங்களின் இடையே நிகழ்ந்த போராட்டத்தின் முடிவில் போக வேண்டுமென்ற எண்ணம் ஒரு வகையாக வெற்றி பெற்றுவிட்டது. இந்த எண்ணம் வலுப்பெற்றுத் தில்லைக்குப் புறப்பட்ட உடனேயே நந்தனாரின் மனத்திலிருந்து சாதி பற்றிய எண்ணம் மறைந்திருக்க வேண்டும். சாதி பற்றிய எண்ணத்தை வென்றுதானே தில்லைக்குப் புறப்பட்டார்! எந்த நேரத்தில் புறப்பட முடிவு செய்தாரோ அந்த நேரத்திலேயே சாதியின் இழிவுபற்றிய துயரம் மறைந்திருக்கவேண்டும். அப்படித்தான் நாமும் எதிர்பார்ப்போம். ஆனால், நடந்தது என்னவோ வேறாக இருந்துவிட்டது.

தில்லையின் எல்லையை அடைந்தவுடன், நீண்டகாலமாக அவருடைய மனத்தை நைவித்து வேறு எண்ணமே புகவிடாமல் தனியாக நின்ற ஒரு பேராசை, தில்லை செல்ல வேண்டும் என்ற பேராசை, இப்பொழுது முற்றுப் பெற்றுவிட்டது. எனவே அவருடைய மனத்தில் தேவையில்லாத மற்றோர் எண்ணம் குடிபுகத் தொடங்கிவிட்டது. ஆதனூரில் இருக்கின்ற வரையில் அடிமனத்தில் ஆழத்தில் தங்கியிருந்து, ஒரேவழி வெளிப்பட்டு, அவருக்குத் துயரத்தைத் தந்த சாதிபற்றிய எண்ணம் இப்பொழுது தலை தூக்கிவிட்டது. முன்னமே அவருக்கிருந்த கவலைதானே இது. அப்படியிருக்க இப்பொழுது புதிதாக என்ன நேர்ந்துவிட்டது என்று நாம் ஐயுறலாம். உண்மை என்னவெனில் முன்னரே இந்த எண்ணம் இருப்பினும் இதனை எதிர்த்துப் போராடுகின்ற ஓர் எண்ணம்-அதாவது தில்லை செல்ல வேண்டுமென்ற எண்ணம்—இருந்து வந்தது, இவை இரண்டிடையேயும் போராட்டம் இருந்தமையின் சாதி பற்றிய எண்ணம் வலுப்பெறவில்லை. அது வலுப்பெறவில்லை என்பதற்கு அவர் தில்லைக்குப் புறப்பட்டு வந்ததே சான்றாகும். சாதி பற்றிய எண்ணம் வலுவாக இருந்திருப்பின் தில்லைக்கு வந்தே இருக்க மாட்டார் அல்லவா? ஆதனூரில் இருக்கின்ற வரையில் வலுவிழந்திருந்த இவ்வெண்ணம், தில்லை வந்தவுடன், போராடுவதற்குரிய மற்றோர் எண்ணம் இன்மையினால் தானே வலுப்பெற்று நந்தனாரின் மனம் முழுவதையும் ஆட்கொண்டு தலைவிரித்து ஆடத் தொடங்கிவிட்டது. அதனைத் தான் சேக்கிழார் பெருமான்,

'அல்கும் தம்குலம் நினைந்தே
அஞ்சி அணைந்திலர்''

என்று பேசுகிறார். இந்த மனோநிலையையும் ஒருவாறு கடந்து ஊருக்குள் நுழைந்த நந்தனார் மறுபடியும் கோயில்புறம் செல்ல விரும்பாமல் தில்லையைச் சுற்றி வருகிறார்.

''இப்பரிசா யிருக்கவெனக்
கெய்தல்அரி தென்றஞ்சி
அப்பதியின் மதிற்புறத்தில்
ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க
உள்ளுருகிக் கைதொழுது
செப்பரிய திருவெல்லை
வலங்கொண்டு செல்கின்றார்''

எல்லையிலேயே தோன்றிய சாதி பற்றிய இவ்வச்சம், ஊருக்குள் போனவுடன் பன்மடங்காக பெருகிவிட்டதை அறிகின்றோம்.

'இப்பரிசாயிருக்க எனக்கு எய்தலரிது' என்று அஞ்சினார் என்று அறிகிறோம். இந்த எண்ணம் அவரை முற்றிலும் ஆட்கொண்டு விட்ட சூழ்நிலையில் பல நாள்கள் அங்குத் தங்கிப் பொழுதைக் கழிக்கிறார். ஒவ்வொரு நாளும் உறங்கப் போகும்பொழுது, எல்லையற்ற சிவ பக்தியுடையவராகிய அவர் இறைவனுடைய திருவடிகளையே நினைந்து உறங்கப் போயிருப்பார் என்று நாம் கருதுவோம். ஆனால், உண்மையில் நிகழ்ந்தது அதுவன்று எனச் சேக்கிழார் கூறுகிறார்.

''இன்னல் தரும் இழிபிறவி
இது தடைஎன்றே துயில்வார்''

என்று கவிஞர் பாடுகிறார். 'என்றே துயில்வார்' என்ற சொற்கள் இங்கு ஆராயத்தக்கன. இந்த ஓர் எண்ணத்தைத் தவிர, அவருடைய மனத்தில் இறைவனைப் பற்றிய எண்ணம் கூட இல்லை என்பதை நமக்கு அறிவுறுத்துவதற்குப் போலும் 'என்றே' என்ற தேற்றேகாரம் கொடுத்துப் பேசுகிறார். எனவே ஆதனூரில் இருந்த இந்தத் தாழ்வு மனப்பான்மை, தில்லைக்கு வந்த பின் விஸ்வரூபம் எடுத்து நந்தனாரை முழுவதுமாக ஆட்கொண்டு விட்டது. இறைவனைப் பற்றிய நினைவைக் கூடஅமுக்கி, சாதி பற்றிய கவலை அடியாரை முழுக்க ஆட்படுத்திவிட்டது.

இத்தகைய ஒரு நிலையில் அந்த நடராஜப் பெருமானே வந்து 'உன் சாதிபற்றிய கவலை வேண்டா, நீ கோயிலுக்கு வா' என்று அருளி யிருப்பினும் நெஞ்சுரம் உடைய அடியாராகிய நந்தனார் அதைப் பொருட்படுத்தி இருக்கமாட்டார். இம் மனநிலைக்குக் காரணமான பிறவி போனாலொழிய நந்தனார் அமைதியாக ஆண்டவனை வழிபட்டிருக்க முடியாது.

இந்நிலையில் இரண்டு எண்ணங்கள் நம் மனத்தில் எழுகின்றன. முதலாவது எண்ணம், துயருடைய பிறவி போய் நீங்குமாறு இறப்பினைத் தந்து இறைவன் அவரை ஆட்கொண்டிருக்கலாம். இரண்டாவதாக, திருப்புன்கூரில் நந்தியை விலகச் செய்தது போலவும், திருவாலங்காட்டில் ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஊரின் வெளியே வந்து காட்சி தந்ததுபோலவும் இறைவன் காட்சி தந்திருக்கலாம். இவற்றுள் முதலாவதாக உள்ளதை சற்று ஆராயலாம். நந்தனாருக்கு இறப்பைத் தந்து வீடுபேறு அருளியிருப்பின் இறைவனுடைய கருணைக்கே களங்கம் ஏற்பட்டிருக்கும். ஆனால் இந்த அடியார் வேண்டியது யாது? இறைவனுடைய திருவடியை அடையவேண்டுமென்று என்றுமே அவர் விரும்பினதாகத்தெரியவில்லை, அதன் எதிராக இந்த உடலோடு அவனுடைய திருவடியைக் கும்பிட வேண்டுமென்றுதான் விரும்பினார். எனவே அவர் விருப்பத்திற்கு எதிராக உடம்பை ஒழித்து உயிருக்கு வீடுபேறு அருளுவது கருணைக் கடலாகிய இறைவனுக்கு உகந்ததன்று.

இனி இரண்டாவதாக உள்ள காரணத்தையும் சிந்திக்கலாம். 'வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்று பாடிச் சென்றார் திருநாவுக்கரசர். அப்படியானால் நந்தனார் விரும்பியது யாது? அவர் வேண்டுவதைத் தருவதுதானே முறை. திருப்புன்கூர் சென்ற நந்தனார், கோயிலுக்கு உள்ளே செல்வதற்குத் தடையாகத் தம்முடைய பிறவி இருக்கின்றது என்று நினைத்ததாகத் தெரியவில்லை.

''சீரேறும் இசைபாடித்
திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும்
எனநினைத்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயிற்புன்கூர்க்
கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலகஅருள்
புரிந்தருளிப் புலப்படுத்தார்''

இறைவனைத் திருவாயில் நேரே கும்பிடவேண்டும் என்றுமட்டுமே நந்தன் நினைந்தார். அந்த நினைவைச் செயல்படுத்தினவன் இறைவன். நேரே கும்பிடுவதற்குத் தடையாயிருந்த நந்தியம்பெருமானை விலகியிருக்க அருள் செய்தான். ஆனால், தில்லைக்கு வந்த நந்தனார் இறைவனை நேரே கும்பிடவேண்டும் அல்லது வீடுபேற்றைப் பெறவேண்டும் என்று நினைத்து இருப்பாரேயானால், இறைவன் அதற்கு அருள் செய்திருப்பான். அவ்வாறு இல்லாமல் கோயிலுக்குள் சென்று வழிபட வேண்டும்; அதற்குத் தடையாகத் தம்முடைய பிறவி உள்ளது என்ற துயரத்தில் ஆழ்ந்து 'இன்னல் தரும் இழிபிறவி இது தடை' என்று நினைந்தார். ஆதலால் அந்தப் பிறவியாகிய தடையைப் போக்க முனைந்தான் பெருமான். 'இழிபிறவி' என்று நந்தனார் குறிப்பிடுவது பொதுவாகக் கூறப்படும் மானுடப் பிறவியை அன்று. அவர் குறிப்பது அரிசன குலத்தில் தோன்றிய தம்முடைய உடம்பைத்தான் என்பதை அறிதல் வேண்டும். முன்னே கூறியபடி, பிறவியைப் போக்கி வீடுபேற்றைத் தந்தால் நந்தனுடைய விருப்பம் முற்றிலும் நிறைவேறியதாகாது. அவருடைய தாழ்வு மனப்பான்மைக்கு ஒரே ஒரு மருந்து தான் உண்டு. இந்தப் பிறவியிலேயே அவரால் இழிவானதென்று கருதப்பட்ட இந்த உடம்பை மாற்றி அவர் உயர்பிறப்பு என்று கருதும் வேறோர் உடம்பு தருவது தவிர வேறு வழியில்லை. அடியாரின் நோயை நாடிய இறைவன், பின்னர் அந்த நோயின் முதல் நாடி. அடுத்து அந்நோய் தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பான ஒரு வழியை மேற்கொள்ளுகின்றான்.

''இப்பிறவி போய்நீங்க
எரியிடை நீ மூழ்கி
முப்புரி நூல் மார்பருடன்
முன்னணைவாய்''

என்று கூறிப்போனான்.

அடியார் மன நோய்க்குரிய முறையில் மருத்துவம் செய்த வைத்தியநாதன், இத்தகைய ஓர் அடியாருக்குத் தாம் அருள் செய்ததை மற்றவர்களும் அறியவேண்டும் என்ற கருத்தில் போலும், தில்லைவாழ் அந்தணர்களிடமும் கனவில் தோன்றி, நந்தனாருக்கு எரி அமைத்துத் தருமாறு கட்டளையிட்டு மறைந்தான். இறைவனால் கட்டளையிடப் பெற்ற அவர்கள் நந்தனாரின் பெருமையை அறிந்து, அவருக்குத் தீயமைத்துத் தரத்தமக்குத் தகுதியோ உரிமையோ இல்லை என்பதனையும் நன்கு உணர்ந்தனர். என்றாலும், இறைவன் கட்டளையினை மீற அஞ்சித் தீ அமைத்துத் தரவேண்டி நந்தனிடம் சென்று இதோ பேசுகிறார்கள்.

''ஐயரே! அம்பலவர்
அருளாலிப் பொழுதணைந்தோம்
வெய்யதழல் அமைத்துமக்குத்
தரவேண்டி எனவிளம்ப
நையுமனத் திருத்தொண்டர்
நான் உய்ந்தேன் எனத்தொழுதார்
தெய்வமறை முனிவர்களும்
தீயமைத்தபடி மொழிந்தார்;

இதிலுள்ள சிறப்பைச் சற்று ஆராய வேண்டும். தில்லையில் வாழ்கின்ற அந்தணர்கள், தம்முடைய பிறப்பு இழிவானது என்று வருந்தும் நந்தனை நோக்கி, 'ஐயரே! என விளிக்கிறார்கள். ஐயரே! என்று அழைத்துவிட்டுப் பிறகு அவருக்குத் தீ அமைத்துத் தருகின்றோம் என்றால் அது பொருத்தமற்றதாகும். சாதியால் ஐயர்கள் ஆகிய அவர்கள், சாதியால் அரிசனக் குலத்தவராகிய நந்தனை மனமார 'ஐயரே' என்று அழைத்துவிட்டமையால், நந்தனுடைய குலம் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை என்பதை அறிவித்து விட்டார்கள். அப்படியிருந்தும் அடுத்த அடியில், அவர் முழுகுவதற்குத் தீ அமைத்துத்தர இருக்கிறார்கள் என்றால், இவை இரண்டும் எவ்வளவு பொருத்தமற்ற கூற்றுகள். இதிலுள்ள பொருத்தமின்மையை நன்கு அறிந்த தில்லைவாழ் அந்தணர், மிக்க அச்சத்தோடு தம் கருத்தை வெளியிடுகின்றார்கள். 'ஐயரே! உமக்கு அழல் அமைத்துத் தர வேண்டுமென்றோ, அதில் தாங்கள் மூழ்கி எழ வேண்டுமென்றோ நாங்கள் கனவிலும் கருத மாட்டோம். ஆனால், பின்னர் ஏன் வந்தோமென்றால், அது, நீங்களும் நாங்களும் மீற முடியாத இறைவனுடைய கட்டளையாகும். என்று சொல்பவர்கள்போல்,

''ஐயரே! அம்பலவர்
அருளால் இப்பொழு தணைந்தோம்
வெய்யதழல் அமைத்து
உமக்குத் தரவேண்டி''

என்று பேசுகிறார்கள். தம்முடைய விருப்பு வெறுப்புகளை அப்பால் ஒதுக்கி வைத்து விட்டுத் தலைவனின் (இறைவன்) கட்டளையை நிறைவேற்றும் அடிமைகளாக அப்பெருமக்கள் காட்சியளிக்கின்றனர்.

இந்நிலையில் நந்தனுடைய மன நிலையைச் சற்றுக் காணவேண்டும். அவர்கள் அவ்வாறு கூறியவுடன் நந்தன் கூறிய சொற்கள், ''நான் உய்ந்தேன்'' என்பது ஆகும். எவ்வளவு தூரம் அவருடைய மனத்தில் சாதி பற்றிய துயரம் இருந்திருந்தால், இத்தகைய சொற்கள் வெளிப்பட்டிருக்கும். ஆடவல்ல பெருமான் தம்முடைய கனவில் வந்து பேசியதுகூட அவ்வடியாருக்குப் பெரிதாகப்படவில்லை. ஆனால், 'நெருப்பு அமைத்துத் தரப்போகின்றோம்' என்று கூறியவுடன், 'நான் உய்ந்தேன்' என்று கூறுவாரேயானால், எவ்வளவு ஆழமாக அவருடைய மனத்துயர் இருந்தது என்பதையும், அத்துயர் 'நெருப்பில் மூழ்குதல்' என்ற இரண்டு சொற்களால் ஆறிவிட்டது என்பதையும் அறிய முடிகிறது.

வரலாற்றின் இந்த நுணுக்கத்தையும், சேக்கிழாரின் தெய்வப் புலமையையும், அடியார்களுடைய நெஞ்சுரத்தையும், மனித மனத்தில் தோன்றும் தாழ்வு மனப்பான்மை போன்ற நீக்குவதற்கரிய நோய்களையும் நன்கு அறிந்த பெருமக்களே, திருநாளைப்போவார் வரலாற்றில் அப்பெருமகன் தீக் குளிப்பதற்கு நேர்ந்த காரணத்தையும் செம்மையாக அறிய முடியும். இன்று சமுதாயத்தில் காணப்படும் குறைவு நிறைவுகளை வைத்துக்கொண்டு, அன்றைய சமுதாயத்திலும் இத்தகைய ஒரு கொடுமை நிகழ்ந்தது என்று பேசுவது, சேக்கிழாரையோ நந்தனாரையோ அடியார்களையோ அறியாதவர்கள் செயலேயாகும்.

எது உயர்ந்தது ?

அரசர்மனையில் அரசியாய் வாழ்வதினும்
அடியர் மனையில் அடிமையாய் வாழ்வது உயர்ந்தது
ஏனெனில் ''அபிடேக நீர் கொண்டு வா'' ''மலர் கொண்டு வை''
''இலிங்கத்துக்கு நிவேதனம் தா'' என்பர்
கூடல சங்கமனின் பெருமனையில்
''அடியார் மிச்சில் உண்பாய், சேவகனே'' என்பரன்றே.

வேடன் ஓர் முயல்கொண்டு வந்தால் பணம் தந்து வாங்குவீர் ஐயா
நாடாண்ட அரசன் பிணத்தை அரைப் பாக்குக்கும் கொள்வாரிலை காணீர்
முயலை விட இழிந்தது மனித வாழ்வு,
முழுமையாய் நம்புவீர் எங்கள் கூடலசங்கமதேவனை.

—மகான்பசவர்

தெய்வச் சேக்கிழார் திருநாள் விழா படமும் விளக்கமும்



குன்றத்தூர் திருநாகேசுவரர் ஆலயத்தில் 18.5.85 அன்று தெய்வச் சேக்கிழார் திருமேனியை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரே முன்நின்று எழுந்தருள வைக்கும் ஒப்பற்ற காட்சி. அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்களும் சைதை சா. துரைசாமி, எம்.எல்.ஏ., அவர்களும் உடன் உள்ளனர்.

பன்னிருத் திருமுறை பாராயணம் வீதிவுலா வரும்காட்சி. மயிலை குருஜீ சுந்தரராம சுவாமிகள், சிவநெறிச்செல்வர் மா. து. குப்புசாமிமுதலியார், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை உயர் அதிகாரிகள் திரு ந. ச. இராமச்சந்திரன், பி.ஏ.,பி.எல்., திரு ந. சுவாமிநாதன், பி.ஏ.,பி.எல்., ஆகியோர் படத்தில் உள்ளனர்.

தெய்வச்சேக்கிழார் திருநாள் விழாவின் முதல்நாள் காலை நிகழ்ச்சியைத்தொடங்கி வைத்து முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் சிறப்புரை யாற்றுதல்.



திருப்பணிச்செல்வர் வள்ளல் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் உரையாற்றுதல.

தெய்வச்சேக்கிழார் திருநாள் விழாவின் முதல்நாள் மாலை நிகழ்ச்சிக்கு தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளாரும், தவத்திரு சுந்தரசுவாமிகளும் வருகைதரும் காட்சி.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியாரைப் பாராட்டுதல்.



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர், பேராசிரியர் மொ. அ. துரை அரங்கனாரைப் பாராட்டுதல்.



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் பண்டித நடேசனாரைப் பாராட்டுதல்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர், கலைமாமணி தருமபுரம் சாமிநாதன் அவர்களைப் பாராட்டுதல்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சருடன் சேக்கிழார் விழாவில் பாராட்டப்பெற்ற சான்றோர் பெருமக்கள் ஒருசேர வீற்றிருக்கும் காட்சி.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், மறைந்த திருக்கோயில் ஆசிரியர் 'புலவர்ஏறு' ந. ரா. முருகவேள் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்துச் சிறப்பு செய்தல்.

தெய்வச்சேக்கிழார் திருநாள் விழா இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியில் ''சேக்கிழார் கண்ட சேயிழையர்'' கருத்தரங்கம் தொடங்கப்பெறுதல்.



பழநிக்கோயில் தக்கார் திரு பொன்னுசாமி அவர்கள் ரூ.15,000 தெய்வச் சேக்கிழார் விழாச் செலவை ஈடுகட்டும் வண்ணம் மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பனாரிடம் வழங்குகிறார்.



ஆணையர் திரு கு. ஆளுடைய பிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்கள் உரை நிகழ்த்துதல்.



திருமதி சாரதா நம்பியாரூரான் சொற்பொழிவாற்றுதல்.



தெய்வச் சேக்கிழார் திருநாள் நிறைவு விழாவில் மாண்புமிகு சட்டமேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் தலைமையுரை ஆற்றுதல்.



தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவை அரசின் சார்பில் கொண்டாட முனைந்துநின்ற அமைச்சர் பெருந்தகை மாண்புமிகு இராம. வீரப்பனாருக்குத் திருமயிலை கபாலீசுவரர் கோயிலின் தக்கார் மா. து. குப்புசாமி முதலியார் பொன்னாடை அணிவிக்கும் காட்சி.

சேக்கிழார்

பெரியபுராணம் பாடிய வரலாறு

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

புராண வரலாறு

''சேக்கிழார் புராணம்'' என்ற 'திருத்தொண்டர் புராண வரலாறு'' என்ற நூலிற் சேக்கிழார் பெரிய புராணம் பாட நேர்ந்த சந்தர்ப்பத்தைப்பற்றிக் கூறப்படும் செய்தி இதுவாகும்:—

'சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கனிடம் முதல் அமைச்சராக இருந்தபொழுது, அரசன் சீவக சிந்தாமணி என்ற சமண காவியம் படிக்கக் கேட்டு மகிழ்ந்து வந்தான். அரசன் இங்ஙனம் சமண காவியத்தில் ஈடுபாடு காட்டி மகிழ்வதைச் சேக்கிழார் கண்டுமனம் வருந்தினார்; அவர் ஒருநாள் இளவரசனைத் தனியே கண்டு, ''ஒழுக்கமற்ற அமணரது காவியம், நம் அரசரை ஒத்த சீவகன் என்பவனது வரலாறு கூறுவதாகும். அதனைப் படிப்பதனாலோ கேட்பதனாலோ அரசர் பெறத்தக்க நன்மை ஒன்றும் இல்லை. அதனை விடுத்து இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாகும் நாயன்மார் வரலாறுகள் கொண்ட சிவகதை படிப்பது மிகவும் நல்லது" என்று மொழிந்தனர்.

இம்மொழியை இளவரசன் வாயிலாக உணர்ந்த சோழர் பெருமான் சேக்கிழாரை வரவழைத்து, ''நீர் மொழிந்த சிவகதை நவகதையோ? புராணமோ? முன்னூல் உண்டோ? நானிலத்திற்சொன்னவர் யார்? கேட்டவர் யார்? சிவனடியாருள் இன்றும் உயிருடன் இருப்பவர் உளரோ?'' எனப் பலவாறு, நாயன்மார்களைச் சிறிதளவேனும் அறியாத - சோழர் மரபுக்கே முற்றும் புதிய ஓர் அரசன் கேட்பது போலக் கேள்விகள் கேட்டான்.

சேக்கிழார், ''அறுபத்துமூன்று நாயன்மார் வரலாறுகளை உள்ளடக்கிச் சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடியருளினார்; இராஜராஜன் காலத்து நம்பியாண்டார் நம்பி அதனை ஓரளவு வகைப்படுத்தி, நாயனார் வரலாறு ஒன்றுக்குச் செய்யுள் ஒன்று வீதம் 'திருத்தொண்டர் திரு அந்தாதி' என்ற ஒரு நூல் பாடியுள்ளார். அந்நாயன்மார் வரலாறுகள் இம்மைக்கும் மறுமைக்கும் பற்றாவன. அவற்றைக் கேட்பதும், அந்தநாயன்மார் வரலாறுகளிற் பொதிந்துள்ள உயரிய கருத்துக்களை உணர்ந்து நடப்பதும் நன்மை பயக்கும்''. என்றார். அரசன் ''அஃதாயின், அந்நாயன்மார் வரலாறுகளை நீரே கூறி அருளுக,'' என்று வேண்டினான் சேக்கிழார் தொகை-வகை - திருமுறைகள் இவற்றைத் துணையாகக்கொண்டு நாயன்மார் வரலாறுகளை விரித்து உரைத்தார். சோழ பெருமான் கேட்டு வியந்தான்; ''அமைச்சர் ஏறே, இவ்வியத்தகு அடியார்தள் வரலாறுகளைப் பெரியதோர் புராணமாகப் பாடி முடிக்க நீரே வல்லவர் ஆதலின், அதனைப் பாடி யருள்க'' என்று கூறி, அவரைத் தில்லைக்கு அனுப்பினான்; அவருக்கு வேண்டும் பொருள் வசதி, ஆள்வசதிகளை அளித்தான்.

சீவக சிந்தாமணியில் தோய்ந்திருந்த சோழன் அநபாயனைச் செம்மைப்படுத்தவே சேக்கிழார் பெரியபுராணம் பாடினார் எனப் பலரும் கூறியிருக்க அதற்கு மாறுபட்ட கருத்தை எடுத்துக் காட்டி நிறுவுகிறார் டாக்டர் மா. இராசமாணிக்கனார். மறைந்த அப்பேரறிஞரின் ''சேக்கிழார்'' என்ற சிறந்த ஆராய்ச்சி நூலிலிருந்து இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

'சேக்கிழார் சிதம்பரம் சென்று கூத்தப் பெருமானைப் பணிந்து ''ஐயனே, பெருமை மிக்க நின்அடியார் வரலாறுகளை மிகச் சிறிய

யேனாகிய யான் எங்ஙனம் கூறவல்லேன்! நான் பாட இருக்கும் பெருநூற்கு 'முதல்' தந்து ஆசீர்வதித்து அருளுக'', என்று சிற்றம்பலத்தின் முன் திரிகரண சுத்தியாக நின்று வேண்டினார். அப்பொழுது ''உலகலாம்'' என்ற தொடர் சேக்கிழார் காதிற்பட்டது. அவர் அதனைக் கூத்தப்பிரானது அருள் மொழியாகக் கொண்டு புராணம் பாடத்தொடங்கி, ஓராண்டில் பாடி முடித்தார்.''

இவ்வரலாறு பற்றிய ஆராய்ச்சி

சிந்தாமணி

அநபாய சோழன் சீவக சிந்தாமணி என்ற சமண காவியத்தைப் படிக்கக்கேட்டுப் பரவசமடைந்தான் என்பது இப்புராணம் மட்டுமே கூறும் செய்தி. இதனை உறுதிப்படுத்த வேறு சான்று இல்லை. அரசன் மெய்யாகவே அந்நூலைப்படிக்கக்கேட்டான் எனினும், அதனால் இழுக்கொன்றும் இல்லை. சிந்தாமணி படிப்பதாலோ பிறர்படிக்கத்தான் கேட்பதாலோ அரசன் கெட்டுவிடவோ சமயம் மாறவோ வழியில்லை. மிகச் சிறந்த தலையாய புலவர் பெருமான் என்று மதிக்கத் தக்க சேக்கிழாரே சிந்தாமணியைச் செவ்வையாகப்படித்தவர் என்பது தெரிகிறது. உயர்தரப்புலவர் பெருமக்கள், புலமைபெற எல்லாச்சமயத்தவர் நூல்களையும் படித்தே தீருவர். அவர்கட்குப் புலமை பெரிதே தவிரக் கேவலம் சமய வேறுபாடு பெரிதன்று. அந்த முறையில் சேக்கிழார் சிந்தாமணியை நன்றாகப் படித்தவராவர். சிந்தாமணி சோழர்காலத்து முதற்காவிய நூல் ஆகும். பெரிய புராணம் இரண்டாம் காவிய நூலாகும். கம்பராமாயணம் அடுத்துச் செய்யப்பட்ட நூலாகும். சேக்கிழார் சிந்தாமணியை நன்றாய் படித்தாற்போலவே, பின்வந்த கம்பர் பெருமான் சிந்தாமணியையும் பெரிய புராணத்தையும் அழுத்தமாகப் படித்தவர் என்பது அவரது இராமாயணம் கொண்டு கூறலாம்.

இங்ஙனம் சிந்தாமணியைச் செவ்வையாக படித்த பழுதற்ற புலவராகிய சேக்கிழார், அரசனை மட்டும் படிக்கலாகாது என்றோ படிக்கக் கேட்கலாகாது என்றோ தடுத்தார் என்பது நம்பத்தக்கதன்று. 'அவர் தடுத்தார்; அந்நூலை இழித்துரைத்தார்' என்பது அவரது பெரும்புலமைக்கும் தலைமை அமைச்சர் பதவிக்கும் ஏற்றதாகாது. சிறந்த பௌத்த-சமண-சைவ வாதங்களைப் பழுதற்ற சாத்திரீய முறையில் விளக்கமாகப் பாடியுள்ள சேக்கிழார் பௌத்த, சமணச்சார்பான சமய நூல்களை நன்கு கற்ற நவையறு புலவராவர். அப்பெரியார் மீது இத்தகைய சமய வெறுப்புக்குற்றத்தை ஏற்றிச் கூறல் பெருந்தவறு. அக்குற்றம் சேக்கிழார் புராணம் பாடிய ஆசிரியரையே சாரும்.

அநபாயன் கேள்விகள்

'சிவகதை' கேட்டல் நல்லது என்று சேக்கிழார் கூறக்கேட்ட சோழ மன்னன், நாயன்மார் பெயர்களைக் கூட அறியாத பாமரனாக இருந்து, ''நவகதையோ? புராணமோ? முன்னூல் உண்டோ? நானிலத்திற்சொன்னவர் யார்? கேட்டவர் யார்? எனப் பலவாறு வெளிநாட்டான் ஒருவன் கேட்டாற்போலக் கூறப்படும் வினாக்கள் சோழர் வரலாற்றை அறிந்த அறிஞர் நகைக்கத்தக்கனவாகும். மெய்யாகவே இக்கேள்விகளை அநபாயன் கேட்டிருத்தல் இயலுமா? என்பது இங்கு ஆராயத்தக்கது.

சோழர் சைவ சமயத்தொண்டு

சோழர் சைவ சமயத்தைத் தம் உயிர்போலக் கருதிப் பாதுகாத்து வளர்த்து வந்தவர் என்பது வரலாறு கூறும் உண்மை. சோழப் பேரரசை ஏற்படுத்திய ஆதித்த சோழன் காவிரியின் பிறப்பிடத்திலிருந்து கடல்புகும் வரை அதன் இருகரைகளிலும் சிவன் கோயில்களை புதியனவாகக் கட்டியும், பழையனவற்றைப் புதுக்கியும் அழியாப்புகழ் பெற்றான். அவன் மகனான பராந்தக சோழன் அளப்பரிய சிவப் பணிகள் செய்தான்; கூத்தப்பெருமான் அம்பலத்தைப் பொன்மயமாக்கினான். உலகப்புகழ் பெற்ற இராஜராஜன் செய்த சைவப் பணிகள் அளவிடற்கரியன. நம்பியை கொண்டு சைவ திருமுறைகளை வகுத்து ஒழுங்குபடுத்தியவன் அப்பெருமகன் அல்லனோ? சிறப்புடைய நாயன்மார் உருவச்சிலைகள் எழுப்பி அவற்றுக்குப் பூசை, விழாக்கள் குறைவற நடக்க ஏற்பாடு செய்தவன் அப்பெருந்தகை அல்லனோ? அவன் மகனான பெருவீரன் இராஜேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோழீச்சரம் வியத்தகு பெருங் கோயில் அல்லவா? 'தேவார நாயகம்' என்ற பெயருடன் தேவாரத் திருமுறைகளை வளம் பெற வளர்த்த பேரரசன் இராஜேந்திரன் எனின், அவனது சைவச் சமயப்பற்றை என்னெனக் கூறி வியப்பது!

சோழ-சாளுக்கிய மரபில் வந்த முதல் குலோத்துங்கன் பெரிய சிவபக்தன். இவன் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்து சிறப்புப் பெற்றவன்; தில்லைக் கூத்தப்பிரானைத் தன் குலநாயகமாக கொண்டவன். அவன் மகனான விக்கிரம சோழன் அவனினும் சிறந்த சிவபக்தன். அவன் கூத்தபிரான் கோயில் முழுவதையும் பொன்மயமாக்க முயன்றவன்; சிதம்பரம் கோவிலுக்குத் திருப்பணிகள் பல செய்தவன்.

அவனது அமைச்சனும் தானைத்தலைவனுமான நரலோகவீரன் சிதம்பரத்திலும் திருவதிகையிலும் செய்த திருப்பணிகள் எண்ணிறந்தன; பாராட்டத்தக்கன; வியக்கத்தக்கன.

சோழ மாதேவியர் செய்த சைவத் திருப்பணிகள் தாம் எண்ணத் தொலையுமோ? கண்டராதித்தரது மனைவியாரும் இராஜராஜன் பாட்டியாருமாகிய செம்பியன் மாதேவியார் கட்டிய புதிய சிவன் கோவில்கள் பல; புதுப்பித்த பாடல் பெற்ற கோவில்கள் பல. பொன் வெள்ளிப்பாத்திரங்கள் அளிக்கப்பெற்ற கோவில்கள் பல. இராஜராஜன் தமக்கையரான குந்தவையார் செய்த அறப்பணிகள் பலவாகும். இராஜராஜன் மனைவியரான உலக மகாதேவியார் திருவையாற்றில் கோவில் கட்டி புகழ் பெற்றவர். இராஜராஜன் மகளிர் செய்த திருப்பணிகள் பல. இங்ஙனமே ஒவ்வொரு சோழ அரசன் மனைவியரும் மகளிரும் செய்துள்ள சைவத்திருப்பணிகள் பலவாகும்.

அநபாயன் காலம்

இங்ஙனம் கனவிலும் சிவத்தொண்டை மறவாத சோழர் மரபில் வந்தவன் அநபாயன்: கூத்தப்பிரானை 'நம் குலநாயகம்' என்று அழைத்து அளப்பரிய திருப்பணிகளை அப்பெருமான் கோவிலுக்குச் செய்ய முனைந்த விக்கிரம சோழன் திருமகன் அநபாயன், அவன் தன் தந்தை அரைகுறையாக விட்டுச்சென்ற திருப்பணிகளை முற்றச்செய்து அழியாப்புகழ் பெற்றவன். அவனது சைவப் பற்றைக் குலோத்துங்கன் உலா, இராஜராஜன் கோவை இவற்றிலும் எண்ணிறந்த கல்வெட்டுக்களாலும் அறியலாம். இராஜராஜன் காலமுதல்நாயன்மார் உருவச்சிலைகள் ஆங்காங்குப் பேரளவில் எடுப்பித்துப் பூசைகளும் விழாக்களும் நடைபெற்று வந்துள்ளன. அநபாயன் புதுப்பித்த சிதம்பரம் கோவிலிலேயே நரலோகன் விருப்பப்படி திருமுறைகளை ஓத மண்டபம் சமைக்கப்பட்டது. அங்குத் திருமுறைகள் ஓதப்பட்டு வந்தன. அநபாயன் இருந்த சோழர் தலைநகரானகங்கைகொண்டசோழபுரத்துப்பெருங் கோவிலிலேயே சண்டீசர் வரலாறு உணர்த்தும் சிற்பங்கள் இருந்தன; தஞ்சைப்பெரிய கோவிலில் நாயன்மார் உருவச்சிலைகளும் முன்சொன்ன ஓவியங்களும் அழகொழுகக் காட்சி அளித்தன. சுருங்க கூறின் அநபாயன் காலத்தில் நாடெங்கும் சைவமணம் நன்றாக வீசிக்கொண்டிருந்தது. நாயன்மார் வரலாறுகள், திருமுறைகள், பூசைகள், விழாக்கள், சிற்பங்கள், ஓவியங்கள் இவற்றின் வாயிலாக நன்கு பரவியிருந்தன. இத்தகைய பொற்காலத்தில்-சைவ நன்மரபில் பிறந்து வளர்ந்த அநபாயன் ,'நாயன்மார் வரலாறுகளை அறியாத முழுமூடனாக இருந்தான்' என்று சேக்கிழார் புராண ஆசிரியர் கூறியிருத்தல் உண்மைக்கு மாறானதாகும். இஃது அவ்வாசிரியரது அறியாமையை அறிவிப்பதே அன்றி வேறன்று. சேக்கிழார் பெரியபுராணம் பாடியதற்குக் காரணம் கூறவேண்டும் என்பதற்காக ஆசிரியரே சுட்டிச்சொன்ன காரணமாக இது காணப்படுகிறதே தவிர, இக்கூற்றிற் கடுகளவும் உண்மை இருப்பதாக அறிவும் ஆராய்ச்சியும் உடைய பெருமக்கள் கொள்ளார்.

சேக்கிழார் புராண ஆசிரியர் யாவர்?

'இங்ஙனம் பொறுப்பற்ற முறையில் புராணம் பாடிய இந்நூலாசிரியர் யாவர்? என்பது நாம் அறியவேண்டிய ஒன்றாகும். '(1) திருமுறைகண்ட புராணம் (2) சேக்கிழார் புராணம் (3) திருத்தொண்டர் புராணசாரம் (4) திருப்பதிகக்கோவை (5) திருப்புதி கோவை என்ற ஐந்து நூல்களையும் பாடியவர் உமாபதி சிவாசாரியார் என்பவர் என்பது நாட்பட்ட கொள்கையாகும். இக்கூற்றுச் சில ஏடுகளில் உள்ளன; சில ஏடுகளில் இல்லை. உமாபதி சிவாச்சாரியார் என்பவர் சிதம்பரத்தைச் சேர்ந்த 'கொற்றவன் குடி' என்னும் நகரப்பிரிவில் வாழ்ந்தவர். சிறந்த சிவபக்தர். இத்தகைய பெரும் புகழ் பெற்ற சைவப்புலவர் ஒருவர் இந்த ஐந்து நூல்கட்கும் ஆசிரியர் என்பது கூறப்படுகிறது. இதன் உண்மையை இங்கு ஆராய்வோம்.

உமாபதிசிவம் சேக்கிழார் புராண ஆசிரியரா?

சேக்கிழார் புராணத்தில் நாயன்மார் அறுபத்துமூவரைப் பற்றிய குறிப்புகள் காண்கின்றன. 'திருத்தொண்டர் புராணசாரம்' என்ற நூலிலும் அந் நாயன்மார் வரலாறுகள் சுருக்கமாகத் தரப்பெற்றுள்ளன. (1) முதல் நூலில் பல்லவப் பேரரசரான கழற்சிங்கர், ஐயடிகள் காடவர்கோன் இவர்கள் சிற்றரசர் என்று கூறப்பட்டுள்ளனர். ஆயின், பின் நூலில் இவ்விருவரும் பல்லவப்பேரரசர் என்பது தெளிவாகக் காண்கிறது (2)பேரரசர் அறுவர் என்று கூறிச் சிற்றரசரான இடங்கழி நாயனாரும் அந்த அறுவரில் ஒருவராகக் குறிக்கப்பட்டனர். (3) இசையில் வல்லவராக நந்தனார் முதலியோரைக் கூறிய ஆசிரியர் சுந்தரரைக் கூறாது விட்டார். இங்ஙனம் சிறந்த பிழைகள் பல சேக்கிழார் புராணத்துட் காண்கின்றன. மேற்சொன்ன இரண்டு நூல்களையும் செய்தவர் ஒருவராயின், இத்தகைய தவறுகள்-ஒன்றுக்கொன்று முரணாக உள்ள கூற்றுகள் நூலில் இடம் பெற முடியுமா? முடியாது. ஆதலின் முன்னூலைப்பாடியவர் வேறு, பின்னூலைப் பாடியவர் வேறு எனக் கொள்ளலே பொருத்தமாகும்.

திருமுறை கண்ட புராணம்

இராஜராஜன் நம்பியைக் கொண்டு திருமுறைகள் தொகுத்த வரலாற்றைக் கூறுவது இப்புராணம். நம்பி, முதல் ஏழு திருமறைகளைத் தொகுத்தார் என்று கூறி, அவர் மேலுந் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எட்டாந்திருமுறையாகவும், நம்பிக்கே

காலத்தாற் பிற்பட்டவராகக் கருதத்தக்க அடியார் பலர் பாடல்களை ஒன்பதாந்திருமுறையாகவும், அப்பர் சம்பந்தர்க்கே காலத்தாற் முற்பட்டவரான திருமூலர் பாடிய திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும் நாயன்மார் காலத்தவரும் நம்பி காலத்தவருமான கபிலதேவர், பட்டினத்தார் போன்ற அடியார் பாக்களைப் பதினோராந் திருமுறையாகவும் நம்பி தொகுத்தார் என்று திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. நம்பிக்குப்பிற்பட்டவர் பாக்களை நம்பியே தொகுக்க முடியுமா? காலத்தால் முற்பட்ட அடியார்கள் பாக்களைப் பின் வைக்க இயலுமா? அங்ஙனம் வைப்பதில் ஒரு வகைப் பொருத்தமேனும் இருக்கவேண்டும் அல்லவா? இவ்விவரங்களை வரலாற்று முறையிலும் ஆராய்ச்சி முறையிலும் இருந்து கவனிப்பின், நம்பி முதல் ஏழு திருமுறைகளையே தொகுத்தனர். பிற்பட்ட திருமுறைகளை அவைகிடைக்கக் கிடைக்கப் பின்வந்த அறிஞர் முறைப்படுத்தினர் என்று கொள்வதே மிகவும் பொருத்தமாகத் தெரிகிறது.

சேக்கிழார் புராண ஆசிரியர் வேறு உமாபதிசிவம் வேறு

இவை அனைத்தையும் நடுவுநிலையிலிருந்து ஆராயின், தவறான கருத்துக்கள் பல வற்றைக்கூறும் சேக்கிழார் புராணமும் திருமுறைகண்ட புராணமும் பாடியவர் பொறுப்புள்ள சைவப்பெரும் புலவராகிய உமாபதிசிவம் ஆகார்: ஏனைய மூன்றையும் பாடியவர் உமாபதிசிவம் எனக்கொள்ளலாம் என்ற முடிவே ஏற்புடையதாகும். எனவே, முன்னூல்கள்இரண்டையும் பாடியவர் பெயர் தெரியாத புலவர் ஒருவராவர். அவர் நூல்களை உமாபதிசிவம் பாடினார் எனக் கூறுவதால், புகழ்பெற்ற அச் சைவ சமயப்புலவர்க்குச் சிறுமை உண்டாகுமே தவிரப்பெருமை ஒருபோதும் உண்டாகாது.

இத்தகைய பெயர் தெரியாத புலவர் ஒருவர் கூறிய சேக்கிழார் புராண வரலாற்றில் காணப்படும் சிந்தாமணி பற்றிய செய்தியும் அநபாயன் கேள்விகளும் உண்மைக்கு முற்றும் மாறானவை என்பதறிக.

உண்மை யாதாக இருக்கலாம்?

சைவ நன்மரபில் வந்த அநபாயன், நாயன்மார் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றை அறிந்திருக்கலாம். அவனது முதல் அமைச்சரான சேக்கிழார் சைவக்குடியிற் பிறந்தவர்; இலக்கண இலக்கியங்களைப் பழுதறப்படித்தவர்; சைவத்திருமுறைகளையும் தம் காலத்துச் சைவ சித்தாந்த நூல்களையும் நன்கு கற்ற விற்பன்னராவர். அவர் சோழர் முதல் அமைச்சரானதும், தமது பதவியின் காரணமாகப் பெரு நாடு சுற்றியபொழுது, பல கோவில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு அவர்க்கு இயல்பாகவே ஏற்பட்டது. அப்பொழுது அவர் நாயன்மார் வரலாறு பற்றிய பல குறிப்புகளைத் தொகுத்திருத்தல் கூடும்.

இங்ஙனம் நாளடைவில் அவர் நேரிற் கண்டும் வல்லார்வாய்க் கேட்டும், தம்காலத்து இருந்து இறந்துபட்ட பல நூல்களைப் படித்தும் நாயன்மார் வரலாற்று உண்மைகளை ஒருவாறு செப்பஞ்செய்து வைத்திருத்தல் கூடும். அக்குறிப்புகளை வாழையடி,வாழையாகச் சைவ நன்மரபில் வந்த அநபாய சோழன் இளவரசனான இராஜராஜன் வாயிலாக அறிந்து, சேக்கிழாரைக் கொண்டே நாயன்மார் வரலாறுகளை கேட்டு அறிந்திருக்கலாம். அங்ஙனம் கேட்டு அறிந்து மகிழ்ந்த அப்பரம பக்தன், அடியார் வரலாற்றுக் குறிப்புகளை அரும்பாடுபட்டுத் தொகுத்து வந்தசேக்கிழாரே அவற்றை விரிவான முறையில் ஒரு புராணமாகப் பாடத்தக்கவர் என்று எண்ணி, அங்ஙனமே புராணம் பாடித்தருமாறு அவரை வேண்டியிருத்தல் இயல்பே.

சேக்கிழார் அவ்வேண்டுகோளுக்கு இணங்கிக் கூத்தபிரான் எழுந்தருளியுள்ள சிதம்பரத்தை அடைந்து, அப்பெருமானை வேண்டி, ‘உலகெலாம்’ என்று விண்வழி எழுந்த தொடரையே தமது நூலுக்கு முதலாகக் கொண்டு, நூல் பாடத் தொடங்கியிருக்கலாம். இடையிடையே உண்டான ஐயங்களை அவ்வத்தலம் சம்பந்தமான உத்யோகஸ்தர் வாயிலாகவும் சிற்றரசர் வாயிலாகவும் ஆங்காங்கு இருந்த பெரும் சைவப் புலவர் வாயிலாகவும் போக்கிக் கொண்டு, தமது நூலைப்பாடி முடித்திருக்கலாம். இவ்வாறின்றி, அரசன் வேண்டுகோள்மீதே சேக்கிழார் பல இடங்களையும் சுற்றிப்பார்த்து ஆராய்ந்து, தம் ஆராய்ச்சியிற் போந்த முடிவுகளையும் நூல்களிற் கண்ட செய்திகளையும் சேர்த்துப் புராணம்பாடிமுடித்தார் எனக்கொள்வதும் தவறாகாது.

தெய்வச் சேக்கிழார் திருநாள் விழா

நிகழ்ச்சிகள் தொகுப்பு

டாக்டர் த. அமிர்தலிங்கம்

மயிலை கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் தெய்வச்சேக்கிழார் திருநாள் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் திருமுறைகளின் திரு வீதிப் புறப்பாட்டுடன் விமரிசையாகத் தொடங்கப்பெற்றன. வெள்ளிப்பல்லக்கில் திருமுறைகள் பவனி வர ஓதுவார்கள் நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்துருகுமாறு தேவாரப் பண்ணிசைத்துப் பாடிவர மயிலையில் வாழ் சமயப் பெரியோர்கள் எல்லாம் ''மறுபடியும் நாயன்மார்கள் மண்ணில் தோன்றி வந்து சைவ சமய மறுமலர்ச்சிக்கு ஊக்கமாய்உழைக்கின்றனரோ'' என்று வியந்து பாராட்ட, மயிலை கபாலீசுவரர் கோயில் தக்கார் மா.து.குப்புசாமி முதலியாரும், திருப்பணிச் செல்வர் மயிலை குருஜீ சுந்தர சுவாமிகளும் முன்நின்று நடத்திவர திருமுறைகளின் திருவீதிப்புறப்பாடு நான்கு மாடவீதிகளும் சுற்றியபின், சேக்கிழார் விழா நடைபெறும் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்திற்கு வந்து இனிதே சேர்ந்தது.

அரசவைக் கலைஞர் தருமபுரம் ப.சாமிநாதனின் இறைவணக்கத்தோடு 25.5.85 சனிக்கிழமை காலை 10 மணிஅளவில் சேக்கிழார் விழாவின் கருத்தரங்கக் காலை நிகழ்ச்சிகள் முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் தலைமையில் தொடங்கியது. திரு எம். என்.சங்கரநாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினார். இராமலிங்கர் பணி மன்றத்தின் தலைவர் டாக்டர் என். மகாலிங்கம் தொடக்க உரை ஆற்றினார்.

டாக்டர் மகாலிங்கம் தம்முடைய தொடக்க உரையில் மறைந்துபோன குமரிக் கண்ட வரலாறுகளாலும், அகழ்ந்தெடுக்கப்பட்ட மொஹஞ்சோதாரா மற்றும் ஹரப்பா நாகரீக வரலாறுகளாலும் சுமார் 9000, 10000 ஆண்டுகள் பழமைகொண்டது சைவ சமயம் என்பதை விளக்கினார். இந்தியாவின் பழம்பெரும் மொழிகள் தமிழ், சமஸ்கிருதம், பாலி எனக் குறிப்பிட்ட அவர் மாக்ஸ்முல்லரின் முயற்சியால் வட மொழி நூல்கள் அனைத்தும் ஆங்கில மொழியில் உலகோர் அறியவெளியிடப்பட்டு விட்டதை எடுத்துக்காட்டி, சிறந்த தமிழ் இலக்கியங்கள் இன்னும் ஆங்கிலம் முதலான அயல்மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுச் சிறப்படையாமல் இருப்பதை எடுத்துக் காட்டினார். தருமமிகு சென்னையில் தமிழைத் தேடிப்பிடிப்பதும், கஷ்டமாக இருக்கிறதெனக் குறிப்பிட்ட அவர் ஆங்கிலப் போதனைப் பள்ளிகளால் தமிழ்மொழி சீரழிந்து வருவதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தினார்.

தெய்வச் சேக்கிழார் விழாவை அரசே ஏற்று நடத்துவதைத் தமிழ்கூறும் நல்லுலகின் சார்பாகத் தாம் வரவேற்பதாகக் கூறிய அவர் இதுபோன்ற விழாக்களைத் தமிழகத்தின் தலைநகரில் கொண்டாடுவதோடு, பாரதத்தின் தலைநகரான டெல்லியிலும் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பெரிய புராணம் உள்ளிட்ட பக்தி நூல்களைப் பாடபேதமின்றி ஆங்கிலக் குறிப்புரையுடன் அச்சிட்டு மலிவு விலையில் வெளியிடும் பணியை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டு, அவர் சேக்கிழார் விழாவைத் தொடங்கிவைத்தார்.

முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தம் தலைமையுரையில் சேக்கிழாரின் பெருமையைச் சிறந்த முறையில் எடுத்துக்கூறினார்கள். தெய்வப்புலவர் என்ற பெருமையைப் பெற்றவர்கள் திருவள்ளுவரும் சேக்கிழாரும் மட்டுமே என்று கூறிய அவர் உலகத்தில் மிகப்பல மதங்கள் தோன்றின என்றாலும் அவற்றில் தலைமை வகிப்பன ஒன்பது மதங்களே; நம்முடைய கால்மிதிபடும் ஆசியாவில் தான் அவ்வொன்பது மதங்களும் தோன்றின. இவ்வொன்பது மதங்களிலும் கிருத்துவம் ,இசுலாம் நீங்கலாக ஏழு மதங்கள் நம்

முடைய தாயகமான இந்தியாவில் தான் தோன்றின; அவ்வேழு மதங்களிலும் சைவம், வைணவம், சன்மார்க்கம் ஆகிய மூன்று மதங்களையும் தோற்றிய பெருமை நம் தமிழகத்திற்கே உரியது என்று குறிப்பிட்டார்.

பெரிய புராணத்தின் பெருமையை என்னால் சொல்லவும் முடியாது. சொல்லியும் முடியாது என்று குறிப்பிட்ட முத்தமிழ்க்காவலர் பெரிய புராண நூலையும் அந்நூலைப் பாடிய சேக்கிழாரையும் அநபாயச்சோழ மன்னன் யானை மீதில் ஏற்றுவித்துத் தாமும் ஏறித்தம் இரு கைகளாலும் கவரிக்கொண்டு வீசிய பெருமையையும் வியந்து போற்றினார். பெரிய புராணம் இலக்கிய நூல் மட்டுமல்ல; சமய நூல் மட்டுமல்ல; அரசியல் நூல் மட்டுமல்ல; வரலாற்று நூல் மட்டுமல்ல; ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் வாழ்வை விளக்கிக்காட்டும் ஒரே வாழ்க்கை நூல் என்று அவர் கூறியபோது அவையினர் கையொலி எழுப்பி ஆரவாரித்தனர்.

பெரிய புராணத்தின் முதல் பாட்டு

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இப்பாடலில் 63 நாயன்மாரைக் குறிப்பதாய் 63 எழுத்துக்கள் அமைந்திருப்பதையும், அப்பாடலைப் பிரித்துப் ப க்கும் போது தொகையடியார் ஒன்பதின்மரையும் சேர்த்து 72 எழுத்துக்கள் விளங்கும் சிறப்பையும் வியந்த முத்தமிழ்க்காவலர் சேக்கிழாரின் சொல்லாட்சிச் சிறப்பையும் பாராட்டி மகிழ்ந்தார்.

20 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் 86000 சொற்கள் இருந்தன. வளர்ந்துள்ள கலைச் சொற்களையும் சேர்த்துத் தமிழ்மொழியில் ஒரு லட்சம் சொற்கள் உள்ளன. அத்தனையும் தமிழுக்கே உரிய சொற்கள். இந்தச்சிறப்பு எந்த மொழிக்கும் இல்லை என்று குறிப்பிட்ட முத்தமிழ்க்காவலர் ஆங்கில மொழியில் 15000 சொற்களும், வடமொழியில் அதற்கும் குறைவான சொற்களுமே இருப்பதாகக் குறிப்பிட்டார். பூவைக்குறிக்க வடமொழியில் 'புஷ்பம்' ஆங்கிலத்தில் '' Flower '' என ஒவ்வொரு சொல் மட்டுமே இருக்க, தமிழ்மொழியில் அரும்பு, மொட்டு, மலர், அலர், வீ என உருவத்தோடு பருவத்தையும் சுட்டும் பல சொற்கள் இருப்பதைக் காட்டிய முத்தமிழ்க் காவலர் கசங்கிய மலரைச் சுட்டும் 'செம்மல்' என்ற சொல்லாட்சியும் சேக்கிழாரின் பெரிய புராணத்தில் இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

இந்து சமயத்தில் கூட்டு வழிபாடு வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்திய முத்தமிழ்க்காவலர் ''இசுலாமியரும் கிருத்தவர்களும் திருக்கோயில்களில் சேர்ந்து வாழ்வதால் தான் தெருக்கோடியிலும் கூடச் சேர்ந்து வாழ்கிறார்கள். கூட்டு வழிபாடு, கோஷங்கள் அற்ற அமைதி வழிபாடு இந்து சமயத்திலும் வேண்டும்'' என வற்புறுத்தினார்.

இறுதியாக முத்தமிழ்க்காவலர் ''சேக்கிழார் பெருமான் அமைச்சர் பெருமான்; அவர் மட்டுமல்ல அமைச்சர்; மாணிக்கவாசகர் அமைச்சர்; குலச்சிறையார் அமைச்சர்; இன்னும் பலர் அமைச்சர்களே. சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் கொண்ட அந்த அமைச்சர்களின் பாரம்பரியம் அற்றுப்போய்விடவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதுபோல் திகழ்கிறார் நம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அமைச்சர். தைப்பூசத்திற்குரிய பெருமை இன்று அவரால் வைகாசிப் பூசத்திற்கும் ஏற்பட்டிருக்கிறது. எத்தனையோ அமைச்சர்கள் காலத்தில் சேக்கிழாருக்கு விழா நடத்தப்படவில்லை. பொன்மனச் செம்மலின் ஆட்சியில் தான்-அறநிலையத்துறை அமைச்சர் ஆர்.எம்.வீ. முயற்சியால் தான் சேக்கிழாருக்கு விழா மிகப்பொருத்தமான இடத்தில் - திருமயிலையில் நடைபெறுகிறது. இது மிகச் சிறந்த பணி-தொடர்ந்து செய்யப்படவேண்டிய பணி''

என்று கூறித் தம் தலைமையுரையை நிறைவு செய்தார்கள்.

அடுத்துப்பேசிய பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தம் அவர்கள் ''பெரிய புராணம்-பெரியர் புராணம் என்று கொள்ளத்தக்கது. செயற்கரிய செய்த பெரியர் புராணம் எனலாம். 63 நாயன்மார்களின் வரலாற்றிலும் சிவபெருமானின் பெருமையே பேசப்படுகிறது. பெரியோன் ஆகிய சிவபெருமானின் புராணம் பெரிய புராணம் எனவும் கொள்ளலாம்'' என்று பெரியபுராண நூலின் பெயர்க்காரணத்தை விளக்கி, அந்நூலின் சிறப்பையும் விவரித்தார்கள்.

அவரை அடுத்துப் பேராசிரியர் டாக்டர் மொ.அ.துரை அரங்கனார் அன்பு நெறியே திருத்தொண்டர் நெறி என்பதைப் பெரிய புராணத்தின் வழி விளக்கினார்கள்.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன்பணி அலாதொன் றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ
(திருக் கூட்டச் சிறப்பு-9)

என்ற பாடலை அடியார்களின் வாழ்க்கையோடு அவர் இயைத்துக்காட்டி விளக்கியது சிறப்பாக இருந்தது.

நண்பகல் ஒருமணியை நெருங்கிக்கொண்டிருந்த நேரத்தில் பேசவந்த டாக்டர் தெ. ஞானசுந்தரம் ''பலருக்குஉண்டியைப் பற்றிக் கவலை. பலருக்கு வண்டியைப் பற்றிக்கவலை'' என்பதாகக் கூறிப்பேச்சைத் தொடங்கி அவையினரைச் சிரிக்கவைத்தார். ''முகவரியுடைய பெருமக்களைப் பற்றிப் பாடப்பட்ட முதல் காவியம் பெரிய புராணம்'' என்ற அவர் ''கம்பரால் பாடப்பட்ட இராமாயணமும், வில்லுப் புத்தூர் ஆழ்வாரால் பாடப்பட்ட பாரதமும், கச்சியப்பரால் பாடப்பட்ட கந்தபுராணமும் வடக்கிலிருந்து தமிழுக்கு வந்தவை. சேக்கிழாரால் பாடப்பட்ட பெரிய புராணமே தமிழில் பாடப்பட்டுப் பின் வடமொழியிலும் மொழி பெயர்க்கப்பட்ட பெருமை உடையது'' என்றார்.

பேரரசர் அக்பர் ஒரு கோட்டினை வரைந்து அதை அழிக்காமல் பெரிதாக்கிக் காட்டுமாறு தம் அரசவைப் புலவர்களைக் கேட்டுக்கொண்டாராம். அறிவிற் சிறந்த அவருடைய அவைப்புலவர் பீர்பால், அக்பர் வரைந்த கோட்டின் அருகே மற்றொரு பெரிய கோட்டினை வரைந்து அக்பரின் கோட்டை அழிக்காமலே தம் கோட்டைப் பெரிதாக்கிக் காட்டினாராம். இதனைச்சான்று காட்டிப் பேசிய பேராசிரியர் ஞானசுந்தரம் தம் பெரிய புராணத்தால் சேக்கிழார் மற்ற புராணங்களை எல்லாம் சிறியதாக்கிவிட்ட சிறப்பை வியந்து பாராட்டினார். சுந்தரமூர்த்தி நாயனார் ஒற்றை வரியில் ''திருத் தொண்டத்தொகை''யிலும் நம்பியாண்டார் நம்பி ''திருத்தொண்டர் திருவந்தாதி''யில் சிலவரிகளிலும் போற்றிய நாயன்மார்கள் வரலாற்றைக் காவியமாக்கிக் கற்பார் கண்முன் நிறுத்துமாறு பாடச் சேக்கிழார் எவ்வளவு உழைத்திருக்க வேண்டும் என்பதைக் கூறிய ஞானசுந்தரம் ''பூசலார் நாயனார்'' வரலாற்றை விவரித்த பாங்கு சிறப்பாக இருந்தது.

இராசசிம்ம மன்னனின் கனவில்தோன்றி ''நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த நன்றுநீ டால யத்து நாளை நாம் புகுவோம்'' என்று கொன்றைவார் சடையார் திருவாய் மலர்ந்தருளுகிறார். பூசலார் நாயனாருக்குத் தம் மனக்கோயிலில் இறைவர் எழுந்தருளும் அப்புனித சேதி, இராச சிம்ம மன்னவன் அவரைத் தேடி வந்து உரைத்த பிறகே தெரிகிறது. ''கொன்றைவார் சடையார் பூசலார் கனவிலும் தோன்றி ஏன் அறிவித்திருக்கக்கூடாது?'' இப்படியாக ஒரு கேள்வியைக் கேட்ட பேராசிரியர் ஞானசுந்தரம் ''பூசலார் நாயனார் தூங்கியிருந்தால் அல்லவா சிவபெருமான் அவர் கனவில் தோன்றியிருக்க முடியும்'' என்று பதிலும் உரைத்த பாங்குமிகச் சிறப்பே.

இறுதியாகப்பேச வந்தவர் புலவர் மா. வே. பசுபதி. அவர் வியந்தது சேக்கிழாரின் சமய சமரசக் கொள்கை. சைவத்தின் பெருமையைப் பேசவந்த சேக்கிழார் தாம் பாடிய 4253 செய்யுட்களில் தம் கூற்றாக ஓரிடத்தில் கூட சமணரையோ, பௌத்தரையோ, பழிக்கவில்லை என்று கூறி வியந்தார் அவர்.

நன்றி உரை கூறி முடித்தவர் தமிழ்ப் பண்பாட்டுத்துறையின் அரசுச்செயலர் ஔவை நடராசன் அவர்கள். வாழ்க்கை இலக்கியம் திருக்குறள்; கற்பிலக்கியம், சிலப்பதிகாரம். அறநெறிக்காப்பியம் மணிமேகலை என்று அடுக்கிய அவர் பெரியபுராணத்தைத் தொண்டு இலக்கியம் எனச் சிறப்பித்துப் பேசியது, சேக்கிழார் விழா நிகழ்ச்சிக்குச் சிகரம் அமைத்தாற்போல் இருந்தது.

****

தெய்வச் சேக்கிழார்ப் பெருமான் திருநாள் விழாவின் 25.5.85ஆம் நாள் மாலை நிகழ்ச்சி பேரறிஞர்களின் சொற்பொழிவு நிகழ்ச்சியாக மட்டும் அல்லாமல், சமயச்சான்றோர்களுக்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் சிறப்புச் செய்யும் நிகழ்ச்சியாகவும் அமைக்கப்பெற்றிருந்தது. மாண்புமிகு அமைச்சரிடம் பரிசும் பாராட்டுகளும் பெற வருகை தந்திருந்தவர்கள் திருமுருக கிருபானந்தவாரியார், டாக்டர் மொ.அ.துரை அரங்கனார், கலைமாமணி தருமபுரம் ப.சாமிநாதன் மற்றும் மகாவித்துவான் பண்டித வி.நடேசனார் ஆகியோர் ஆவர்.

இனிய இவ்விழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்தித்தரப் பேரூர்ஆதினத்தலைவர் தவத்திருசாந்தலிங்க இராமசாமி சுவாமிகள் வருகை புரிந்திருந்தார். பாராட்டு பெறுவதோடு சிறப்புரையும் ஆற்ற இசைந்திருந்தார் திருமுருக கிருபானந்தவாரியார். மற்றும் சிறப்புரை ஆற்ற வந்திருந்தவர்கள் கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு சுந்தர சுவாமிகளும், திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையாரும் ஆவர்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் விழா நிகழ்ச்சிக்கு வந்திருந்த மாண்புமிகு அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் அன்பு மொழிகளால் வரவேற்பு கூறினார். தேரெழுந்தூரில் 6 மாதங்களுக்கு முன் கம்பர் விழா நடைபெற்ற போதே, மாண்புமிகு அமைச்சர் சேக்கிழாருக்கு விழா எடுக்க வற்புறுத்தியதையும் அதன் தொடர்பாகவே மே 18ஆம் தேதி சேக்கிழார் அவதரித்த குன்றத்தூர் திருநாகேச்சுர கோயிலில் சேக்கிழார் பெருமானை எழுந்தருளச் செய்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி நடைபெற்றது என்பதையும் அதன்

தொடர்பாகவே அரசின் சார்பில் அறநிலையத் துறை பொறுப்பேற்கும் மாநிலம் தழுவிய மாபெரும் விழா சேக்கிழாருக்கு நிகழ்த்தப் பெற்று வருவதையும் ஆணையர் தம் வரவேற் புரையில் விளங்க உரைத்தார்கள்.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தம் முடைய தலைமையுரையில் ''மட்டிட்ட புன் னையங் கானல் மடமயிலை''யில் சேக்கிழார் விழாவை அரசே நடத்துவது தமிழ்கூறு நல் லுகத்திற்கு மட்டிலா மகிழ்வை அளிப்பதாக எடுத்துரைத்தார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே செல்வ மயிலையில் வாழ்ந்திருந்த சிவனேசர், திருஞானசம்பந்தரை வரவேற்கும் பொருட்டு திருமயிலையிலிருந்து திருவொற்றி யூர் வரைக்கும் பந்தல் அமைத்துச் செய்த சிறப்பினைச் சேக்கிழார் தம் பெரிய புராணத் தில் பாடியிருப்பதை எடுத்துக்காட்டிய அடிக ளார் ''பெரிய புராணம்'' பக்திச்சுவை சொட் டும் இலக்கியம் மட்டுமல்ல, வாழ்வைப் புனித மாக்கும் தமிழர் வரலாற்று வாழ்விலக்கியம்'' எனப் போற்றினார்.

பாசுபதர், காலாமுகர், பைரவர் முதலான பல சைவப்பிரிவினரையும் ஒன்றாக இணைக் கும் ஒரு முயற்சியின் விளைவே சேக்கிழாரின் பெரிய புராணம் என்று கூறிய அடிகளார் அதற்கு எடுத்துக்காட்டாக அப்பரின்

''எவரேனுங் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டால் உள்
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன்திறமே பேணி
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே
(பதிகம் 275-3)

என்ற பாடலை எடுத்துக்காட்டி விளக்கி னார்கள்.

முன்பு வேலைக்காரராக இருந்தவர் பின்பு சிவபெருமானின் சின்னங்களை விரும்பிச் சிவ னடியார் ஆகிவிட்டால் அவரையும் மதித்து வழி பட்டு உபசரிப்பதே முன்பு அவரைப்பணி கொண் டிருந்தவர்க்கும் பெருமையாகும். அப்படிப் பட்ட சிவனடியார்களின் பெருமை மிக்க வர லாறுகளை விவரிப்பதே பெரிய புராணம் என்ற அடிகளார் "என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதே பெரிய புராணம் போற்றும் நெறி என்று விவரித்தார். இந்நெறியினைச் சேக் கிழார், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றி லும், ''வித்தகம் பேசவேண்டா பணி செய்ய வேண்டும்'' என வற்புறுத்துவதைக் காட்டி னார் அடிகளார்.

இறை வழிபாடு செந்தமிழ் மொழியில் நடைபெறவேண்டும் என்பதும் சேக்கிழார் விருப்பம் ஆவதை அடிகளார்

''மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன்
என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய
சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்
மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை
பாடும் பாயார்.
(தடுத்தாட்கொண்ட புராணம்70)

என்ற பாடல் வழி விளக்கினார். உலகத்தமிழ் மாநாட்டின் போது சேக்கிழாருக்குச் சிலை வைக்கவேண்டும் என்ற வேண்டுகோளைத் தாம்விடுத்ததாக அறிவித்த தவத்திரு அடிக ளார், தம்முடைய அவ்வேண்டுகோள் நிறை வுறும் நல்வாய்ப்பும் தற்போது கனிந்திருப்ப தாகத் தெரிவித்தார்.

''பெரியபுராணத்தில் ஒன்பான் சுவை'' என்ற விரிந்த தலைப்பில் சிறந்த உரையை ஆற்றிய கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு சுந்தரசுவாமிகள் தம்முடைய சிறப் புரையில் பத்து ஏக்கர் பரப்பளவில் சேக்கிழா ருக்குக் கோட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரை வேண்டிக் கொண்டார்கள். அக்கோட்டமும் திருவான் யூர் மருந்தீசுவரர் ஆலயத்தை ஒட்டிய நிலப் பரப்பில் அமைவது பொருத்தம் என்ற கருத்தை அவர் வெளியிட்டபோது அவையினர் அனை வரும்கையொலி எழுப்பி அவருடைய வேண்டு கோளை வரவேற்றனர்.

சிவனடியார்களின் ''வீரம் என்னால் விளம் பும்தகையதோ?'' என்ற சேக்கிழாரின் வாக்கை எடுத்துக்காட்டி விளக்கிய அடிகளார் ''சிறுத் தொண்டர் படைத்தலைவராக இருந்தபோது பகைவர்களை வெட்டிச்சாய்த்தாரே அது வல்ல வீரம். தம்முடைய மகன் சீராளனை அரிந்து அமுதுபடைத்தாரே அது தான் வீரம். வேடன் திண்ணன் பன்றிகளைத் துரத்தி வேட்டையாடினானே அதுவல்ல வீரம்; கண் ணைத்தோண்டி இறைவனுக்கு அப்பியது தான் வீரம். அப்பூதியடிகளார் தம்பிள்ளை அப்பருக்கு அமுதுபடைக்கச் சிறிது இடையூறு செய்தான் என்றுமனம் நொந்தாரே அதுதான் வீரம்' என வீரச்சுவையை விளக்கிய பான்மை சிறப்பாக இருந்தது.

திருஞானசம்பந்தரை முருகப்பெருமா னாகக் கூறிய அடிகளார் திருஞானசம்பந்தரும் ஐம்பெருந்தொழில்களை ஆற்றியிருப்பதாகக் காட்டி விளக்கினார். திருஞானசம்பந்தர் பூம் பாவையை எழுப்பியது படைத்தல். திருமருக லில் நாகம் தீண்டியவனை உயிர்ப்பித்து மணம்

முடித்து வைத்தது காத்தல். சமணர்களைக் கழுவேறச்செய்தது அழித்தல். திருமறைக் காட்டுக் கதவம் அடைக்கப்பாடியது மறைத்தல். தம் திருமணத்திற்கு வந்த ஆயிரக்கணக் கானோர் அனைவரும் வீடுபெறச்செய்தது அருளல். இவ்வாறு இறைவனுக்குரிய ஐம்பெரும் தொழில்களையும் திருஞானசம்பந்தர் ஆற்றியிருப்பதால் அவரை முருகப்பெருமானாகக் கொள்வர் என எடுத்துக்காட்டிய அடிகளாரின் பேருரையை அவையினர் உண்டு மகிழ்ந்தனர்.

அடிகளாரை அடுத்து உரையாற்ற வந்த திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள், வெறும் உரைகளையே பேசிக்கொண்டிருக்கும் மக்கள் 2 நாட்களுக்கேனும் திருமுறைகளைப் பேசிப் பயன அடையுமாறு விழா எடுத்த அரசைப் பாராட்டுவதாகக் கூறினார். சேக்கிழார் விழாவைக் கொண்டாடும் அமைச்சர் ஆர்.எம்.வீரப்பனார் முன்னமும் ஒரு அடியாராகப் பிறந்து பல தொண்டுகள் புரிந்திருக்க வேண்டும்; விட்டுப்போன தொண்டுகளைப் புரிவதற்காகத்தான் இறைவன் இப்பிறவியிலும் அவரை அமைச்சராக ஆக்கி இத்தகைய சிறந்த பணிகளைச் செய்ய வைத்திருக்கிறார் என்றும் கூறிப் புகழ்ந்தார் அவர்.

வணிகரும் வேளாளரும், வேந்தரும் வேடுவரும் இறைவன் முன்னால் சமமே என்பதை உணர்த்த சேக்கிழார் படைத்த காப்பியம் புரட்சிக்காப்பியம். அவருக்கு அரசு எடுத்திருக்கும் விழாவும் புரட்சிகரமான விழா தான் என்று பேசிய அம்மையார், புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் மூலம் இறைவன் புரட்சிகளை நடத்திக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். தமிழக முதல்வருக்கு நோய் வந்தது ஊழ்வினை தான் என்றாலும், அவரைக் கருவியாகக் கொண்டு இறைவன் சமய உலகில் செய்துவிட்ட மறு மலர்ச்சியை நினைவுபடுத்திய அம்மையார் சைவரும் வைணவரும், இஸ்லாமியரும், கிருத்தவர்களும் தம்தம் ஆலயங்களில் செய்த வழிபாட்டின் விளைவாகத் தமிழக முதல்வர் உடல்நலம் பெற்ற அற்புதத்தை நினைவு படுத்தினார்.

அம்மையாரின் உரைக்குப்பிறகு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்கள், சமயச்சான்றோர் நால்வருடைய தொண்டினை அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை,ஐ.ஏ.எஸ்.,அவர்கள் வரிசையாகப் படித்துக் கூற ஒவ்வொருவருக்கும் பொன்னாடையுடன் மலர்மாலையும் அணிவித்துப் பதக்கமும் அணிவித்துச் சிறப்பினைச் செய்தார்கள். நம்முடைய 'திருக்கோயில்'' இதழின் ஆசிரியராக 22 ஆண்டுக் காலம் சிறப்புடன் பணியாற்றி அண்மையில் இறைவனடி சேர்ந்த ''செந்தமிழ்ச்சைவமணி'' ந.ரா.முருகவேள் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் தம் திருக்கரங்களால் மாண்புமிகு அமைச்சர் திறந்துவைத்து அன்னாருடைய சேவையைப் பெருமைபடுத்திய காட்சி, அவையினர், நெஞ்சை உருக்குவதாக இருந்தது. புகழ்பெற்ற P.A. Constructions நிறுவனத்தின் உரிமையாளர் திரு பொன்னுசாமி அவர்கள் சேக்கிழார் விழாச் செலவுகளை ஈடுகட்ட தம்முடைய நன்கொடையாக ரூ.15000 அமைச்சரிடம் தந்து பெருமை கொண்டார்கள்.

திருமுருக கிருபானந்த வாரியார் அடுத்துத் தம்முடைய சிறப்புரையில் சிறுத்தொண்ட நாயனாரின் புராணத்தை விவரித்தார்கள்.சேக்கிழார் பெருமானின் சொல்லாட்சிச் சிறப்பினை விவரிக்க வந்த கிருபானந்த வாரியார்

''இனிய மழலைக் கிண்கிணிக்கால்
இரண்டும் மடியில் புடைஇடுக்கிக்
கனிவாய் மைந்தன் கையிரண்டும்
கையாற் பிடிக்கக் காதலனும்
நனிநீ டுவகை யுறுகின்றார்
என்று மகிழ்ந்து நகை செய்யத்
தனிமா மகவைத் தாதையார்
கருவிக்கொண்டு தலையரிவார்''

(சிறுத்தொண்டர். 63)

என்ற பாடலை எடுத்துக்காட்டி விளக்கினார்.

''தலையரிவார்'' என மேற்கண்ட பாடலில் இருக்கும் சொல்லாட்சியைப் போற்றிய வாரியார் உயிருள்ளவற்றை ''அறுத்தல்''என வல்லின றகரம் இட்டும் உயிரில்லாத காய்கறிகளை 'அரிதல்' என இடையின ரகரம் இட்டும் சுட்டுதலே வேண்டும். அவ்வாறின்றிச் சேக்கிழார் ''தலையரிவார்'' என இடையின ரகரம் இட்டுப்பாடியமைக்குக் காரணம் சீராளர் சிவ யோக நெறியின் காரணத்தால் தந்தை சிறுத்தொண்டர் தலையை அறுக்கும்போதும் காய்கறியை அரிவது போல் வலியேதும் இன்றி இருந்தார் என்பதை உணர்த்தும்பொருட்டே ஆகும் என்று வாரியார் விளக்க, அவையினர் அவருடைய விளக்கத்தைப் பெரிதும் ஈடுபட்டுக் கேட்டனர்.

இராமபிரான் குழந்தையாக இருந்தபோது விசுவாமித்திர முனிவர் தம் யாகத்தை காவல் செய்யும் பொருட்டு இராமனை அனுப்பும்படி தசரத மன்னனை வேண்ட அம்மாமன்னன் தரையில் புரண்டும் உருண்டும் அழுது தடுமாறினான். ஆனால் சிறுத் தொண்ட நாயனாரும், அவருடைய துணைவியார் திருவெண்காட்டு நங்கையாரும் தம் ஒரே மகனைக் கறிசமைக்க உடன்பட்டு மகிழ்ந்தனர். பெற்றவர் செயலுக்கு உடன்பட்டதோடு மகன் சீராளன கழுத்தை அறுக்கும் போதும் முகமலர்ந்து சிரிக்கிறான். என்னே தமிழர் தம் சால்பு'' என்று

கிருபானந்த வாரியார் தமிழர்ப்பண்பாட்டுச் சிறப்போடு சிறுத்தொண்ட நாயனார் புராணத்தை விவரித்தது சேக்கிழார்விழாவின் தனிச் சிறப்பாய் அமைந்தது. சேக்கிழார் விழாவின் முதல் நாள் மாலை நிகழ்ச்சிகள் இவ்வாறு மன நிறைவாய் முடிய கோ.சண்முகம் நன்றி கூறினார்.

****

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா
-அவர்
பங்கயக்கைநலம்பார்த்ததல்லவோ இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா''

என்று பாடினார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. பெரிய புராணத்தைப் போற்றி, நாயன்மார்களின் நல்லறச் செயல்களுக்குக் கைகொடுத்த காரிகையர் பெருமையைப் போற்றித்தான் மேற்கண்டவாறு அவர் பாடியிருத்தல் வேண்டும்.

''சேக்கிழார் போற்றிய சேயிழையர்'' பெருமையினை எடுத்துக்காட்டாமல் சேக்கிழார் விழா எவ்வாறு சிறப்பினைப் பெறும்? அதனால்தான் இரண்டாம் நாள் சேக்கிழார் விழாவின் காலை நிகழ்ச்சியைக் காரிகையர் நிகழ்ச்சியாகவே அமைத்திருந்தனர்.

வரவேற்புரை நல்கிய காயிதே மில்லத் மகளிர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை திருமதி இராசலக்குமி, பவச்சார்பு நீக்கிச் சிவச்சார்பு ஆக்கும் பெரிய புராணத்திற்கு ஈடான இலக்கியம் எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் தோன்றியதில்லை என்றார். பேசவும் பெரிதான தொண்டர் பெருமையைப் போற்றும் சேக்கிழார், தொண்டர்களையே தெய்வமாகப் போற்றுகிறார் எனக் கூறிய திருமதி இராசலக்குமி,

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோ
யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கை வார்சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே
(பதிகம்309-10)

என்ற திருநாவுக்கரசரின் பாடலை எடுத்துக் காட்டித் திருநாவுக்கரசரும் சிவனடியாரைத் தெய்வமாகப் போற்றியிருப்பதை விளக்கினார்.

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் வணங்கி வழிபட்ட தலங்களை ஊர்முறை பிறழாமல் எடுத்துரைக்கும் சேக்கிழாரின் திறத்தை வியந்த அவ்வம்மையார், கவிதைச் சுவைக்குக் கம்பரையும், பக்திச்சுவைக்குச் சேக்கிழாரையும் பெருமைப்படுத்திப் பேசினார்.

இவ்விழாவிற்குத் தலைமை தாங்கியவர் புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனத் தலைவர் டாக்டர் தவத்திரு சாயிமாதா சிவபிருந்தா தேவி அம்மையார். அவர் தம்முடைய உரையில் ''எவ்வளவு சிறப்புப்பொருந்தியவர்களாக இருந்தாலும் ஆண்களை ஆண் மணிகள் என்று சொல்லுவதில்லை. பெண்களைத்தான் பெண்மணிகள் எனப் புகழ்கிறார்கள்'' என்று கூறி, சேக்கிழார் போற்றிய 63 நாயன்மார்களில் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியார் ஆகிய மூவரே பெண் நாயன்மார்கள் என்றாலும் மற்ற 60 நாயன்மார்களின் பெருமைக்கும் கூட பெண்கள் தான் காரணமாக விளங்குகிறார்கள் என்பதை விளக்கிப் பேசினார்கள்.

திலகவதி என்ற சேயிழையாரால் தான் திருநாவுக்கரசு நாயனார் உருவானார். திருநீலகண்டநாயனாரின் மனைவி ''எம்மைத் தீண்டற்க'' என்றதனால் தான் அவரும் அறுபத்து மூவரில் ஒருவராக முடிந்தது. நள்ளிரவு நேரத்தில் சிவனடியார் கோலத்தில் வந்து ஈசன் கதவைத் தட்டியபோதும், அறுசுவை உணவை இளையான்குடிமாற நாயனாரின் மனைவி சமைத்துப்படைத்ததனால்தான் இளையான்குடி மாற நாயனாரும் பெருமை பெற முடிந்தது. ''செல்'' என ஒரு சொல் இயற்பகை நாயனார் சொல்லியவுடன் சிவனடியாருடன் இயற்பகை நாயனாரின் மனைவி சென்றமையால் தான் இயற்பகை நாயனாரும் பெருமை பெற முடிந்தது என்று தவத்திரு ஆதீனம் அவர்கள் அடுக்கிக்காட்டிய சேயிழையர் பெருமையை யாரே மறுத்திடமுடியும்?

தலைவரின் தலைமையுரையில் பெரிதும் சிறப்பிக்கப்பெற்றவர் காரைக்கால் அம்மையாரே! தாம் பிறந்த மண்ணுக்குப்பெயர் தந்த அம்மையார், மகேஸ்வரனால் ''அம்மையே'' என்று அழைக்கப்பெற்ற அம்மையார்'' என்று காரைக்கால் அம்மையாரின் பெருமையைக்கூறி, அவர்தம் வரலாற்றை விரித்துரைத்த பாங்கு, தனிப்பாங்காகவே மிளிர்ந்தது.

ஆண்களாகிய நாயன்மார்களின் வாழ்க்கைக்கு எல்லாம் பெண்கள் கைகொடுத்திருக்கக் காரைக்கால் அம்மையாரின் பக்தி வாழ்க்கைக்கு மட்டும் பரமதத்தன் ஏன் துணை நிற்கவில்லை? என்ற ஐயம் 41 ஆண்டுகளாகத் தம் நெஞ்சில் இருப்பதை தவத்திரு அம்மையார் எடுத்து வினவி, மற்ற 62 நாயன்மார்கள் எல்லாம் நின்ற நிலையில் இருக்கக் காரைக்கால் அம்மையார்

மட்டும் அமர்ந்த கோலத்தில் இருக்கும் அருஞ் சிறப்பைப் போற்றினார்கள்.

''தெய்வம் இறங்கிவந்தது, தெய்வம் இரங்கிவந்தது'' எனவும் ''பாதக மலம், பாத கமலம்'' எனவும் ''சோதனையில் வேதனை கொள்ளாது சாதனை புரிந்து, நாதனைக்கண் டவர்கள் நாயன்மார்கள்'' எனவும் சொற்சிலம்பம் பயின்ற அம்மையார், காரைக்கால் அம்மையார் சிவனிடம் கேட்ட வரம் இன்னதென் பதையும்.

''இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்
புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க என்றார்''

(காரைக்கால் அம்மையார் 60)

என்ற பாடலால் எடுத்து விளக்கியபாங்கு, அவையினரை மனமுருக வைத்தது.

'முன்பு நினையாமல் இருந்து, இப் பொழுது நம்மை நினைந்தாரும் நம் திரு வடிக்கே வந்து சேருகின்றனர்'' என்ற பொரு ளமைந்த கீதையை எடுத்துரைத்த அம்மை யார் முன்பு கொண்டாடப்படாமல் இருந்து இப்பொழுது சேக்கிழார் விழா அரசால் கொண் டாடப்படுவதை வரவேற்றார். முன்னர் அற நிலையத்துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர்கள் ஆற்றாத அருஞ்செயல்களைத் தம்முடைய திலகவதியார் ஆதீனம் அமைந் துள்ள புதுக்கோட்டைக்கு உரியவரான அமைச் சர் ஆர்.எம்.வீ. ஆற்றுவதை ஒருமுறைக்குப் பலமுறையும் பாராட்டிக் கூற தவத்திரு டாக் டர் சிவபிருந்தா தேவியார் மறக்கவில்லை.

அவரை அடுத்துச் சிறப்புரை ஆற்றியவர் பச்சையப்பன் அறக்கட்டளையைச் சார்ந்த செல்லம்மாள் மகளிர் கல்லூரியின் முதல்வ ராகிய டாக்டர் இந்திரா சோமசுந்தரம். சேயிழையார்க்குச் சிறப்புச்செய்யும் பொருட்டு ஈசனும் அர்த்தனாரீசுவரர் கோலம் தாங்கி யிருப்பதை விளக்கிய இவ்வம்மையார், சைவ சமயமே பெண்களைப் போற்றும் சமயம் என் பதை,

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறை
வில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை
இருந்ததே

(பதிகம் 282-1)

என்ற திருஞானசம்பந்தரின் பாடலை எடுத்துக் காட்டி விளக்கினார்.

இவரால் பெரிதும் புகழ்ந்து பேசப்பட்டது மங்கையர்க்கரசியாரின் பெருமையாகும். மங் கையர்க்கரசி சோழ மன்னன் மகளாகப்பிறந்து, பாண்டியன் நின்றசீர் நெடுமாறனுக்கு வாழ்க் கைத்துணை ஆனவர். மன்னன் எவ்வழி மக்க ளும் அவ்வழி அல்லவா! நின்றசீர் நெடுமாறன் தமிழர் சமயமாம் சைவத்தைப் புறக்கணித்துச் சமண சமயத்தை ஆதரித்து நாடெங்கும் பள் ளிகளும் பாழிகளும் கட்டிக் கொண்டிருந்தான். சமணக்களையால் சைவப்பயிர் அழிந்து சிதை வதைக் காணச்சகியாத மங்கையர்க்கரசியார் அமைச்சர் குலச்சிறையார் மூலமாகத் திரு ஞான சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்தார்.

கணவனோ சமணநெறி போற்றுபவன். தம் பொருட்டு மதுரைமா நகருக்கு வந்துற்ற திருஞான சம்பந்தரைத் தாம்போய் வரவேற் பதை இசையமாட்டான். ஆயினும் தம் வேண்டுகோளை ஏற்றுச் சைவ சமயத்தைநிலை நிறுத்திக் காப்பதற்கென்றே மதுரைக்கு வந் துற்ற திருஞானசம்பந்தரையும் வரவேற்றாக வேண்டும். மங்கையர்க்கரசியார் இக்கட்டான இந்நிலையில் என்ன செய்வார்? என்ன செய் தார்?

''அம்புய மலராள் போல்வார் ஆலவாய்
அமர்ந்தார் தம்மை
கும்பிட வேண்டும் என்று கொற்றவன்
தனக்கும் கூறித்
தம்பரி சனங்கள் சூழத் தனித்திடை
யோடுஞ்சென்று
நம்பரை வணங்கித்தாமும் நல்வரவேற்று
நின்றார்''

(திருஞானசம்பந்தர் 647)

ஆலவாய் இறைவனை வணங்கச் செல்வதைப் போல் சென்று பாலகராம் திருஞான சம்பந் தரை வணங்கி வரவேற்றாராம் மங்கையர்க் கரசியார்.

திருவள்ளுவர், வாழ்க்கைத் துணைநலத் தின் இலக்கணத்தை

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''(56)

என்று குறிப்பிடுவார். அவ்விலக்கணத்திற்குப் பொருந்தவே மங்கையர்க்கரசியாரும் தம் கண வனாரின் தகுதி சான்ற பெருமைமிக்கச் சைவ சமயத்தை நிலைநிறுத்தச் சோர்விலாமல் பாடு பட்ட திறத்தை மிக விரித்துப் பாராட்டிப்பேசி னார் டாக்டர் இந்திரா சோமசுந்தரம். திரு ஞான சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீயவர்களாகிய சமணர்கள் தீவைக்கிறார்கள்.

''சைவர் வாழ்மடத் தமணர்கள் இட்டத்தீ தழல் போய்ப்
பையவே சென்று பாண்டியற் காகென''
(திருஞானசம்பந்தர் 704)

திருஞானசம்பந்தர் திருவாய்மலர அமணர்கள் இட்டத் தீ பையவே சென்று பாண்டியனைச் சேர்ந்து கொடிய வெப்பு நோயாய் வாட்டத் தொடங்குகிறது.

திருஞானசம்பந்தர் ''பையவே சென்று பாண்டியற் காகென'' ஏன் பணித்தார் என்பதையும் அம்மையார் விளக்கும்போது ''பாண்டிமா தேவியார் தமது பொற்பில் பயிலு நெடு மங்கலநாண்'' பாதுகாத்தலின் பொருட்டே அவ்வாறு பணித்ததாக விளக்கினார். திருஞான சம்பந்தர் திருநீறு இட்டு பாண்டிய மன்னனைவாட்டிய வெப்பு நோயைச் சுகப்படுத்துகிறர். மன்னனின் நோயைத் தீர்க்க ஆகாத அமணர்கள் அனல்வாதம், புனல் வாதம் செய்து அனைத்திலும் திருஞானசம்பந்தரிடம் தோற்றுப்பின் கழுவும் ஏறினார்கள்.

இவ்வாறு தம்மையும் பாதுகாத்துக்கொண்டதோடு, ,தம் கணவரையும் பரசமயக் குழியிலிருந்து மீட்டுக்காத்து, சைவசமயத்தையும் நிலைநிறுத்திக் காத்த மங்கையர்க்கரசியாரின் மாண்பினைப் போற்றிச் சேக்கிழார்'' ''எங்கள் தெய்வம்'' எனவும் ''தெய்வப்பாவை'' எனவும் போற்றியிருப்பதை,

''மங்கையர்க்குத் தனியரசி எங்கள்தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே
(மங்கையர்க்கரசி, 1)

என எடுத்துக்காட்டி டாக்டர் இந்திரா சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய உரை செவிக்குணவாய்ச் சிந்தை மகிழ வைத்தது.

அடுத்து இசை பாடவந்தவர் பேராசிரியை சாரதா நம்பியாரூரான். ஆம்! அவருடைய இனிய இசைப்பாட்டு கல்லையும் கரைய வைப்பதாய் இருந்ததால் அவையினர் அனைவரும் உருகிக் கேட்டு மகிழ்ந்தனர். ''உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்'' பாடலை உச்சி நேரத்தில் பூபாலத்தில் பாடிய அவர் ''அவ்வாறு ஏன் பாடப்பட்டது?'' எனவும் கேட்டு ''அவையினரைத்தட்டி எழுப்பத்தான்'' என்று கூறி அவைத்தலைவர் தவத்திரு சிவபிருந்தா தேவியார் பாராட்டி உரைத்ததைப்போல அவர் தம் பேச்சும் பாட்டாய் இனிக்கப் பேச்சைத் தொடர்ந்தார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் குன்றத்தூரில் சேக்கிழார் விழாவை மறை. திருநாவுக்கரசு முன் நின்று கொண்டாட ஆரம்பித்ததிலிருந்து தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் தமக்குப் பேச வாய்ப்பு கொடுக்கப்பட்டதை நன்றியுடன் நினைவுகூர்ந்த அவர், குன்றத்தூர்ச் சேக்கிழார் விழாக்களில் ஐம்பதுக்கும் குறைவான அன்பர்களே கூடியதையும், ஆயிரக்கணக்கானோர் அவை நிரம்பக் கூடியுள்ள மயிலை கற்பகாம்பாள் கல்யாணமண்டபத்தில் அரசு நடத்தும் சேக்கிழார் விழாவில் தாம் பேசநேர்ந்ததும் சேக்கிழாரின் திருவருளே என அவர் குறிப்பிட்டார்.

தேரெழுந்தூரில் கம்பர் விழானவ அறநிலையத்துறை நடத்தியபோது, பாமரரும் அறிந்து கொள்ளுமாறு கம்பரை நாட்டினருக்கு எடுத்துரைக்க வேண்டியதன் அவசியத்தை அறநிலையத்துறை அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்கள் எடுத்துக்காட்டியதைக் குறிப்பிட்ட சாரதா நம்பியாரூரான், சேக்கிழாரையும் பாமரர்களும் புரிந்துகொள்ளுமாறு அரசு விழா நடத்திக் கொண்டிருப்பதைப்பாராட்டினார். சேக்கிழார் விழாவை பரவலாக மக்கள் பேசிக்கொள்வதை குறிப்பிட்ட அவர் தம் வீட்டிலும்கூட வேலைக்காரி ''சேக்கிழார் யார்?'' எனக் கேட்டதாகவும் அவருக்குத் தாமும் சுருக்கமாகச் சேக்கிழாரைப் பற்றிக் கூறியதாகவும்எடுத்துரைத்தார்.

சாரதா நம்பியாரூரான் தம்முடைய பேச்சில் சிறப்பித்துப் பாராட்டிய சேயிழையார், திருநாவுக்கரசரின் தமக்கையாராகிய திலகவதியார். திலகவதியாருக்கும் படைத்தளபதி கலிப்பகையாருக்கும் திருமணம்நிச்சயிக்கப்படுகிறது; நிச்சயித்த திருமணம் நடைபெறுவதற்கு முன்னமே கலிப்பகையார் பொருவரும் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டு விடுகிறார். எரிப்புகுந்து உயிர் மாய்த்துக்கொள்ளத் திலகவதியார் முற்படும்போது அவருடைய தம்பி மருள் நீக்கியார் தம் பொருட்டு உயிர் வாழவேண்டுமெனத் தமக்கையாரின் காலில் விழுந்து அழுகிறார்.

'எந்தையும் எம் அனையும் அவர்க்கெனக் கொடுக்க இசைந்தார்கள்
அந்த முறையால் அவர்க்கே உரியது நான் ஆதலினால்
இந்தவுயிர் அவருயிரோடு இசைவிப்பன் எனத் துணிய
வந்தவர் தம்அடியிணைமேல் மருணீக்கியார் விழுந்தார்''

(திருநாவுக்கரசர் 32)

தம் உயிரனைய தம்பி மருள் நீக்கியார் உயிர் வாழவேண்டும் என்பதற்காகத் தான் திலகவதியார் தம்முயிரைத்தாங்கிக் கொண்டார். ஆனால் தம்பி மருள்நீக்கியாரோ நாளடைவில் தகாத வழிசென்று தருமசேனராய் சமணசமய நெறி சார்ந்தவராகி விடுகிறார். எந்தத்தம்பிக்காகத் திலகவதியார் உயிர்வாழ்ந்தாரோ அந்தத்தம்பி அமண்சமய நெறி சார்ந்ததால் திலகவதியார் அவரைத்தம்பி என அழைப்பதே இல்லை என்பதை மிகச்சிறப்பாக விளக்கிப்பேசினார் சாரதா நம்பியாரூரான்.

திருவதிகை வீரட்டானத் திருத்தலத்தில் தங்கித் திலகவதியார், மருள்நீக்கியார் மீண்டும் மனம்மாறி சைவசமயமே வந்து சேர அருள்புரியுமாறு ஈசனை நாள்தோறும் வேண்டியவண்ணம் இருக்கிறார். பரசமயக் குழிவிழுந்துவிட்ட மருள்நீக்கியைத் தம்பி என்று அழைக்க மனம் இடம் கொடுக்காத திலகவதியார் ''பின்பிறந்தான்'' எனவே இறைவனிடம் முறையிடும் சிறப்பைச் சாரதா நம்பியாரூரான்

தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியை தொழுது என்னை
ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள
வேண்டுமெனப் பலமுறையும் விண்ணப்பம் செய்தனரால்

(திருநாவுக்கரசு .46)

என்ற சேக்கிழார் வாக்கை எடுத்துக்காட்டி விளக்கினார்.

திலகவதியாரின் விண்ணப்பத்திற்கிணங்க திருவதிகை வீரட்டானத்தார் சூலைநோய் தந்து மருள்நீக்கியாரைத் தடுத்தாட்கொள்ளத் திருவுள்ளங்கொள்கிறார். அவரை வாட்டி வதைக்கும் சூலை நோயைச் சமணர்களால் சுகப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் தம் வாட்டத்தைத் திலகவதியாருக்கு சமண அடியாள் ஒருவன் மூலம் சொல்லியனுப்புகிறார் மருள்நீக்கியார். அந்தத்தம்பியின் பொருட்டே உயிர்தாங்கியவராகிய திலகவதியார்,

''நன்றறியா அமண்பாழி நண்ணுகிலேன் எனும் மாற்றம்
சென்றவனுக் குரை''

என்று தம்பி வாடும் அந்நிலையிலும் ''தம்பிக்கு உரை'' என்று சொல்லாமல் ''அவனுக்குரை'' என்றே செப்பிவிட்ட திறத்தைச் சாரதா நம்பியாரூரான் எடுத்துக்காட்டினார்.

சூலைநோயின் கொடுமையை அதற்குமேல் தாங்கப் பெறாதவரான மருள்நீக்கியார் திலகவதியாரின் திருமடத்திற்கே வந்துவிடுகிறார். அவரை வெளியிலேயே நிற்கவைத்துத் தாம் மட்டும் கோயிலுக்குள் சென்று திருநீறு கொண்டுவந்து நெற்றியில் இட்டுச் சைவராக்கிய பின்னரே கோயிலுக்குள் தம்பியை அழைத்துச் செல்கிறாராம் திலகவதியார்.

''கோளில்பர சமய நெறிக் குழியில் விழுந்தறியாது
மூளுமருந் துயருழந்தீர் எழுந்திரீர்''

(திருநாவுக்கரசர் 64)

எனத் தம்பியை ஆட்கொண்ட திலகவதியாரின் திருவருட் டிறத்தைப் போற்றிய சாரதா நம்பியாரூரான் ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' எனத் தொடங்கும் திருநாவுக்கரசரின் தேவாரத்தைப்பாடியது தேவாமிர்தமாகவே தித்தித்தது.

ஆணுக்குக் குருவாக இருந்து தீட்சையளித்த பெருமையும் திலகவதி என்ற சேக்கிழார் போற்றும் சேயிழையார்க்கே சேரும் என்ற சாரதா நம்பியாரூரான் நோயிலிருந்து நலமளிக்கும் தேவாரப்பாடல்களைத் தாமும் தம் கல்லூரி மாணவியரும் சேர்ந்து பாடியதைப் போல பலரும் பாடிய பிரார்த்தனையின் பயனாகவே பொன்மனச் செம்மல் நலம் பெற்று உய்ந்ததையும் நினைவு கூர்ந்தார்.

கடைசியாகப் பேசவந்தவர் தவத்திரு இராஜம் சங்கரன். திருமதி விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணனுக்குப் பதிலாகத் தமக்குப் பேச வாய்ப்புக் கிடைத்தமையை இறைவன் திருவருளாகப்போற்றிய ஆவ்வம்மையார் 63 நாயன்மார்களில் ஒருவராகிய இசை ஞானியார்க்கு அப்பெருமை கிடைத்தற்குக் காரணம் சுந்தரமூர்த்தி நாயனராகிய சிறந்த பிள்ளையை ஈன்றது தான் என்று கூறினார்.

ஆண் நாயன்மார்களுக்கெல்லாம் அவர்களுடைய மனைவிமார்கள் ஒத்துழைப்பு நல்கியிருக்கப் புனிதவதியாரின் பக்தி வாழ்க்கைக்குப் பரமதத்தன் ஏன் துணை நிற்கவில்லை என்று தலைமையுரை ஆற்றிய தவத்திரு சாயிமாதா கேட்டிருந்தார்கள் அல்லவா! அதற்கு விளக்கம் தர விழைந்த அம்மையார் ''காரைக்கால்

அம்மையார் என்ற நாயன்மார் தோன்றவேண்டும் என்பதாகச் சிவபெருமான் திருவருள் பாலித்ததே பரமதத்தன் விட்டுக்கொடுக்காத தற்குக்காரணம்'' என்றார். சிறுத் தொண்ட நாயனாரின் வீட்டு வேலைக்காரியாகிய சந்தனத்தார் சமயோசிதமாக சீராளனின் தலைக் கறியைச் சமைத்துவைத்த செயலால் தான் சிறுத்தொண்ட நாயனார் வைரவ சந்நியாசிகள் தலைக்கறி கேட்டதும், தருவதற்குத் தோதாக அமைந்தது என்பதையும் அவர் விளக்கினார்.

இவ்வாறாக ''சேக்கிழார் போற்றிய சேயிழையர்'' சிறப்பினை அறிவாலும் ஆற்றலாலும் சிறந்த ஐந்து சேயிழையர் செப்ப, 26.5.85ஆம் நாளைய காலை நிகழ்ச்சிகள் சிறப்புற முடிந்தன.

****

தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவின் நிறைவு விழா நிகழ்ச்சியில் சிறப்புரையாற்ற அறிஞர் பெருமக்கள் பலருடன் சட்ட மேலவை தலைவர் மாண்புமிகு டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும் வருகை புரிந்திருந்தார்கள்.

இலால்குடி சாமிநாதனின் இறைவணக்கத்தோடு தொடங்கிய இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்தியவர் அறநிலையத்துறையின் அரசுச்செயலாளர் திரு ஆர். சண்முகசிகாமணி, ஐ.ஏ.எஸ்., அவர்கள். சேக்கிழார் விழாவை தாம் அறநிலையத்துறையின் ஆணையராக இருந்தபோதே அரசின் சார்பில் -அறநிலையத் துறையின் சார்பில் நடத்துமாறு தம்மை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டதாகவும், அப்போது இயலாமல் போன இனிய இவ்விழா திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஆணையராக இருக்கும் இப்பொழுது நடைபெறுவது தமக்குப் பேருவகை அளிப்பதாகவும் கூறினார் அவர்.

மேலும் அவர் பேசுகையில் கடந்த 60 ஆண்டுக் காலமாகக் குறிப்பிட்ட ஒரு இனத்தாரிடம் அகப்பட்டுக்கொண்டு, சேக்கிழார் பெருமானே கட்டிய கோயிலில் அவருடைய சிலையைக் கொண்டு செல்லவும் வழியில்லாமல் இருந்த அந்த பகையுணர்ச்சியை மாற்றிக் குன்றத்தூர் திருநாகேஸ்வரர் ஆலயத்தில் சேக்கிழார் பெருமானை எழுந்தருளவைத்தும், தமிழ்கூறு நல்லுலகமெல்லாம் தன்னேரிலாச் சேக்கிழார் பெருமானின் புகழ் அறிந்துய்யுமாறும் சென்னையில் பெரும்விழா எடுத்துக் கொண்டாடும் அறநிலையத்துறை அமைச்சரின் பெருந்தொண்டு வரலாற்றுப் புத்தகங்களில் பொறிக்கத்தக்கதாகும் எனப் புகழாரம் சூட்டினார்.

சிறப்புமிக்க சேக்கிழார் விழாவை வாழ்த்தித் தருமபுரம் ஆதீனம் உள்ளிட்ட பலர் விடுத்திருந்த வாழ்த்துச் செய்திகளை அறநிலையத் துறை ஆணையர் கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் வாசித்த பிறகு தொடக்க உரை ஆற்றவந்தார் தொல்பொருள் துறையின், இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி.

அவர் தம் தொடக்க உரையில் தமிழகத்தின் எல்லைக்கு அப்பாலும் தமிழர் பெருமை பரவவேண்டும் என்பதில் அறநிலையத்துறை அமைச்சர் ஆர்.எம்.வீ. கொண்டிருக்கும் ஆர்வத்தை எடுத்துக்காட்ட ஒரு நிகழ்ச்சியைச் சான்று காட்டினார். ''அனைத்துலக எழுத்தாளர் சங்கத்தினர் இலக்னோ நகரில் நடத்திய மாநாட்டில் இராஜராஜசோழனைப் பற்றிய கருத்தரங்கத்தை நடத்த விழைந்து தமிழக அரசின் உதவியை நாடினார்கள். தமிழக அரசும் நிதி வழங்க ஒத்துக் கொண்டது. என்றபோதும் நிர்வாக நடைமுறைகள் காரணமாக நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. தமிழர்தம் பெருமைமிக்க வரலாற்றுச் சிறப்பினை உலகறிந்து கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவரான மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. தம் சொந்தப் பணத்திலிருந்து ரூபாய் 10000 கொடுத்து இராஜராஜசோழனைப் பற்றிய கருத்தரங்கம் காலத்தில் நிகழ உதவினார். அவருடைய பெருமுயற்சியால் இப்போது சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகிறது'' என்று டாக்டர் நாகசாமி தெரிவித்தபோது அமைச்சரைப் பாராட்டும் முகத்தான் அவையினரும் கையொலி எழுப்பினர்.

கோவையில் வாழ்ந்து காலம் சென்றவரான C. K. சுப்பிரமணிய முதலியார் பெரிய புராணத்திற்குச் செய்திருக்கும் உரையே தலை சிறந்த உரை என்பதாகப் போற்றிய டாக்டர் இரா.நாகசாமி, அமைச்சருக்கு ஒரு வேண்டுகோளும் விடுத்தார். C. K. சுப்பிரமணிய முதலியாரின் உரை ஏழு தொகுதிகளாக வெளியிடப்பட்டு 700 ரூபாய் விலைக்குத்தான் கிடைக்கிறது. அவ்வேழ தொகுதிகளுக்கும் விலையாக ரூபாய் ஏழு லட்சங்கள் கொடுத்தாலும் தகும் என்றாலும் எல்லா மக்களும் பெரிய புராணத்தைக் கற்றுப்பயன் கொள்ளும் விதத்தில் அரசாங்கம் பொருளுதவி செய்து C. K. சுப்பிரமணிய முதலியாரின் உரையோடு கூடிய பெரிய புராணத்தை மலிவுப் பதிப்பாக்கி வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பெரிய புராணத்தில் அமைந்திருக்கும் வரலாற்றுக் கூறுகளை எடுத்துக் காட்டுவதைத் தம் தொடக்க உரையின் கடமையாகக் கருதிய டாக்டர் இரா.நாகசாமி

''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக்குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில் சூழ் குன்றையார் விறல்மிண்டர்க்கடியேன்,
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

(திருத்தொண்டத்தொகை 1)

என்பது முதலாகச் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத்தொகையின் 11 பாடல்களில் எந்த வரிசையில் 63 நாயன்மார்களையும் தொகையடியார்களையும் பாடினாரோ அவ் வரிசை பிறழாமல் தம் பெரிய புராணத்தில் நாயன்மார்களின் வரலாறுகளைப் பாடியிருப்ப தோடு, தேவாரம் பாடிய மூவர் வரலாறுகளைக் கூறும்போது அவர்களுடைய தேவாரங்களை யும் அப்படி அப்படியே சேக்கிழார் எடுத்தாண் டிருப்பதும் பெரிய புராணம் சிறந்த வரலாற்று காப்பியம் என்பதை மெய்ப்பிப்பதாக டாக்டர் நாகசாமி கூறினார்.

திருநாவுக்கரசர் வரலாற்றில் குறிப்பிடப் பெறும் பல்லவ மன்னன் சமணனாக இருந்து பின் சைவன் ஆவதைக்காட்டிய டாக்டர் நாக சாமி, அம்மன்னன் மகேந்திரவர்மனே; மகேந் திரவர்மன் திருச்சி மலைக்கோயிலில் எடுப் பித்த கல்வெட்டில் தாம் சைவசமயத்திற்கு மாறிய நிகழ்ச்சியைப் பொறித்துள்ளான் என்ப தாகக் கூறி விளக்கினார். பூசலார் நாயனார் புராணத்தில் வரும் பல்லவன் இராச சிம்ம பல்லவன்; அவன் கட்டியதே கைலாசநாதர் கோயில் எனக் கூறிய தொல்பொருள் துறையின் இயக்குநர் பூசலார் நாயனார் புராணத்தில் வரு வதைப் போன்றே இராச சிம்ம பல்லவன் உண்மையில் தெய்வ அசரிரியைக் கேட்டது கைலாசநாதர்கோயில் கல்வெட்டில் கூறப் பெற் றிருப்பதையும் விளக்கினார்.

தஞ்சையில் இராசராச சோழன் கட்டிய பிரகதீசுவரர் கோயிலின் கருவறையைச் சுற்றி வரக்கூடிய உள்பிரகாரத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு ஓவியமாக தீட்டப்பட்டி ருப்பதை இன்றும் காணலாம் எனக் கூறிய டாக்டர் நாகசாமி ,அந்த ஓவியத்தில் சுந் தரர் மணக்கோலத்தில் இருப்பதையும், ஒரு மறையவர் தம் கையில் ஓலையுடன் திருமணத் தைத்தடுப்பதையும் அந்தத்திருமணத்தில் கலந்துகொண்ட பலர் மறையவரை நகைப்பதை யும் எடுத்துக்காட்டி அந்த ஓவியத்தைச் சேக் கிழாரும் பார்த்தே தடுத்தாட்கொண்டப் புராணப்பாடல்கள் பலவற்றை புனைந்திருத் தல் கூடும் என்றார்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் நீதி மன்றங்கள் செயல்பட்ட முறையைக்காட்டு வதே

''ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற்றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன முன்னே
மூட்சியிற் கிழித்த ஒலை படியோலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன் என்றனன் மாயை வல்லான்''

(தடுத்தாட்கொண்ட புராணம் 56)

என்ற சேக்கிழாரின் பாடல் என்பதைக் குறிப் பிட்ட டாக்டர் நாகசாமி Administration Perfection ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னே தான் ஏற்பட்டது என்பது தவறு. அது பெரிய புராணக் காலம் முதலே தமிழகத் தில் இருப்பது தான் என்பதை எடுத்துக்காட்டி னார்.

பெரிய புராணத்தில் அமைந்துள்ள வர லாற்றுக் கூறுகளை சிறப்புறக்காட்டி டாக்டர் நாகசாமி இவ்வாறு தம் தொடக்க உரையை முடித்தவுடன், அடுத்துப் பேசவந்த டாக்டர் செல்வ கணபதி பெரிய புராணத்தில் தமிழர் பண்பாட்டுக்கூறுகள் எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினார்.' 'பெரிய புராணத்தை ஒரு சமய நூல் என்று கூறாதீர்கள். பண்பாட்டு நூலில் ஆங்காங்கே சமயமும் வருகிறது எனக் கூறுங்கள்'' என்பதாக அவருக்கு அவருடைய ஆசிரியர் கூறியதை அவையினர்க்கும் அறி வுறுத்தினார்.

கடிமணம் புரிந்துகொள்ள விரும்பிய காத லர் இருவர், பெற்றோர்க்குத் தெரியாமல் ஒரு இரவு நேரத்தில் ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்து திருமருகல் என்னும் ஊருக்கு வந்து ஒரு மடத்தில் தங்கியிருக்கையில் பாம்பு கடித்துக் காதலன் மாண்டுபோகிறான். காதலி அவனுடைய பிரிவைத் தாங்காமல் புலம்பிக்கொண்டிருந்த அந்தவேளையில் அத் தலத்திற்கு வருகை புரிந்த திருஞானசம்பந்தர் அப்பெண்ணின் துயர்காணச் சகியாதவராய் பதிகம் பாடி பாம்பின் விடத்தைத் தீர்த்துக் காத லனை உயிர்ப்பித்து அவனுக்கும் அவனுடைய காதலிக்கும் திருமணம் செய்து வைக்கிறார். இவ்வரலாற்றைத் திருஞானசம்பந்தர் புரா ணத்தில் கூறும் சேக்கிழார் திருமணத்திற்கு முன் காதலர்களே ஆயினும் தொட்டுப்பேசுதல் தமிழர் பண்பாடாகாது என்ற குறிப்பையும்

அமைத்துப்பாடியிருப்பதாகக் கூறிய டாக்டர் செல்வ கணபதி.

''வாளரவு தீண்டவுந்தான் தீண்ட
கில்லாள்''

(திருஞானசம்பந்தர் 474)

என்ற சேக்கிழார் வாக்கை எடுத்துக்காட்டி விளக்கினார். இரவில் தனி வழியில் வந்த போதும் இருவரும் தீண்டிக்கொள்ளவில்லை. காதலன் இறந்து கிடக்கும்போதும் திருமணம் ஆகாத காரணத்தால் அவள், அவனைத் தீண்டி அழ முடியவில்லை என்று டாக்டர் செல்வ கணபதி உரைத்த தமிழர் பண்பாட்டின் சிறப்பு அவையினரை பெருமிதம் கொள்ளவைத்தது.

திருஞானசம்பந்தருக்கு மணம் முடித்துக் கொடுப்பதற்கென்றே திருமயிலையில் வாழ் திருந்த சிவநேசர் ''பூம்பாவை'' என்ற பெண் மகவைப் பெற்று வளர்த்துவந்தார். பூம்பாவைக்குப் ஏழாண்டு ஆகும் பருவத்தில் எதிர்பாராவிதமாகப் பாம்பு கடித்து அவள் மாண்டு போகிறாள். பூம்பாவையைப் பாம்புக்குப்பலி கொடுத்துவிட்ட பெற்றோர்கள் அவளுடலை எரித்ததனால் கிடைத்த எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் இட்டு வைத்துத் திருஞானசம்பந்தர் திருமயிலை வந்த போது காட்டுகிறார்கள். ''மட்டிட்டபுன்னையங்கானல் மட மயிலை'' எனத் தொடங்கும் பதிகம், திருஞானசம்பந்தர் பாட உலகோர் எல்லாம் கண்டு வியக்கும் வண்ணம் பூம்பாவை உயிர்பெற்று எழுந்துவிடுகிறாள். பூம்பாவையைத் திருஞானசம்பந்தரே மணங் கொள்ளவேண்டுமென சிவநேசர் வேண்ட

''மற்றவர் தமக்குதண் புகலி வாணர்நீர்
பெற்றபெண் விடத்தினால் வீந்த
பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
உற்பவித் தலால் உரை தகாது.

(திருஞானசம்பந்தர் 1114)

எனத் திருஞானசம்பந்தர் எடுத்துரைத்த தமிழர்ப்பண்பாட்டுச்சிறப்பையும் போற்றியுரைத்தார் டாக்டர் செல்வ கணபதி. மேலும் ஏயர் கோன் கலிக்காம நாயனார், சிறுத்தொண்ட நாயனார், அப்பூதியடிகள் நாயனார் வரலாறுகளில் அமைந்திருந்த தமிழர்ப் பண்பாட்டுச் சிறப்பினையும் விளக்கிய அவர் ''அரசு கொண்டாடும் இச்சேக்கிழார் விழா சமயத்துக்குச் செய்யும் விழா அல்ல. தமிழ்ப்பண்பாட்டிற்குச் சூட்டும் மகுடம்'' என்று வாழ்த்தித் தம் உரையை முடித்துக்கொண்டார்.

அடுத்துச் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் சேக்கிழார் விழாவை எந்த அடிப்படையில் தமிழக அரசு கொண்டாடிக் கொண்டிருக்கிறதென்பதைத் தமக்கு டாக்டர் செல்வ கணபதியின் உரை விளக்கிவிட்டதாகக் குறிப்பிட்டு மேலும் பேசுகையில் 4253 பாடல்களைக் கொண்ட பெரிய புராணத்தில் திருஞானசம்பந்த நாயனாருக்கு மட்டுமே 1256 பாடல்களைச் சேக்கிழார் பாடியிருக்க என்ன காரணமாக இருக்கும் என்பதை ஆராய்ந்தார். ''திருஞானசம்பந்தருக்கு மட்டும் என்ன காரணத்தினால் அவ்வளவு சிறப்பு? அவர் ஞானப்பாலை உண்டார் என்பதனாலா? சமணரை வென்றார் என்பதனாலா? 16 வயதிற்குள்ளாகவே அரிய பெரிய சாதனைகளை செய்தார் என்பதனாலா? மற்ற 62 நாயன்மார்களுக்குமாகச் சேர்த்து 2997 பாடல்கள்; திருஞானசம்பந்தர் ஒருவருக்கு மட்டுமே 1256 பாடல்கள், இது எதனால்?'' என்று வினவிய பேராசிரியர் அதற்கான விடையையும் தம் ஆராய்ச்சிஅறிவோடு எடுத்துரைத்தார்.

திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களில் தற்போது கிட்டுவன 385 பதிகங்கள்; பதிகத்திற்குப் பதிகம் தன்னைத் தமிழன், தமிழன் என்று அவர் புகழ்ந்து கொள்ளும் தன்மையினாலே தான் ''தமிழ் ஞானசம்பந்தன்'' எனத் தமிழுடன் தம்மை இணைத்துக்கொண்டுவிட்ட சிறப்பினாலேதான் அவர் ஒருவருக்கு மட்டும் அதிகப்பாடல்களை-1256 பாடல்களைத் தந்து சேக்கிழார் பாடியிருக்கிறார் எனப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் விளக்கியுரைத்த போது அவையினர் கரவோலி எழுப்பி வரவேற்றனர்.

பெரிய புராணத்தில் ஐயர் என்ற சொல்லாட்சி ஐந்து இடங்களில் மட்டுமே வருவதை காட்டிய பேராசிரியர் அவையும் கூட ஹரிஜன நாயன்மாரைக் குறிப்பிடத்தான் சேக்கிழாரால் ஆளப்பட்டிருக்கின்றன என்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணரை ஐயர் என மூன்று முறையும் திருநாளைப்போவாரை ஐயர் என இரண்டு முறையும் சேக்கிழார் குறித்திருப்பது குலத்தால் சிறுமை இல்லை என்ற பெரிய புராணத்தின் பெரிய தத்துவத்தை விளக்கும் என்றார் அ.ச. ஞானசம்பந்தம்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தலயாத்திரை சென்றது இறைவனை வணங்க மட்டுமல்ல, மக்களைச் சந்தித்து அவர்களுக்குத் தொண்டு புரியத்தான் என்ற பேராசிரியர் அ.ச ஞானசம்பந்தம், ''சீர்காழியில் இருக்கும் சிவன் வேறு, சிதம்பரத்தில் இருக்கும் சிவன் வேறா? இருவரும் ஒருவரேதான். இந்தத்தத்துவம் தேவாரம் பாடிய மூவருக்கும் தெரியாதா? தெரியும். இருந்தாலும் மக்களுக்குத் தொண்டாற்றும் பொருட்டே தலம் தலமாக தலயாத்திரை மேற்கொண்டார்கள். பெரிய புராணக் காப்பியத்தின் தலைவர் சுந்தர மூர்த்திகள்

அல்ல. தொண்டு என்ற பண்பே பெரிய புரா ணத்தின் தலைவர். பண்பினைத் தலைமைப் படுத்திப்பாடுவது பாசவதைப்பரணி, அஞ்ஞ வதைப் பரணி முதலான பல இலக்கியங்களி லும் காணப்படுவது தான்'' என்று எடுத்துரைத் தார்.

உழவாரப்படைகொண்டு உடலினால் தொண்டு புரிந்தமையால் தான் திருநாவுக்கரச ருக்கு வாசியில்லாத காசு தந்தார் திருவீழிமிழ லையார் என்ற பேராசிரியர் அ.ச.ஞானசம்பந் தம், ''திருமுறைகளைப் பூமாலை போட்டுப் பூசைப் பொருளாக்கிப் பூட்டிவைத்துவிடக் கூடாது'' என்று கேட்டுக்கொண்டதோடு ''சேக்கிழாருக்குக் கட்டப்படும் மண்டபங்களும் வெளவால்கள் குடியிருக்கும் கோட்டங்கள் ஆகிவிடக்கூடா'' தெனக் கூறித் தம் உரையை முடித்துக் கொண்டார். அவரை அடுத்துப் பேசிய சட்ட மேலவைத் தலைவர் மாண்பு மிகு டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்கள் தம் தலைமையுரையில் அவருக்கே உரிய சொற்றிறத் தோடு அரிய பல கருத்துக்களை வெளியிட்டார் கள். ''நம்முடைய அறநிலையத்துறையின் அமைச்சர் பகுத்தறிவுப் பாசறையின் வழி வந்த வர்கள். பெரிய சோழ சாம்ராஜ்ஜியத்தின் முத லமைச்சராக இருந்தவர்களுக்கு-சைவம் வளரத் தமிழ் வளர அமைச்சர் பதவியையே துறந்த சேக்கிழார் பெருமானுக்கு நம் அமைச்சர் முன் நின்று விழா எடுக்கிறாரென்றால், வரலாறு சரியான திசையில் தான் திரும்பியிருக்கிறது'' என்று கூறித் தம் பேச்சைத் தொடங்கிய சிலம் புச்செல்வரின் முழுஉரையும் தனிக்கட்டுரை யாகவே தரப்பட்டிருப்பதைவாசகர்கள் படித்து மகிழலாம்.

இறுதியாக சேக்கிழார் விழாவில் சிறப் புரையாற்றிச்சிறப்பினைச் சேர்த்தவர் சேக் கிழார் விழாவிற்கே மூலகாரணமாகிய நம் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்கள். அவருடைய பேச்சில் தமக்குமுன் பேசிய அனைவருடைய பேச்சை யும் தொட்டு காட்டும் பாங்கு இருக்கும். அரசு விழாவின் பயன்கள் அறியாமையில் உழலும் பாமர மனிதருக்கும் போய் சேரவேண்டும் என்ற வேகம் இருக்கும். ஆன்றோர்கள் இன்ன பணி செய்தாக வேண்டும் என்று அறிவிக்கும் வன்மை இருக்கும். மொத்தத்தில் உண்மையின் பிழிவாக அவருடைய உள்ளத்திலிருந்து பீறிட்டு வரும் பேச்சு அவையினர் நெஞ்சை எல்லாம் கொள்ளை கொள்ளும். அவருடைய ஆற்றல் மிக்க பேச்சினையும் ''திருக்கோயில்' வாசகர் களுக்காக முதற் கட்டுரையாக வெளியிட்டிருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

இறுதியாக நன்றிகூறி விழாவை நிறைவு செய்தவர் திருமயிலை கபாலீசுவரர் ஆலயத் தின் தக்கார் குப்புசாமி முதலியார், அவர் தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவை முன் னின்று நடத்திய மாண்புமிகு அமைச்சருக்கும் அறநிலையத்துறையின் ஆணையர் மற்றும் பிற உயர் அதிகாரிகளுக்கும் தம்முடைய சொந்தச் செலவில் பொன்னாடைகள் வாங்கி அணி வித்துச் சிறப்பினைச் செய்ததும் இங்கே குறிப் பிடவேண்டிய ஒன்றாகும். நிறைவு விழா நிகழ்ச்சிக்கு முன்பாக மாலை 5 மணி அளவில் சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறையைச் சார்ந்த செல்வி பிரேமா அவர்களின் இன்னிசை கச்சேரி நடைபெற்றது. நிறைவு விழா விற்குப்பின் ''இராஜராஜேஸ்வர விஜயம்'' என்ற நாட்டிய நாடகமும் சிறப்பாக நடைபெற்றது.

''உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'' *(394)*

என்பர் வள்ளுவப்பெருந்தகை! சேக்கிழார் விழா நிறைவு பெற்றபோதும் இனி இப்படி யொரு சிறந்த விழா நிகழ்ச்சியை மறுபடியும் எப்பொழுது காணப்போகிறோம் என்ற ஏக்கமே எல்லோருடைய நெஞ்சிலும் நிறைந்திருந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

**

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்தம் பாகத்தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

—ஔவையார்

பழநிப் பாமலர்

டாக்டர் த. அமிர்தலிங்கம்

விநாயகர் வணக்கம்

பழமுணக் கொண்டு தம்பி
பாலனை ஆண்டி யாக்கிப்
பழமுநீ ஆனாய் என்றே
பார்புகழ் குன்றம் சேர்த்தாய்
பழவினை மாற்றப் பத்தர்
போற்றிடும் விக்கி னேசா!
பழநிமா மலைமேல் பாடும்
பாமலர் காத்தல் கேட்டேன் 1

நூல்

அமைச்சராய் அவனி ஆளும்
அன்பறி வடக்கம் யாவும்
அமையவே பெறினும் நன்றாய்
அருட்பணிக் கிடையூ றென்றே
உமையவள் மைந்தா வேண்டேன்
ஓங்கிடும் பழநிக் குன்றம்
உமைநனிப் புரக்கும் கோயிற்
தொண்டனாய் செய்யக் கேட்டேன் 2

திருவேங்கட மலையில் தாம் இன்ன இன்ன ஆகவேண்டுமெனக் குலசேகராழ்வார் ''பெருமாள் திருமொழி''யில் பாடியிருப்பதைப் போலவே பழநிமாமலையில் தாம் இன்ன இன்ன ஆகவேண்டுமெனப் ''பழநிப் பாமலரில்'' தம் விருப்பத்தைத் தெரிவித்துப் பாடியிருக்கிறார் ஆசிரியர். செய்யும் தொழிலாலும் சேர்ந்த இனத்தாலும் பக்தருக்குள் வேற்றுமை ஒன்றும் இல்லை என்பதை இப் பழநிப் பாமலர் விளக்கு வதைப் படிப்போர் நன்கு உணர்வர்.

திருத்தலம் காணும் வேட்கை
தூண்டவே வருவார் அன்பர்
அருமையாய்ப் பேணி வண்டி
ஆர்வமாய் ஓட்டி உன்றன்
பெருமையாம் புகழ்க்கோர் ஊறு
புரிந்திடா வண்ணம் சேர்க்கும்
திருப்பணிக்(கு) ஆவல் கொண்டே
திருமகள் மருகா கேட்டேன் 3

பாடியே தோளில் தூக்கிக்
காவடி ஆட்டம் ஆடித்
தேடியே வந்துன் பாதம்
தரிசனம் செய்வார் கோரும்
சூடமும் பழமும் தேங்காய்
சூதினில் விற்றல் இன்றிக்
கூடுநல் விலையே கூறிக்
கொடுத்திடும் பணியும் கேட்டேன். 4

அத்தனும் அன்னை மற்றும்
அன்புற வாகும் வேலோய்!
சித்தரும் தேவர் நாளும்
சூழ்தரும் பழநிக் குன்றில்
பத்தியை ஊட்டும் நல்ல
புத்தியைக் கூட்டும் உன்றன்
புத்தகம் பலவும் விற்றென்
பொழுதெலாம் போற்றல் கேட்டேன் 5

உயிரினைக் காக்கும் உன்றன்
உயர்மலை வேண்டி வந்து
மயிரினை மழித்து உன்போல்
மொட்டையாய் கோலம் கொள்ளும்
செயிரறு அடியார் தம்மைச்
சேர்ந்துவோர் வம்பும் இன்றி
மயிர்மழி வினையும் செய்ய
மன்னவா கேட்டேன் ஆணை! 6

அன்பெனும் வெள்ளம் ஆடி
ஐயநின் வாசல் வந்து
தன்னுணர் வொன்று மின்றித்
தலையவாய் கையுந் தூக்கி
முன்பினும் அறியா ராகி
மயங்குவார் வரிசை ஆக்கி
இன்மொழி காவல் செய்ய
ஈன்றவா கேட்டேன் கேட்டேன் 7

கண்டலால் நீரும் உண்ணாக்
கொள்கையர் எழிலார் கோலம்
உண்டபின் பசியை ஓர்ந்து
உண்ணிடம் விழைவார் அங்குக்
கண்டிடும் குப்பைக் கூளம்
கூட்டியே சுத்தம் செய்யும்
தொண்டுமே தூயா! வேலா!
தொழுதுநான் கேட்டேன் ஐயா! 8

உடைமையோர் கோடி வேண்டும்
ஊரள வாசை இல்லேன்
கடனெனக் கையை நீட்டும்
கடைநிலை வாழ்வும் வேண்டேன்
தடைசிறி தின்றி நாளும்
தன்னிக ரில்லாக் குன்றில்
அடைந்தவர்க்(கு) அன்னம் ஊட்டும்
அறப்பணி செய்யக் கேட்டேன் 9

நாற்புரம் கதவை மூடி
நடுவொரு தூணில் கட்டிச்
சீறிடும் தீயும் இட்டால்
சிறியனேன் என்தான் செய்வேன்?
வேறொரு பணியும் இன்றி
வேலநின் குன்றில் தங்கி
ஆறருள் முகங்கள் கண்டு
அனுதினம் வாழ்த்தல் கேட்டேன் 10

குனிந்தபோ தென்னைக் குட்டிக்
குனியவே வைப்பார் பின்யான்
துணிந்தபோ தென்னை வெட்டித்
தூக்கவே பார்ப்பார் வெட்சி
அணிந்தவேல் ஐயா ஞாலம்
அடியனேற் காகா தென்றே
கணித்துவுன் குன்றும் கேட்டேன்
கருணையால் காத்தல் செய்வாய் 11

தாலியைக் கட்டிக் கொண்ட
தாரமாய் உழைத்த பின்னும்
போலியாய் வாழும் பாவப்
பேரினால் போரைக் கண்டேன்
வேலுடன் நிற்கும் வெற்றி
வேந்தநின் பழநி வந்து
காலுடன் தலையைச் சேர்த்துக்
கவலையை மறத்தல் கேட்டேன் 12

எல்லையோ இல்லை துன்பம்
எதிர்எதிர் வந்து நிற்க
வெல்லவோ முடிதல் இல்லை
வேறிடம் தள்ளல் இல்லை
பல்லெலாம் போன பின்போ
பழநியில் சேர்த்தல் செய்வாய்
சொல்லரும் கருணைச் செவ்வேள்!
சோர்ந்தனன் காத்தல் கேட்டேன் 13

ஐம்பொறிக் கடிமை ஆகி
அபலையின் உடமை ஆகி
வம்பராம் மக்கள் பெற்று
வாடலே கடமை ஆகி
இம்பர்யான் காணும் துன்பம்
இம்மியும் அறிந்தி ராயோ?
எம்மலை உற்றாய் ஐயா!
எழில்மலை பழநி கேட்டேன் 14

கனவுகொல்? வாழ்வும் இங்குக்
கானலின் நீருந் தான்கொல்?
நினைவன நொடியில் மாறி
நிகழ்வன வேறு ஆக
அனலினுள் புரண்டு அந்தோ
அலறிநான் துடிக்கின் றேனே!
எனைஉன தோங்கும் குன்றில்
என்றுமே காத்தல் கேட்டேன் 15

வையமாம் வாழ்வில் பாழும்
வயிற்றினைக் காக்க வாடிப்
பொய்யுடல் உண்மை பார்த்துப்
புரிந்தனன் பழநி வேலோய்!
மெய்யுளாய் நின்னை யன்றி
மெய்யிதும் வேண்டேன். வேண்டேன்
துய்யநின் கோயிற் சுற்றித்
தினம்வலம் வருதல் கேட்டேன் 16

உருண்டு'ஓம்' வேல்வேல் என்னும்
உயர்மொழி நாவில் ஊறி
உரைத்துயர் பழநிக் குன்றில்
உவகையால் உள்ளம் மீறிச்
சிரித்துப்பின் விழிகள் வாரச்
சிறிதுநான் அழுதும் அன்பால்
கரைந்திரு கைகள் கூப்பிக்
கந்தனே! வணங்கக் கேட்டேன் 17

ஒருநொடி பிரியின் ஐயா
உயிர்உடல் பறந்து போகும்
திருவடி தலையில் தாங்கித்
தினமுனைத் தொழுதல் கேட்டேன்
அருள்வடி வேலோய் வாழும்
அழகுயர் பழநிக் குன்றில்
தரும்படி சிறியேன் வேண்டும்
திருவரம் கேட்டல் செய்வாய் 18

எத்தனைக் காலம் செய்த
ஏற்றமோ திருமுன் நின்று
பத்தனாய் உருகிப் பாடிப்
பதமலர் பார்த்த பின்னால்
சொத்தெதும் வேண்டேன் வேறு
சுகமெதும் வேண்டேன் வேண்டேன்
நித்தமுன் உருவே காட்டும்
ஆடியாய் ஆதல் கேட்டேன் 19

எட்டவே இருந்து கண்கள்
கொட்டுதல் இன்றிக் கண்டும்
மட்டிலாக் கடலாம் ஆசை
மாறிடா தாத லாலே
சுட்டதாம் பொன்னாம் சோதிச்
சுடரென ஒளிரும் மேனிப்
பட்டிடும் நீறாய் ஆதல்
பழநிவாழ் பேறே கேட்டேன் 20

கமகம வெனமணக்கும்
சந்தன மொடுபந் நீரும்
தமதம துளம்போல் தொண்டர்
தந்திடும் தயிரும் பாலும்
அம்பிகை பாலா! ஆகி
அங்கமே தழுவக் கேட்டேன்
அமுதென இனிக்கும் பஞ்சா
அமிர்தமும் ஆதல் கேட்டேன் 21

பணமுடை கண்டு வந்து
பணியினை வேண்டு வார்க்கும்
மணவினை செய்து நல்ல
மகவினை வேண்டு வார்க்கும்
கிணிகிணி எனமு ழங்கிக்
குமரநின் பெருமை கூறும்
மணியென வாகி வாட்டும்
மனத்துயர் மாற்றல் கேட்டேன் 22

அன்பினால் சூழும் கூட்டம்
அரகரா ஓம்ஓம் என்ன
நன்றினி விளைவ தெல்லாம்
நலமலால் வேறென் என்ன
கன்றிடும் அடியார்க் குண்டே
கந்தநின் பாதம் என்னப்
பொன்திருத் தேரில் பூட்டும்
பரிகளாய் ஆதல் கேட்டேன் 23

வளிகனல் நிலமும் நீரும்
வானமும் ஆனோய் வேலா
தளிர்க்கரம் நீட்டி வண்டும்
தேனுணப் பூத்துத் தொண்டர்
களித்தமர்ந் திளைப்பும் ஆறக்
கடும்பகல் போதில் நானே
குளிர்மரக் குடையும் ஆதல்
குன்றினில் கேட்டேன் கேட்டேன் 24

அறமனஆன்றோர் ஈயும்
அளவிலாச் செல்வம் யாவும்
மறமன மாந்தர்க் கூட்டும்
முத்தமிழ்க் கல்விக் காகும்
திறமிதைத் தெரிந்து கொண்டேன்
திருடரை அணுக வொட்டா
உறுதியில் சிறந்த உண்டி
ஆதலும் கேட்டேன் கேட்டேன் 25

கங்கைதன்ய ஒத்து ஞாலம்
காத்திடும் கருணை யாறாம்
தங்கைசண் முகமு மாகிச்
சரவணப் பொய்கை ஆகி
முங்கியே அன்பர் மூழ்கி
முருகநின் பெருமை போற்றப்
பொங்கிடும் அன்பில் கேட்டேன்
புனிதனே காத்தல் செய்வாய் 26

பாவியாய் வாழ்ந்து பின்னும்
பரமநின் பெருமை ஓர்ந்து
ஆவியைக் காப்பான் வேண்டி
அழகமர் குன்றம் வந்து
சேவடி சார்வார் வாழ்வும்
செயம்செயம் என்றே கூவும்
சேவலும் ஆதல் செவ்வேள்
செந்திலே கேட்டேன் கேட்டேன் 27

தயவினோய் வாழும் எல்லை
தர்மமும் வாடக் கண்டால்
புயலெனச் சீறி விண்ணில்
பறந்துநீ பாவம் வெல்ல
மயிலென மாறல் கேட்டேன்
மறுத்திடல் முறையா காதே
அயலவர்க் கருளிச் செய்தோய்
அடியனேற் கருளக் கேட்டேன் 28

கல்லென ஆதல் உண்டேல்
குமரநின மன்றில் கேட்டேன்
புல்லெனப் போதல் உண்டேல்
பேரருள் குன்றில் கேட்டேன்
சொல்லிய ஒன்றும் ஆகும்
செய்தவம் இல்லே னாகில்
புல்லிய பேயும் ஆகிப்
பழநியே சுற்றல் கேட்டேன் 29

அன்றுளாய் இன்றும் உள்ளாய்
என்றுமே உள்ளாய் நின்பால்
ஒன்றினிப் பேசேன் வார்த்தை
ஓரிணை இல்லா வேலோய்!
கன்றுநான் காக்கா விட்டால்
காலடி விடுதல் செய்யேன்
நின்னுடன் நீயே யாகி
ஒன்றுதல் கேட்டேன் கேட்டேன் 30

ஓம் சரவண பவாய நம ஓம்
ஓம் சண்முக குகாய நம ஓம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவின் முதல் நாள் மாலை நிகழ்ச்சிக்கு வருகைப் புரிந்த ஆதீனகர்த்தர்களுடன் மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பனார் அமர்ந்திருக்கும் காட்சி.

பதிவு எண். எம் 7039